பல்கலைக்கழக மானியக்குழு (UGC) அங்கீகாரம் பெற்ற மாதஇதழ்
New Centurian Ungal Noolagam ISSN 2394-7535-132

நியூ செஞ்சுரியின்

# உங்கள் நூலகம்

மாத இதழ்

New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)

| மலர் : 19<br>Vol : 19 | இதழ் : 02<br>Issue : 02 | www.ncbhpublisher.in | மே 2026<br>May 2026 | விலை<br>Price | ₹ 45/- | ஆண்டு சந்தா<br>Annual Subscription | ₹ 540/- |
|---|---|---|---|---|---|---|---|


## கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்!







4.3.2026 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் ஆக்கங்களை எளிய தமிழில் மக்கள் பதிப்பாக மொழிபெயர்த்து மூன்றாம் கட்டமாக 73 (தொகுதி 28 முதல் 100 வரை) தொகுதிகளை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் திரு.நா. முருகானந்தம், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு. வே. ராஜாராமன் இ.ஆ.ப, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள், வல்லுநர் குழு உறுப்பினர்கள் - புலவர் செந்தலை ந.கவுதமன், பேராசிரியர் வீ. அரசு, முனைவர் மு. வளர்மதி, திரு. அ.மதிவாணன், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் விற்பனை பொது மேலாளர் ஆ.சிவக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் ஜெயசீல ஸ்டீபன் அவர்களின் புதிய வெளியீடுகள்




₹ 100/-




₹ 165/-




₹ 250/-




கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

திருவள்ளுவராண்டு 2057

மலர் - 19 இதழ் - 02 - மே 2026

ஆசிரியர்

**த. ஸ்டாலின் குணசேகரன்**

ஆசிரியர் குழு
க. சந்தானம்
பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன்
முனைவர் ச. சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந. முத்துமோகன்
முனைவர் மு. இராமசுவாமி
முனைவர் நா. இராமச்சந்திரன்
முனைவர் பா. ஆனந்தகுமார்
முனைவர் ஞா. ஸ்டீபன்
ப. கு. ராஜன்
முனைவர் இரா. அறவேந்தன்
முனைவர் இரா. காமராசு
முனைவர் உ. அலிபாவா

இதழ் வடிவமைப்பு
**கா. குணசேகரன்**

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail. com
இணைய தள முகவரி: www. ncbhpublisher. in

தனி இதழ் ₹ 45. 00. ஆண்டு சந்தா ₹ 540. 00
மாணவர்களுக்கு ₹ 500. 00
ஆயுள் சந்தா ₹ 5400. 00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050. 00

சந்தா தொகையை
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch. Chennai - 600 050
A/c. No. 1035249018
IFSC Code : CBIN0282161
என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.

---

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**ஆசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**



1 கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்!
ஆசிரியர் குழு ........ 04

2 உழைக்கும் மக்களின் விடுதலைக்கு வழிகாட்டி
மா.சிவகுமார் ........ 06

3 அரசமைப்புக் கருத்துநிலை உருவாக்கம்: அண்ணல் அம்பேத்கர் நிகழ்த்திய உரையாடல்கள்
வீ.அரசு ........ 10

4 சிங்கப்பூர் நிகழ்வுகளும் நினைவுகளும்
த. ஸ்டாலின் குணசேகரன் ........ 21

5 கலகத்தை நிகழ்த்தும் கவிதைகள்
ந.முருகேசபாண்டியன் ........ 27

6 மகாகவி பாரதிக்குப் பின்
முனைவர் சொ.சேதுபதி ........ 31

7 திருமுருகாற்றுப்படை பெரியபுராணம் பிறமொழி இலக்கியங்கள்
இரா. அறவேந்தன் ........ 36

8 மாக்சிம் கார்க்கி: அன்னையிட்ட அணையா நெருப்பு!
பாரதிபாலன் ........ 41

9 ஓர் ஓவியனின் ஓவியமான வாழ்வு!
சா. ஜெயராஜ் ........ 46

10 காலனியத்தால் வஞ்சிக்கப்பட்ட ஓர் உழைக்கும் சமூகத்தின் சுயசரிதை
பிடல்காஸ்ட்ரோ மு........ 50

11 கலைச் சொற்களுக்குள் ஒளிந்திருக்கும் நுண் அரசியல்
முனைவர் சி. மகேசுவரன் ........ 55

12 இலக்கியப் பணி என்பது சமூகத்துக்கு ஆற்றும் தொண்டு
சி.பாலையா ........ 60

13 உலகத்துக்கே தொண்டாற்றும் கியூபா!
சு.இராமசுப்பிரமணியன் ........ 65

14 கலைஞர்களுக்கு வருமானமும் போச்சு! மரியாதையும் போச்சு!!
பா.சாயாதேவி & முனைவர் து. வேணி........ 69

15 Division of Labour among Capitalists
M.S.Kumar ........ 72



தலையங்கம்

# கெட்ட போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்!

'ஈரான் முழுமையாக அழிய இருக்கிறது. அதன் உள்கட்டமைப்புகளை ஒருபோதும் மீண்டும் சீரமைக்க முடியாது' என்று ஏப்ரல் முதல் வாரம் ஈரானுக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் எச்சரிக்கை விடுத்தார்.

முன்னதாக, ஹோர்முஸ் தீவினைத் திறக்கவும், அமெரிக்காவுடன் போர்நிறுத்தம் செய்து கொள்ளவும் ஈரானுக்குப் பத்து நாட்கள் அவகாசம் அளிப்பதாக டிரம்ப் அறிவித்தார். அதன்பிறகு, இறுதியாக 48 மணி நேரம் எஞ்சியிருப்பதாகக் கூறினார். அவரின் நிபந்தனைகளை ஏற்காவிட்டால், "ஈரான் நரகத்திற்குச் செல்ல வேண்டியிருக்கும்" என்று உச்சகட்ட ஆணவத்துடன் உலகிற்கு அறிவித்தார். 'ஒரு முழு நாகரிகமும் இன்று இரவு அழிய இருக்கிறது. அது ஒரு போதும் திரும்பாது' என்று தனது சமூக ஊடகத்தில் பதிவிட்டார்.

ஈரானின் மின்னுற்பத்தி நிலையங்கள், பாலங்கள், குடிமக்களுக்கான உள்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட அந்த நாட்டின் மிகவும் கேந்திரமான பகுதிகளை நிர்மூலமாக்குவதே அமெரிக்காவின் திட்டமாக உள்ளது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அவர் நாட்டில் அந்நாட்டு மக்கள் வாக்களித்து ஆட்சிக்கு வந்தது போல், பிற நாடுகளுக்கு என்று தனித்தனியான ஆட்சி உள்ளது, அவ்வவற்றுக்கு என வரையறுக்கப்பட்ட சட்டங்களும் நியாயங்களும் உள்ளன, அந்தந்த நாட்டிற்கென தனி இறையாண்மையுள்ளது என்பதையெல்லாம் குழி தோண்டிப் புதைத்து விட்டு. தானே உலகத்தின் சர்வ அதிகாரம் மிக்க ஆட்சியாளரைப் போல் எக்களிப்புத் தாண்டவமாடுகிறார்.

அவர் பயன்படுத்தும் சொல்லாடல்கள் யாவும் ஜனநாயக மாண்புகளுக்கு விரோதமானவை என்பதோடு அடிப்படை மனிதப் பண்புகளுக்கே எதிரானவை என்பதை நடுநிலையாளர்களும் நல்லவர்களும் உணர்ந்துள்ளனர்.

2026 பிப்ரவரி 28ஆம் தேதி ஈரான் மீது இஸ்ரேல் – அமெரிக்க வான்வழித் தாக்குதலில் கொல்லப்பட்டவர் அலி ஓ செய்னி காமெனி. இவர் ஈரானின் உயர் அதிகாரம் படைத்த ஆன்மீகம் மற்றும் அரசியல் அதியுயர் தலைவராகப் பல்லாண்டுகள் பதவி வகித்தவர். இவரைத் திட்டமிட்டுக் கொன்று முடித்தனர்.

அதற்கும் முன்னதாக, கடந்த ஜனவரி 3ஆம் தேதி அமெரிக்கா வெனிசுவேலா நாட்டின் மீது தொடர்ச்சியான அதிரடி வான்வழித் தாக்குதலை நடத்தி, அந்நாட்டின் அரசுத் தலைவரான நிக்கோலஸ் மதுரோவும் அவரது மனைவி சிலியா புளோரசும் அமெரிக்கப் படைகளால் கைது செய்யப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் அந்நாட்டு நேரப்படி அதிகாலை இரண்டு மணிக்குத் தொடங்கியது. இத்தாக்குதலில் 150க்கும் மேற்பட்ட அதிநவீனப் போர் விமானங்கள் பயன்படுத்தப்பட்டன. கைது செய்யப்பட்ட தலைவரும், அவருடைய மனைவியும் அமெரிக்க நாட்டின் நியூயார்க் நகருக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

வெனிசுவேலா நாட்டிலிருந்து போதைப் பொருள் கடத்தப்படுவதைத் தடுக்கத் தவறிய குற்றமும், உள்நாட்டில் பயங்கர வாதத்தைக் கட்டுப்படுத்தத் தவறிய குற்றமும் அவர்கள் மீது சுமத்தப்பட்டன.

அமெரிக்க அதிபரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர். வெனிசுவேலா தலைவரும் அந்நாட்டு மக்களால் வாக்களித்துத் தேர்வு செய்யப்பட்டவர். அப்படியிருக்க, இரவோடு இரவாக இன்னொரு நாட்டிற்குள் அத்துமீறி நுழைந்து அந்நாட்டின் தலைவரை அவரது மனைவியுடன் கைது செய்ய எந்தச் சட்டம் அனுமதிக்கிறது?

அமெரிக்கத் தாக்குதலின் சட்டபூர்வமான தன்மையை அந்நாட்டு அதிகாரிகள் பலரே கேள்விக்கு உள்ளாக்குகின்றனர். ஐ.நா.வின் பொதுச் செயலாளர் அந்தோனியோ குத்தேரசு அமெரிக்கத் தாக்குதலை 'ஓர் ஆபத்தான முன்னுதாரணம்' என்றார். பன்னாட்டுச் சட்டத்தைக் (International Law) கடைபிடிக்குமாறு வலியுறுத்தினார். போதைப்பொருட்கள் அமெரிக்காவுக்குள் வெனிசுவேலா நாட்டிலிருந்து கடத்தப்படுவது உண்மையானால், அதைத் தன் நாட்டின் எல்லைக்குள் நுழையாமல் தடுத்து நிறுத்த வேண்டியது அமெரிக்க அரசின் கடமை. அவ்வாறு தன்னால் இயலவில்லையெனில், தான் ராஜினாமா செய்வதை விட்டுவிட்டு, அடுத்த நாட்டின் தலைவரைக் கைது செய்யும் அதிகாரம் எங்கிருந்து வந்தது?

வெனிசுவேலா நாட்டின் எண்ணெய் வளத்தின் மீது கண்வைப்பதையும், பிற நாட்டை ஆதிக்கம் செய்வதையும், அடிமைப்படுத்துவதையும், மிரட்டுவதையும் தனது அன்றாடப் பணிகளாகக் கொண்டு இயங்குபவர் அமெரிக்க அதிபர் டிரம்ப்.

இத்தகைய வரலாற்று வன்மங்களின் தொடர்ச்சிதான் ஈரான் தலைவர்களைத் கொன்றதும், ஈரானையே இருக்கும் இடம் தெரியாமல் ஆக்குவேன் என்பது போன்ற கொக்கரிப்புகளும்.

அமெரிக்காவெங்கும் டிரம்பின் போர்வெறிக்கெதிராக மக்கள் வெள்ளமெனத் திரண்டு அறப்போர் நடத்துகின்றனர். அமெரிக்க முக்கிய அரசியலாளர்கள் பலர் அமெரிக்காவை உலக அரங்கில் தலைகுனிய வைக்கும் டிரம்பின் போர் வெறியை வன்மையாகக் கண்டிக்கின்றனர். இத்தாலி, பிரிட்டன் தலைநகர் லண்டன், பிரான்ஸ் தலைநகர் பாரீஸ், உள்ளிட்ட உலகின் பெரு நகரங்களில் வாழும் அமெரிக்கர்களும் அந்தந்த நாட்டவரும் டிரம்புக்கு எதிராக ஆர்ப்பரிக்கின்றனர்.



உலகின் எந்தப் பிரச்சினைக்கும் பேச்சுவார்த்தைகளில் தீர்வு உள்ளது. இனிவரும் போர்கள் எவையும் இதற்கு முன்பு வந்த போர்களைப் போல இருக்காது. ஒரு கட்டத்தில் மனிதனே நினைத்தாலும் கட்டுப்படுத்தி நிறுத்திவிடமுடியாத அளவுக்கான அழிவைத் தருவன - அறிவியலும் தொழில்நுட்பமும் வளர்ந்துள்ள காலகட்டத்தில் நடைபெறும் இக்காலப் போர்கள்.

‘கெட்ட போரிடும் உலகினை வேரொடு சாய்ப்போம்’ என்ற பாவேந்தர் பாரதிதாசனின் வரிதான் இன்றைய உலகப் பதாகையாக உயர்த்தப்பட வேண்டும்.

சமூகப் பொறுப்பும், சர்வதேசச் சிந்தனையும், தேசிய உணர்வும், தாய்மொழிப் பற்றும், மனித நேயமும் கொண்ட ‘உங்கள் நூலகம்’ உலக அளவிலான சமாதானத் தூதுவர்களாக விளங்கும் படைப்பாளிகளோடும் படிப்பாளிகளோடும் கரம் கோர்த்து, போரற்ற உலகம் படைக்க உறுதியேற்கிறது. ஆதிக்கம் செலுத்துகிற அழிவு சக்திகளுக்கு எதிராகக் கண்டனம் செய்கிறது. களத்தில் நிற்கிறது.

**– ஆசிரியர் குழு**



> “மனிதர்கள் வரலாற்றைப் படைக்கிறார்கள், ஆனால், தாம் விரும்பியபடி வரலாற்றைப் படைப்பதில்லை, தமது கடந்த காலத்திலிருந்து தமக்கு வழங்கப்பட்ட சூழ்நிலைகளுக்குள் வரலாற்றைப் படைக்கிறார்கள்”

# உழைக்கும் மக்களின் விடுதலைக்கு வழிகாட்டி

மே 5 ஆம் நாள், கார்ல் மார்க்சின் பிறந்த நாள். அதை ஒட்டி கார்ல் மார்க்ஸ் என்ற ஆளுமையின் வளர்ச்சியைப் பற்றி சோவியத் அறிஞர் ஹென்ரி வோல்கவ் எழுதிய நூல் அறிமுகம். இது ஆங்கிலத்தில் *Birth of a Genius* என்ற பெயரிலும் தமிழில் ***மார்க்ஸ் பிறந்தார்*** என்ற பெயரிலும் கிடைக்கிறது.



**மா.சிவகுமார்**

**மார்க்ஸ் பிறந்தார்!**

இன்றைக்கு சுமார் 200 ஆண்டுகளுக்கும் முன்பாக (1818 ஆம் ஆண்டு) ஜெர்மனியின் டிரையர் நகரில் ஒரு குழந்தை பிறந்தது. அதற்கு கார்ல் என்று பெற்றோர் பெயர்சூட்டினர். அந்தக் குழந்தையின் குடும்பப் பெயர் மார்க்ஸ்.

மார்க்ஸ் தனது 50 ஆவது வயதில் (1867 ஆம் ஆண்டு) மூலதனம் என்ற மகத்தான நூலை எழுதியிருந்தார். அது உழைக்கும் மக்களின் பார்வையில் அரசியல் பொருளாதாரத்தை ஆய்வு செய்து முன்வைத்தது. அவரது காலத்திலேயே உழைக்கும் மக்களின் பாரிஸ் கம்யூன் (1871ஆம் ஆண்டு, மார்ச் 18 முதல் மே 28 வரை) உருவாகி வீழ்த்தப்பட்டது. அவர் இறந்த 34 ஆண்டுகளில் (1917) ரசியாவில் உழைக்கும் மக்களின் ஆட்சி உருவாக்கப்பட்டது. மார்க்சியம் உலக வரலாற்றை மாற்றும் ஆற்றலாக ஆனது. இன்றைக்கு மார்க்சியம் கோடிக்கணக்கான உழைக்கும் மக்களின் விடுதலைக்கு வழிகாட்டியாக இருக்கிறது.

எல்லோரையும் போல மனிதக் குழந்தையாகப் பிறந்த ஒருவர் மார்க்சியம் என்ற கருத்தியலையும், அறிவியல் சோசலிசம் என்ற அரசியலையும் வளர்த்தெடுத்த மாமேதையாக எப்படி வளர்ந்தார்?

“மனிதர்கள் வரலாற்றைப் படைக்கிறார்கள், ஆனால், தாம் விரும்பியபடி வரலாற்றைப் படைப்பதில்லை, தமது கடந்த காலத்திலிருந்து தமக்கு வழங்கப்பட்ட சூழ்நிலைகளுக்குள் வரலாற்றைப் படைக்கிறார்கள்” என்று எழுதினார் மார்க்ஸ்.[(1)]

மார்க்சுக்கு வழங்கப்பட்ட சூழ்நிலைகள் எவை? அவற்றுள் அவர் எத்தகைய வரலாற்றைப் படைத்தார்? அவரால் எதை மாற்ற முடிந்தது? எதை மாற்ற முடியாமல் போனது?

மார்க்ஸ் பிறந்த போது ஜெர்மனியின் அண்டை நாடுகளான இங்கிலாந்திலும் பிரான்சிலும் மூலதனமும் கூலி உழைப்பும் என்ற முறை வேகமாக வளர்ந்து கொண்டிருந்தது ஜெர்மனியிலும் அது பரவிக் கொண்டிருந்தது. (இன்றைக்கு அது இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் முழுவதிலும் பரவி ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ஆலைத் தொழிலாளர்கள், ஐ.டி. தொழிலாளர்கள், கிக் தொழிலாளர்கள், ஏன் மருத்துவர்கள், வழக்கறிஞர்கள் கூட கூலி முறையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளார்கள்).

1789ஆம் ஆண்டு நிகழ்ந்த பிரெஞ்சுப் புரட்சியின் தாக்கம் மார்க்ஸ் பிறந்து வளர்ந்த ரைன் பகுதியில் வலுவாக இருந்தது. கல்வியிற் சிறந்த கார்ல் மார்க்ஸ் சமூகத்தில் நிலவும் சிக்கல்களைக் கூர்மையாகப் புரிந்துகொண்டார். ஏழைகளும் உழைப்பாளிகளும் சொத்துடைமையாளர்களால் ஏமாற்றப்படுவதைக் கடுமையாக விமர்சித்தார். சொத்துடைமையாளர்களின் அரசான ஜெர்மனியின் பிற்போக்கு அரசு அவரைத் துரத்தியது. சொந்த நாட்டில் குடியிருக்கக் கூட முடியாதபடி, நாட்டை ஆண்ட பிற்போக்கு சக்திகளால் விரட்டியடிக்கப்பட்டார். அவர் புகலிடம் தேடியது முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறை முழு வளர்ச்சியடைந்திருந்த இங்கிலாந்தில்.

தனது 30ஆவது வயதில் இங்கிலாந்தில் ஏதிலியாகக் குடும்பத்துடன் குடிபெயர்ந்தார் மார்க்ஸ். அதற்கு முன்னரே மாமேதை மார்க்ஸ் பிறந்து விட்டிருந்தார். மார்க்ஸ் என்ற ஆளுமை எவ்வாறு பிறந்தது? உலகைப் புரிந்து கொள்வதற்காக மட்டுமின்றி, அதை மாற்றியமைப்பதற்குமான தனது தத்துவத்தை அவர் எவ்வாறு வளர்த்தெடுத்தார்? உலகெங்கும் உழைக்கும் மக்களுக்கான அரசியலை அவர் எவ்வாறு முன்னெடுத்தார்? அவரது இலக்கியத் திறன்கள் எந்த உலைக்களத்தில் புடம் போடப்பட்டன?

இந்தக் கேள்விகளுக்கு விடையளிக்கும் வகையில் Рождение гения *(Rozhdenie geniia)* என்ற நூல் 1968ஆம் ஆண்டு ரசிய மொழியில் வெளியிடப்பட்டது. இதனை எழுதியவர் சோவியத் மார்க்சிய அறிஞர் ஹென்ரி வோல்கவ். இந்தத் தலைப்பின் பொருள் ஒரு மேதையின் பிறப்பு.


**Генрих Волков**

**РОЖДЕНИЕ ГЕНИЯ**

**СТАНОВЛЕНИЕ ЛИЧНОСТИ И МИРОВОЗЗРЕНИЯ КАРЛА МАРКСА**

***на тамильском языке***

இந்நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு *Birth of a Genius* என்ற பெயரில் 1978ஆம் ஆண்டு மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகத்தாரால் வெளியிடப்பட்டது.




இதன் தமிழ் மொழிபெயர்ப்பு 1986ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. மார்க்சிய அறிஞரும் மொழிபெயர்ப்பாளருமான பேராசிரியர் நா. தர்மராஜன் இந்த நூலுக்கு “மார்க்ஸ் பிறந்தார்” என்ற தனித்துவமான பெயரைக் கொடுத்துள்ளார்.

“இதை 'மேதையின் பிறப்பு' என்று மொழிபெயர்ப்பதுதானே சரி என்பது... வாதம். ஆனால், மார்க்சைப் பெருமைப்படுத்தும் வகையில் கவித்துவமாக ‘மார்க்ஸ் பிறந்தார்’ எனும் தலைப்பை நான் கொடுத்திருந்தேன். அதன் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கியபோது, அப்படியே ஏற்றுக்கொண்டார்கள்.” என்கிறார், அவர்.(2)


பேராசிரியர் நா. தர்மராஜன்

இந்நூலுக்கான துணைத் தலைப்பு கார்ல் மார்க்சின் ஆளுமை மற்றும் உலகக் கண்ணோட்டத்தினுடைய வளர்ச்சியின் வரலாறு. இந்நூலில் நூலாசிரியரின் அறிமுகம்,11 இயல்கள், முடிவுரை உள்ளன.

முன்னுரையில், இந்த நூல் என்ன நோக்கத்தில் எழுதப்பட்டது என்று விளக்குகிறார் ஆசிரியர்:

“இளைஞரான மார்க்சின் தேடல்கள், சிந்தனைகள், உணர்ச்சிக் குமுறல்கள் என்ற உலகத்துக்குள், அவருடைய நெருப்பு போன்ற கருத்துகள் பரிணாம வளர்ச்சியடைந்த படைப்புத் தன்மை கொண்ட சோதனைச் சாலைக்குள் தன்னோடு வாசகரையும் அழைத்துச் செல்வதற்கு, இந்த உலகத்துக்குள் தன்னை அமிழ்த்திக் கொள்ளும்படி வாசகரை ஊக்குவிப்பதற்கு இப்புத்தகத்தின் ஆசிரியர் முயற்சி செய்திருக்கிறார். ஏனென்றால், ஒரு மேதையுடன் ஆன்மிக ரீதியில் கலந்துறவாடுவதற்கு அவருடைய தத்துவத் தேடல்களின் பாதையைப் பின்தொடர்வதைக் காட்டிலும் அதிக வளமான சாதனம் வேறில்லை.”




இளைஞரான ஒவ்வொருவருக்கும் தேடல்களும் சிந்தனைகளும் உணர்ச்சிக் குமுறல்களும் உள்ளன. மாமேதை என்று போற்றப்படும் கார்ல் மார்க்ஸ் தனது இளமைப் பருவத்தில் எத்தகைய மனப் போராட்டங்களையும் அரசியல் போராட்டங்களையும் கடந்து வந்தார் என்று கற்றுக் கொள்வது இன்றைய இளைஞர்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமைகிறது.

இந்நூலின் 11 இயல்கள் மார்க்சின் பள்ளிப் பருவம் (இயல் 2), கல்லூரி வாழ்க்கை (இயல் 3), மதத்தை மறுத்தலும் முனைவர் பட்டமும் (இயல் 4,5), பத்திரிகைப் போராட்டங்கள் (இயல் 6), குடும்ப வாழ்க்கையும் அரசியல் போராட்டங்களும் (இயல் 7), தொழிலாளர்களுடனான தொடர்புகள் (இயல் 8), ஜென்னியின் பங்கு (இயல் 9), எங்கெல்சுடனான நட்பு (இயல் 10), மூலதனத்தின் தத்துவம் (இயல் 11) ஆகியவற்றை விவரிக்கின்றன.

கிரேக்கத் தத்துவத்தைப் பற்றிய ஆய்வு நூலை எழுதி முனைவர் பட்டம் பெற்றார், மார்க்ஸ். அவர் ஜெர்மனியில், பல்கலைக்கழகப் பேராசிரியராக பணியாற்ற இயலவில்லை. அவர் பத்திரிகையாளராகத் தமது பணி வாழ்வைத் தொடங்கினார். கொந்தளிப்பான அரசியல் சூழலில் ஜெர்மனியிலும் பிரான்சிலும் பெல்ஜியத்திலும் இங்கிலாந்திலும் தொழிலாளர்களுடன் தோழமை உறவுகளை ஏற்படுத்திக் கொண்டார். ஐரோப்பாவில் நிகழ்ந்த புரட்சிகர எழுச்சிகளில் ஊக்கத்துடன் பங்கேற்றார்.

இந்த உலகின் நெருக்கடிகளுக்கும் உழைப்பாளிகளின் துயரங்களுக்கும் முடிவு கட்டப் போவது தொழிலாளி வர்க்கம் என்ற முடிவுக்கு வந்த மார்க்ஸ் தொழிலாளர்களின் நிலையைப் பற்றி ஆய்வு செய்யத் தொடங்கினார்.

- அந்த ஆய்வுக்காக, சுதந்திரமான தத்துவ அறிஞர்கள் அனைவரையும் மார்க்ஸ் பயின்றார்.

கிரேக்க தத்துவ அறிஞர் தேலஸ் முதல் மார்க்சின் சமகால ஜெர்மன் தத்துவ அறிஞர்கள் ஃபாயர்பாஹ், மோஸஸ் ஹேஸ் வரை ஆய்வு செய்தார்.

- பண்டைய எழுத்தாளர்கள் ஹெரடோடஸ் மற்றும் ப்ளூடார்க் தொடங்கி பத்தொன்பதாம்

நூற்றாண்டில் கிஸோ மற்றும் தியேர் முடிய எல்லா வரலாற்றாசிரியர்களும் எழுதிய அடிப்படையான நூல்கள் அனைத்தையும் அவர் படித்தார்.

- அரசியல் துறையில், கிரேக்க அறிஞர் பிளாட்டோ முதல் சமகாலத்தில் லெரூ மற்றும் வைத்லிங் முதலிய சமூகக் கற்பனாவாதிகள் வரை அவர்கள் எழுதிய புத்தகங்களையும் படித்தார்.
- பொருளாதாரத் துறையில் ஆடம் ஸ்மித் முதல் பிரெடெரிக் எங்கெல்ஸ் முடிய முக்கியமான அரசியல் பொருளாதார நூல்கள் எல்லாவற்றையும் அவர் ஆராய்ந்தார்.
- இலக்கியச் செல்வத்தின் எல்லாத் துறைகளையும் - லுக்ரெத்சியஸ் காருசின் கவிதையிலிருந்து ஹென்ரிஹ் ஹேய்னெயின் கவிதை முடிய, எஷ்கிலசின் சோக நாடகங்களிலிருந்து ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் முடிய, பிளாட்டோவின் உரையாடல்களிலிருந்து பல்ஸாக்கின் வசனம் முடிய - ஆழ்ந்து படித்தார்.

அது மட்டுமின்றி, இங்கிலாந்து அருங்காட்சியக நூலகத்தில் இருந்து சமகால நாடாளுமன்ற அறிக்கைகள், தொழிற்சாலை ஆய்வாளர்கள் அறிக்கைகள், மருத்துவ அறிக்கைகள், நிதி நெருக்கடி பற்றிய விசாரணைக் குழு அறிக்கைகள், இந்தியா உள்ளிட்ட பிற நாடுகளைப் பற்றிய ஆவணப் பதிவுகள் ஆகிய அனைத்தையும் ஆய்வு செய்தார். அவரது நோக்கம், வளர்ந்து கொண்டிருந்த முதலாளித்துவ உற்பத்தி முறையின் இயங்கு விதிகளை தொழிலாளி வர்க்கம் புரிந்து கொள்ளும் வகையில் முழுமையாக வகுத்து முன்வைப்பதே!

பல ஆண்டுகள் நீடித்த இந்த ஆய்வுகளின் விளைவுதான், மார்க்சியத்தின் இதயமாக அமைந்துள்ள மூலதனம் நூல். இந்நூல், உழைக்கும் தொழிலாளர்களுக்கும் அவர்களது உழைப்பில் இலாபம் ஈட்டும் முதலாளிகளுக்கும் இடையிலான உறவையும் முதலாளிகளுக்கு இடையிலான போட்டியும் மூலதனத்தைத் திரட்டலும் இட்டுச் செல்லும் நெருக்கடிகளையும் பற்றி விரிவான நுணுக்கமான புரிதலை வழங்குகிறது.

ஹென்ரி வோல்கவின் நூல் மூலதனத்தின் தத்துவம் என்ற தலைப்பில் மூலதனம் நூலின் உள்ளடக்கத்தையும் ஆய்வுமுறையையும் விவரிக்கிறது.

“மார்க்சின் துணிவு மிக்க, படைப்பாற்றலுடைய, புதியனவற்றைத் தேடுகின்ற சிந்தனை இன்றைய உலகத்தில் வாழ்கிறது, தொடர்ந்து போராடுகிறது. அது அறிவியல் அறிஞர்கள், தத்துவ அறிஞர்கள், அரசியல்வாதிகள் என அனைவரின் பணிகளிலும் பங்கெடுக்கிறது. வாழ்க்கையிலும் சமூகப் போராட்டத்திலும் ஒவ்வொரு நபரும் தனக்குரிய இடத்தைப் பெறுவதற்கு அது உதவி செய்கிறது. அது சமூகத்திலிருந்து எல்லாவிதமான கசடுகளையும் அகற்றுவதற்கு, மனித குலத்தினருக்குத் துன்பங்களையும் போர்களையும் வறுமையையும் பசியையும் அநீதியையும் ஒழிப்பதற்கு உதவி செய்கிறது.” என்று முடிக்கிறார் ஹென்ரி வோல்கவ்.

மார்க்ஸ் என்ற இளைஞர் தன்னை உலக மக்களின் விடுதலைக்கான பணிக்கு எப்படி ஒப்படைத்துக் கொண்டார், அதற்கான திறன்களை எவ்வாறு வளர்த்துக் கொண்டார், அதற்காக எவ்வளவு கடுமையாக உழைத்தார் என்பதை ஹென்ரி வோல்கவின் நூலில் இருந்து நாம் கற்றுக் கொள்கிறோம். ஆங்கிலத்திலோ, தமிழிலோ படித்துப் பாருங்கள்.

1. கார்ல் மார்க்ஸ், லூயி போனபார்ட்டின் பதினெட்டாம் புரூமேர், 1852
2. நம் வரலாற்றிலிருந்து புரட்சிக்கான பாதையைச் சமைக்க வேண்டும்! - மொழிபெயர்ப்பாளர் நா. தர்மராஜன் நேர்காணல் (https://www.hindutamil.in/news/literature/98997-.html)

**ஆங்கில நூல்**

- *Birth of a Genius - The Development of the Personality and World Outlook of Karl Marx by Genrikh Volkov*
- *Original edition : Progress Publishers, 1978*
- *Current edition : Chinthan Books, 2024*
  *Price: Rs.270/-*

**தமிழ் நூல்**

- மார்க்ஸ் பிறந்தார் - கார்ல் மார்க்சின் ஆளுமை மற்றும் உலகக் கண்ணோட்டத்தினுடைய வளர்ச்சியின் வரலாறு - ஹென்ரி வோல்கவ்
- மொழிபெயர்ப்பாளர் : நா. தர்மராஜன், எம்.ஏ.
- மூலப் பதிப்பு: முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1986
- இப்போதைய பதிப்பு: நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம், சென்னை / விலை: ரூ.220/-

●

**கட்டுரையாளர்: மார்க்சிய செயல்பாட்டாளர், மொழிபெயர்ப்பாளர்.**




அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள்
மக்கள் பதிப்பில் வெளியான
**அரசமைப்புக் கருத்துநிலை**
என்ற பொருண்மைக்கான
(தொகுதிகள் 37-39) அறிமுகக் கட்டுரை

# அரசமைப்புக் கருத்துநிலை உருவாக்கம்: அண்ணல் அம்பேத்கர் நிகழ்த்திய உரையாடல்கள்

அண்ணல் அம்பேத்கரின் சிந்தனையில், இந்தியக் குடியரசின் எதிர்கால அரசமைப்பு பற்றிய கருத்துநிலைகள் உருப்பெற்றமை பற்றிய தொகுப்பாக அமைகிறது, ‘அரசமைப்புக் கருத்துநிலை’ என்ற தலைப்பு. அரசியலில் தலைவர்களின் பங்களிப்பு, போர்-அமைதிவாதம், சொத்துடைமை, மொழிவாரி மாநிலங்களின் உருவாக்கம், சுதேச சமஸ்தானங்ககளைளைப் பற்றிய சிக்கல்கள், சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பது, கூட்டாட்சி - மாநில உரிமைகள் எனப் பல்வேறு பொருண்மைகள் இதில் இடம்பெறுகின்றன.

இரண்டாம் உலகப் போர் (1939-1945) நடைபெற்றுக் கொண்டிருந்த சூழலில், இந்தியாவில் ஆட்சி செய்துகொண்டிருந்த பிரித்தானிய அரசுக்கு நெருக்கடிகள் உருவாகத் தொடங்கின. அவர்கள் ஆட்சி செய்த காலனிய நாடுகள் பலவும் பிரித்தானியர்களை ஆட்சி அதிகாரத்திலிருந்து வெளியேற்றுவதற்காகப் போராட்டங்களை நடத்தின. பிரித்தானியர்களுக்கு உலக அளவில் நெருக்கடிகள் உருவாயின. ஆட்சி செய்யும் நாடுகளில் உருவான நெருக்கடிகளை எதிர்கொள்வது அவர்களுக்கு எளிதாக இல்லை. எனவே ஆட்சி அதிகாரத்தை விட்டுக் கொடுக்கும் மனநிலை 1942 முதல் அவர்களுக்குப் படிப்படியாக உருப்பெற்றுவிட்டது. இதன் விளைவாக, 1947இல் ஆட்சி அதிகாரத்தை விட்டுக் கொடுத்தனர். இங்குள்ள அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தனர். இவ்வகையில், இந்தியாவில் இந்திய தேசியக் காங்கிரஸ் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தது.



வீ.அரசு

இந்தச் சூழலில், இந்தியாவிலிருந்த புலமைத்துவ அறிஞர்கள் ஆட்சி அதிகார மாற்றத்தை நோக்கி, பல்வேறு கருத்துநிலைகளை முன்வைக்கத் தொடங்கினர். இவ்வகையான உரையாடலை 1939ஆம் ஆண்டு தொடங்கி 1948 வரை அண்ணல் அம்பேத்கர் தொடர்ந்து நிகழ்த்தினார். இவற்றை ‘அரசமைப்புக் கருத்துநிலை’ எனும் பொருண்மையில் மூன்று தொகுதிகளாக (37, 38, 39) தொகுத்துப் பதிப்பித்துள்ளோம். இவற்றில் பேசப்படும் செய்திகளைப் பொருண்மை மற்றும் கால ஒழுங்கில் தொகுத்துப் பேசும் முறையில் இக்கட்டுரை அமைந்துள்ளது. நமது வசதிக்காகக் கீழ்க்காணும் வகையில் தொகுத்துக் கொள்ள முடியும்.

- போர் - செயல் முனைப்பு - சொத்துடைமையைப் பற்றி பெர்ட்ரண்ட் ஆர்தர் வில்லியம் இரஸ்ஸல் (1872-1970) எழுதிய நூலை எவ்வாறு புரிந்து கொள்வது என்பதை பற்றிய குறிப்பை நூல் மதிப்புரையாக அம்பேத்கர் செய்துள்ளார். அது குறித்துப் பேசுவது அவசியம்.

- பொதுவெளியில் செயல்பட்ட பல்வேறு ஆளுமைகளை எப்படிப் புரிந்துகொள்ள வேண்டும்? வீர வழிபாடு நிகழ்த்தும் போக்கை எவ்வாறு மதிப்பீடு செய்வது? பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் தொடங்கி, இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை வாழ்ந்த மகாதேவ் கோவிந்த் இரானடே (1842-1901), மகாத்மா காந்தி (1869-1948) முகம்மது அலி ஜின்னா (1876-1948) முதலிய ஆளுமைகளைத் தனது கண்ணோட்டத்தில் அம்பேத்கர் மதிப்பீடு செய்துள்ளார். அத்தன்மைகளைக் குறித்த உரையாடலை நிகழ்த்த வேண்டும்.
- இந்தியாவில் பல்வேறு வகுப்பினர் வாழ்கின்றனர். பிரித்தானியர்களிடமிருந்து இந்தியா ஆட்சி அதிகாரத்தைப் பெறும்போது, அரசமைப்புச் சட்டத்தை எவ்வாறு உருவாக்க வேண்டும், அதிலுள்ள சிக்கல் எத்தகையது என்பதைக் குறித்தும் அம்பேத்கர் பேசியுள்ளார். இதனை ஆவணப்படுத்தும் தேவையுண்டு.
- இந்தியாவில் ஆட்சி அதிகாரம் கைமாறி, இங்கு பேசப்படும் மொழிகள் சார்ந்து, மாநிலங்களாகப் பிரிக்கும் சூழல் உருவாகும்போது, முன்னரே உள்ள மாகாணங்களை எப்படிப் பிரிப்பது? குறிப்பாக, மராட்டிய மாகாணத்தைப் பிரிப்பதில் உருவாகும் சிக்கல் குறித்தும் அம்பேத்கர் பேசியுள்ளார்.
- கூட்டாட்சித் தத்துவம் எவ்வகையில் இந்தியாவிற்குத் தேவைப்படுகிறது; அதன் நன்மை – தீமைகள் எவையெவை? என்பது குறித்த உரையாடலையும் அம்பேத்கர் நிகழ்த்தியுள்ளார். அது குறித்தும் பேசுவது அவசியம்.
- பிரித்தானியர் ஆட்சி அதிகாரத்திலிருந்து விடுபடும்போது, சிறுபான்மையினர், குறிப்பாக பட்டியல் சாதி மக்களின் நலன்களைப் பாதுகாப்பது எத்தகையது என்றும் அம்பேத்கர் பேசியுள்ளார். இது குறித்துப் பதிவு செய்வதும் அவசியம்.

முதல் உலகப் போர் (1916-1919) நடந்து கொண்டிருந்தபோது இரஸ்ஸல் போரின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு ‘சமூக மறுசீரமைப்புக் கோட்பாடுகள்’ எனும் நூலை எழுதினார். 1918இல் அம்பேத்கர் இந்நூலுக்கான மதிப்புரையை ஜர்னல் ஆஃப் இண்டியன் எகனாமிக் சொசைட்டி எனும் இதழில் எழுதினார்.

‘நடத்தைசார் உளவியல்’, ‘அமைதிவாதத் தத்துவம்’, ‘வேதனைப் பொருளாதாரம்’ முதலிய பல்வேறு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இரஸ்ஸலின் நூலை அம்பேத்கர் மதிப்பீடு செய்கிறார். போர் பற்றியப் புரிதலை மேற்குறித்த கோட்பாடுகளின் வழி அறியமுடிகிறது.

“திரு இரஸ்ஸல் போரை எதிர்ப்பவர். ஆனால், அவர் அமைதிவாதி இல்லையென்பதை மீண்டும் வலியுறுத்த வேண்டும். ஏனெனில், அவரைப் பொறுத்தவரை செயல், வளர்ச்சிக்கு இட்டுச் செல்கிறது; அமைதிவாதம் என்பது மரணத்தின் மறுபெயரே. பேராசிரியர் டிவேயின் சொற்களில், அவர் ‘வன்முறையான வலிமைக்கு’ மட்டுமே எதிரானவர். ஆனால், ‘ஆற்றலாகச் செயல்படும் வலிமையை’ அவர் முழுமையாக ஆதரித்தார்” (தொ. 37: பக். 15).


போர் என்பது மேலை நாட்டினரின் தீவிர உலகியல் வாழ்வின் விளைவு. தாங்கள் அதிலிருந்து விடுபட்டவர்களென்று கீழை நாட்டவர்கள் தம்மைத் தாமே போற்றிக் கொள்வதைப் பற்றி பகுப்பாய்வு செய்கிறார் அம்பேத்கர். இன்றளவும் உலகில் எஞ்சியுள்ள பழைமைச் சிறப்புள்ள நாடாக இந்தியா நிலைத்திருப்பதற்குக் காரணம் அதுதான் என்ற கருத்தைக் கேள்விக்குள்ளாக்குகிறார்.

“நிலைத்திருப்பதில் பல முறைமைகள் உண்டு. அவை அனைத்துமே சம அளவு போற்றக்கூடியவை இல்லை. எடுத்துக்காட்டாக, சரியான நேரத்தில் பின்வாங்கும் திறன் பலவீனமான இனங்களுக்குக் கூட உயிர்வாழ உதவும். அதேபோல, தேவைப்படும் நேரத்தில் அடிமையாய் அடிபணிந்து, பதுங்கி வாழ்வதும் கூட பிழைத்திருப்பதற்கான அதே அளவு திறனைக் கொண்டிருக்கலாம். எனவே, ஒரு நாட்டு மக்கள் காலங்காலமாகப் பிழைத்திருக்கிறார்கள் என்பதாலேயே அவர்கள் மேம்பட்டு வளர்ந்து வந்திருக்கிறார்கள் என்று கருத முடியாது. ஆனால், வழக்கமாக அவ்வாறே கருதப்படுகிறது. எனவே, பிழைத்திருத்தல் முதன்மையானது இல்லை; வாழ்வின் தன்மைதான், பிழைத்திருக்கும் தளம்தான் முதன்மையானது.

இரஸ்ஸலின் இந்திய வாசகர்கள் தாங்கள் பிழைத்திருப்பதன் தன்மையை ஆராய்ந்தால், பிழைத்திருப்பதாலேயே மனநிறைவு பெறாமல் இருந்தால், வாழ்க்கையின் விழுமியங்களை மீளாய்வு செய்ய வேண்டியதன் தேவையை உணர்வார்கள்” (தொ. 37: பக். 19-20).

இரஸ்ஸலின் சமூக மறுசீரமைப்பு குறித்த நூலின் மதிப்புரையைக் கீழ்க்காணும் வகையில் அம்பேத்கர் முடிக்கிறார்.

“எதிர்காலத்தில் சமூகத்தை மறுசீரமைப்பதற்கான அடித்தளத்தை இடுவதற்கான செய்திகள் இதில் நிறைய இருக்கின்றன. சமூக வாழ்க்கைக்கு மனநிலை அடிப்படையை வலியுறுத்திய முழுப்பெருமையும் திரு இரஸ்ஸலையே சேரும். சமூக மறுசீரமைப்பானது சமூகத்துடன் தனிநபருக்குள்ள உறவைச் சரியாகப் புரிந்துகொள்வதைச் சார்ந்துள்ளது. இந்தச் சிக்கல்




நீண்டகாலமாகவே பல சமூகவியலாளர்களுக்கு ஒரு புதிராக இருந்து வந்திருக்கிறது. இந்த உறவு பற்றிய

திரு இரஸ்ஸலின் கண்ணோட்டமான மன உந்துதலிலிருந்து நிறுவனம் என்பது மிகவும் உண்மையானது என்பதில் ஐயமில்லை." (தொ.37.ப.30)

உடைமைகளின் விளைவுகளைப் பற்றிய இத்தகையவொரு சிக்கலுக்கான தீர்வைப் பின்வருமாறு கூறுகிறார், அம்பேத்கர்:

"பொது முயற்சியின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட எதையும், கூட்டுப் பயன்பாட்டுக்காக இருக்கும் எதையும் தனதாக்கிக்கொள்ளும் உரிமையை யாரும் முன்வைக்க முடியாது. பொது முயற்சியின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டதற்கு எடுத்துக்காட்டாக பழங்குடி மக்களின் கூட்டு வேட்டையைக் கூறலாம். கூட்டுப் பயன்பாட்டுக்காக இருப்பதற்கு ஒரு குடும்பத்திலுள்ள நிலைமையை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். எவ்வாறு பொது நினைவுச் சின்னங்கள்மீது எவரும் தனிப்பட்ட முறையில் உரிமை கொண்டாட முடியாதோ அவ்வாறே வீட்டில் மேசை மீதுள்ள பொருள்கள் மீதும் அலங்காரப் பொருள்கள் மீதும் எவரும் தனிப்பட்ட முறையில் உரிமை கொண்டாட முடியாது. அவை யாவும் குடும்பத்துக்குரியவை. அதேநேரம், குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவரும் தாம் அணிந்துகொள்வதற்குத் தனிப்பட்ட உரிமையுடன் ஆடைகளை வைத்துக்கொள்வதற்கு உரிமை உண்டு. அவை தனிநபர்களுடையவை"

(தொ. 37: பக். 29).

இந்தியச் சமூகத்தை மேம்பட்டு வளரச் செய்வதற்குத் தேவையான தத்துவம், கூட்டுப் பயன்பாடு-தனிப்பட்ட உரிமை முதலிய கருத்துநிலைகளை அம்பேத்கர் இதில் வளர்த்தெடுக்கிறார்.

•••

நீதிபதி மகாதேவ் கோவிந்த் இரானடே நினைவாக நிகழ்த்திய உரையில், அம்பேத்கர் இந்திய அரசியலில் செயல்பட்ட மகாத்மா ஜோதிராவ் பூலே (1827-1890), பால கங்காதர திலகர் (1856-1920), மகாத்மா காந்தி (1869-1948), முகமது அலி ஜின்னா (1876-1948) முதலியோருடன் இரானடே (1842-1901) அவர்களின் அரசியல் செயல்பாட்டை ஒப்பிட்டு உரையாற்றினார். அந்த உரையின் அச்சு வடிவமே இரானடே பற்றி தொகுதி 37 இல் உள்ள கட்டுரை. இதில் வரலாற்றில் தனிமனிதர்களின் பங்களிப்பு, வீர வழிபாடு என்பதன் சமூகப் பின்புலங்கள், அரசியல் சீர்திருத்தமா? சமூகச் சீர்திருத்தமா? எனும் உரையாடல் முதலிய பல பொருண்மைகள் குறித்து உரையாடுகிறார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இரானடேயின் வாழ்க்கையை, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த அரசியல் செயல்பாட்டாளர்களோடு ஒப்பிட்டுப் பேசும் இவ்வுரை பல்வேறு அரசியல் புரிதல்களை நமக்குத் தருகிறது.

இரானடே பற்றிய இவ்வுரையை வெளியிடும்போது அம்பேத்கர் முகவுரையில் பதிவுசெய்திருக்கும் செய்தி, அவரது நிலைப்பாட்டைப் புரிந்துகொள்ள உதவுகிறது.

"இந்திய அரசியலில் திரு காந்தியும் திரு ஜின்னாவும் ஏற்படுத்தியுள்ள குளறுபடியை நான் குறைகூறுகிறேன். அதற்காகத்தான் நான் கண்டிக்கப்படுகிறேன். அவர்களிடம் வெறுப்பையும் மதிப்புக் குறைவையும் காட்டுகிறேன் என்று குற்றம் சாட்டப்படுகிறேன். நான் ஒரு திறனாய்வாளராக இருந்திருக்கிறேன்; இனிமேலும், அவ்வாறாகவே தொடர்வேன். இதுவே, இக்குற்றச்சாட்டுக்கு நான் அளிக்கவேண்டிய பதில். நான் குற்றம் செய்வதாகவும் இருக்கலாம். ஆனால், பிறரிடமிருந்து வழிகாட்டுதலையும் ஆற்றுப்படுத்தலையும் ஏற்பதை விட அல்லது நிலைமை சீர்கேடடைவதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பதைவிடக் குற்றம்

செய்வது மேல். இவ்வாறு எப்போதும் கருதுபவன் நான்'' (தொ. 37: ப. 37).

அம்பேத்கர் இரானடேவின் பணி குறித்த விமர்சனங்களை உள்வாங்கி, அவரைக் குறித்தப் பதிவை செய்கிறார். காந்தி, ஜின்னா போன்றவர்களின் செயல்களை விமர்சனம் செய்யும்போது, இரானடே, பூலே முதலியோரின் செயல்களை ஒப்பிட்டுக் காட்டுகிறார். இதனை 'வெறுப்பு' என்று கருதுவதை மறுக்கிறார். பத்தொன்பதாம் நூற்றாண்டில், இந்தியச் சமூகத்தில் ஒரு புதிய வரலாற்றை உருவாக்குவதில் மாமனிதராக இரானடே செயல்பட்டிருக்கிறார் என்பது அம்பேத்கரின் கணிப்பு. வரலாற்றில் நிகழும் மாற்றங்களுக்கிடையே உள்ள தொடர்பை, பல்வேறு அறிஞர்களின் கோட்பாடுகளை மேற்கோள் காட்டி, இரானடேவை மாமனிதர் என்று மதிப்பிடும்முன், மாமனிதர் என்பதற்கான வரையறைகளை அம்பேத்கர் பதிவு செய்கிறார். அப்பகுதி பின்வருமாறு அமைகிறது:

''வெறும் உயர்நிலை மனிதருக்கு இருப்பதை விட கூடுதலாக ஒன்று மாமனிதரிடம் இருக்கவேண்டும். அது எது? தத்துவ அறிஞர்கள் மாமனிதருக்கு வழங்கியுள்ள வரைவிலக்கணம் என்பது இங்குதான் முதன்மை பெறுகிறது. மாமனிதர் சமூக நலனுக்கான இயக்கத்தால் உந்தப் பெற வேண்டும். சமூகத்தைத் தூய்மையாக்க சாட்டையாகவும் துப்புரவாளனாகவும் அவர் செயல்பட வேண்டும். இப்பண்புகளே மாமனிதரை உயர்நிலை மனிதரிடமிருந்து பிரித்துக் காட்டுகின்றன. அவரை மதிப்புக்கும் வணக்கத்துக்கும் உரியவராக ஆக்குகின்றன'' (தொ. 37: பக். 49).

அம்பேத்கர் மனிதன், உயர்நிலை மனிதன், மாமனிதன் என அரசியல் செயல்பாட்டாளர்களை வகைப்படுத்துகிறார். இதற்கான வரையறைகளை முன்வைக்கிறார். அந்த வரையறைகளின் அடிப்படையில் இரானடே எவ்வாறு மாமனிதராகச் செயல்பட்டிருக்கிறார் என்ற பதிவைச் செய்துள்ளார். இரானடே அவர்களின் நாணயம், அறிவுத்திறன், தொடர்ந்து வாழ்நாள் முழுவதும் மக்களுக்காகப் பணியாற்றியது இன்னபிற தொடர்பான விவரணங்களைப் பட்டியலிடுகிறார். அந்தத் தன்மையைச் சார்ந்து இரானடேவை மாமனிதர் என்கிறார்.

இந்து சமூக அமைப்பென்பது பழமைவாதம் மிக்கது; சமூகச் செயல்பாடுகளை அரசியல் நோக்கில் அறிந்துகொள்ள மறுப்பது, சமூகச் சீர்திருத்தத்தை ஏற்றுக்கொள்ளாதது; இந்து மதம் மக்களுக்கான செயல்பாடுகளில் ஈடுபாடு காட்டாதது; மனுதர்மத்தை முன்னிறுத்துவது என்ற பல்வேறு விமர்சனங்களை முன்வைக்கும் அம்பேத்கர், இந்தக் கூறுகளில் இரானடே எப்படியெல்லாம் வேறுபட்டுச் செயல்பட்டார் என்பதைப் பல்வேறு எடுத்துக்காட்டுகள் மூலம், பல்வேறு அறிஞர்களின் மேற்கோளை முன்னிறுத்திப் பதிவு செய்கிறார்.

அம்பேத்கர் இரானடேவைப் புரிந்துகொள்ள சமூகச் சீர்த்திருத்தமா? அரசியல் சீர்திருத்தமா? என்ற கோட்பாட்டை முன்னிலைப்படுத்திப் பேசுகிறார். இந்த இரண்டு நிலைகளில் இரானடே எவ்வாறு சமூகச் சீர்திருத்தத்தை முதன்மைப்படுத்தினார் என்பதை விரிவாகப் பேசுகிறார். இந்திய அரசியலில், பத்தொன்பதாம் நூற்றாண்டில், பூலேவும் இரானடேவும் முன்னெடுத்த சமூகச் சீர்திருத்தங்கள், பின்னர் வந்த அரசியல் சீர்திருத்தம் பேசுபவர்களால் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டன என்பது குறித்த உரையாடலை விரிவாக நிகழ்த்தியுள்ளார். அரசியல் சீர்திருத்தவாதிகளாக காந்தி, ஜின்னா முதலியோரை அம்பேத்கர் மதிப்பிடுகிறார்; அதே நேரத்தில், இரானடே செய்த சமூகச் சீர்திருத்தங்களை பின்னர் வந்த அரசியல் சீர்திருத்தவாதிகள் பெரிதும் முன்னெடுக்கவில்லை என்பது அம்பேத்கரின் கணிப்பாக இருக்கிறது.

குழந்தைத் திருமணம், கைம்பெண் மறுமணம், கடல் கடந்து சென்று வெளிநாடுகளில் தங்கும் சுதந்திரம், பெண்களுக்குச் சொத்துரிமை, பெண் கல்வி முதலிய திட்டங்களில் இரானடே செயல்பட்டு வெற்றி பெற்றதை அம்பேத்கர் கவனப்படுத்துகிறார். இவ்வகையான சமூகச் சீர்திருத்தத்தை அரசியல் சீர்திருத்தம் பேசுபவர்கள் (காந்தி, ஜின்னா) பெரிதும் கவனத்தில் கொள்ளவில்லையென்பது அம்பேத்கரின் குற்றச்சாட்டாக இருக்கிறது. ஜோதிபா பூலே முன்னெடுத்த சமூகச் சீர்திருத்தங்களின் தொடர்ச்சியாக இரானடே இருந்தார். இந்தியச் சமூகத்தில் பின்வந்த அரசியல் சீர்திருத்தவாதிகள் இரானடேவின் சமூகச் சீர்திருத்தத்தை வளர்த்தெடுத்திருக்க வேண்டும். மாறாக, இவர்கள் மதவாதிகளாகவே செயல்பட்டு, இந்து மற்றும் முஸ்லீம் மக்களின் தலைவர்களாகவே அறியப்பட்டனர். காந்தி, ஜின்னா முதலிய இருவரின் செயல்களை, இரானடேவின் செயல்களோடு ஒப்பிட்டுப் பேசுவதன் மூலம்தான் சமூகச் சீர்திருத்தவாதிகள், அரசியல் சீர்திருத்தவாதிகள் எனும் பிரிவை முன்வைக்கிறார். அரசியல் சீர்திருத்தவாதிகள், வீர வழிபாட்டுக்கு உரியவர்களாகக் கட்டமைக்கப்பட்டார்கள்; மக்களின் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் முதலிய பண்புகளை முன்னெடுக்கும் மனிதர்களாகச் செயல்படவில்லை என்பது அம்பேத்கரின் கணிப்பு. இந்த உரையாடலில் இரானடே குறித்த மதிப்பீட்டை அம்பேத்கர் பின்கண்டவாறு பதிவு செய்கிறார்.

''தான் ஒரு பகுத்தறிவுவாதி என்பதால், தம் கருத்துகளை அறிவு-அனுபவ அடிப்படையில் ஆராய்வதற்கு ஆயத்தமாக இருந்தார். அவரது மேன்மை இயல்பானது. மேடைப் பாங்கோ

கற்பிதமான விந்தைப் போக்கோ செய்தித்தாள்களின் துணையாதரவோ அவருக்குத் தேவையாக இருக்கவில்லை. நான் சொன்னது போல, இரானடே முதன்மையாக ஒரு சமூகச் சீர்திருத்தக்காரர் ஆவார். அரசியலை வைத்து வணிகம் செய்வது என்கிற பொருளில் அவர் அரசியல்வாதியல்லர். ஆயினும், இந்திய அரசியல் முன்னேற்றத்தில் அவர் முக்கியப் பங்கு கொண்டார். அரசியல்வாதிகள் சிலருக்கு ஆசிரியராகச் செயல்பட்டார்; அவர்கள் வியக்கத்தக்க வெற்றிகள் பெற்றனர்; தம் அறிவாற்றலால் திகைக்கச் செய்தனர். சிலருக்கு அவர் வழிகாட்டி; அனைவருக்கும் அவர் சிந்தனையாளர்" (தொ. 37: பக். 77-78).

அண்ணலின் இரானடேவைப் பற்றிய இப்பதிவு அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பான புதிய வெளிச்சமாக அமைகிறது.

★★★

பிரித்தானியர்கள் ஆட்சி அதிகாரத்தை இந்தியர்களிடம் கொடுக்கும் சூழல் உருவானபோது, இந்தியாவிற்கான அரசமைப்புச் சட்டங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கான அடிப்படைகளை 1940கள் முதலே அம்பேத்கர் பேசத் தொடங்கினார். 1946இல் அரசமைப்பு அவைக்குத் தேர்வு செய்யப்பட்டார். 1947இல் அம்பேத்கர் தலைமையில் 'அரசமைப்புச் சட்ட வரைவுக்குழு' அமைக்கப்பட்டது. 1945-1948 காலங்களில் அரசியல் சட்ட வரைவு பற்றிய சிந்தனைகளில் தொடர்ந்து செயல்பட்டார். 1945இல் பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய பட்டியல் வகுப்பினர் மாநாட்டில், பல்வேறு வகுப்பினர் வாழும் இந்தியாவில், அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும்போது ஏற்படும் சிக்கல்கள் குறித்து உரையாற்றினார். அதன் அச்சு வடிவமே தொகுதி 37இல் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த உரையில், அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவதற்கான பொதுவான கோட்பாடுகள்; அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கும் பொறுப்பு; அந்தச் சட்டத்தை எவ்வாறு உருவாக்க வேண்டும்; இதற்குத் தேவையான புதிய அணுகுமுறை எது? முதலிய பல தன்மைகள் குறித்து விரிவாகப் பேசுகிறார். இந்தப் பின்புலத்தில், பல்வேறு வகுப்பு மக்களுக்கான நேர்மையான பங்களிப்பை இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்க வேண்டுமன்றும் அம்பேத்கர் கருதினார்.

வகுப்புச் சிக்கல் உருவாவது தவிர்க்கப்பட இயலாதவொன்று என்று கருதிய அம்பேத்கர் அதற்கானத் தீர்வுகளை முன்வைத்தார். ஒவ்வொரு வகுப்பினருக்கும் சட்டமியற்றும் அவையில் சார்பாண்மை வழங்குதல், நிருவாகத்தில் பங்களித்தல், அரசுப் பணிகளில் சார்பாண்மை வழங்குதல் முதலியன குறித்து புள்ளிவிவரங்களுடன் அம்பேத்கர் பேசுகிறார்.

இந்தியாவில் வாழும் பல்வேறு வகுப்பினரிடையே உள்ள முதன்மையான சிக்கல் பெரும்பான்மை வகுப்பு, சிறுபான்மை வகுப்பு என்பதாகும். பெரும்பான்மை வகுப்பின் ஆதிக்கம் சட்ட உருவாக்க வரையறைகளில் இடம்பெறுமெனில், அத்தன்மை சிறுபான்மை மக்களைப் புறக்கணிப்பதாக அமையும். இச்சிக்கலைத் தீர்ப்பதற்கான அடிப்படைக் கோட்பாடுகளாக அம்பேத்கர் செய்யும் பரிந்துரைகள் பின்வரும் வகையில் அமைகின்றன:

"1. பெரும்பான்மை ஆட்சி, கோட்பாட்டு அடிப்படையில் ஏற்றுக்கொள்ளத்தக்கது அன்று; நடைமுறையில் நியாயமற்றது. பெரும்பான்மைச் சமூகத்திற்கு ஓரளவு பெரும்பான்மைச் சார்பாண்மை கொடுக்கப்படலாம். ஆனால், அறுதிப் பெரும்பான்மையை அது கோர முடியாது.

2. ஒப்பீட்டு அடிப்படையில் ஓரளவு பெரும்பான்மைச் சார்பாண்மையானது சட்டமியற்றும் அவையில் கொடுக்கப்படும்போது, அதன் எண்ணிக்கை சிறிய சிறுபான்மை வகுப்பினரின் உதவியுடன் தனது ஆட்சி அமைப்பதைச் சாத்தியமாக்கும் அளவுக்கு இருக்கக்கூடாது.

3. அவையில் இடப்பங்கீடு செய்கையில், பெரும்பான்மை வகுப்பும் ஒரு பெரிய சிறுபான்மை வகுப்பும் இணைந்து, மற்ற சிறுபான்மை வகுப்புகளின் நலனுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் கூட்டணி அமைய முடியாதவாறு இருத்தல் வேண்டும்.

4. அனைத்துச் சிறுபான்மை வகுப்பினரும் இணைந்து பெரும்பான்மையைச் சார்ந்திராமல் அவர்களே ஆட்சி அமைக்க முடியுமென்ற அடிப்படையில் இடங்கள் பங்கீடு செய்யப்பட வேண்டும்.

5. பெரும்பான்மையிடமிருந்து எடுக்கப்பட்ட உபரி இடங்களின் எண்ணிக்கை சிறுபான்மை வகுப்புகளிடையே பிரித்துக்கொடுக்கப்பட வேண்டும். இவ்வாறு பங்கிட்டு வழங்கும்போது, சமூக, பொருளாதார, கல்வி நிலைகளில் மேம்பாடு அடைந்துள்ள பெரிய சிறுபான்மைக்கு இடங்களைக் குறைந்த எண்ணிக்கையில் ஒதுக்க வேண்டும். சமூக நிலைகளில் தாழ்ந்துள்ள சிறிய சிறுபான்மை வகுப்பினருக்கு அதிக இடங்களை ஒதுக்கவேண்டும். இவ்வாறு, நேர்மாறான விகிதத்தில் பங்கீடு செய்ய வேண்டும்" (தொ. 37: பக். 135-136).

இந்தியச் சமூகத்தில் சாதிய அடையாளத்துடன் கூடிய சிறுபான்மை, பெரும்பான்மை மக்கள்; மத அடையாளத்துடன் கூடிய சிறுபான்மை, பெரும்பான்மை மக்கள் என்று இருப்பதைக் கணக்கில்கொண்டு செயல்பட்டார், அம்பேத்கர். சிறுபான்மை மக்கள் சாதிய அடிப்படையிலும் மத அடிப்படையிலும் வாழ்ந்தாலும், அவர்களின் சமூக மதிப்பீடு மற்றும் பொருளாதாரப் பின்புலம் முதலியவற்றைக் கணக்கில் கொண்டு செயல்படுவதை வலியுறுத்தினார். குறிப்பாக, பட்டியல் சாதி மக்கள் சிறுபான்மையினர் என்பதோடு, அவர்களின் சமூக மதிப்பீடென்பது மிகவும் மோசமான நிலையில் இருப்பதையும் கவனப்படுத்தினார். இதனை அடிப்படையாகக் கொண்டு சட்ட உருவாக்கம் நிகழ வேண்டும் என்பதில் அம்பேத்கர் உறுதியாகச் செயல்பட்டார்.

•••

இந்தியா பிரித்தானியர் ஆட்சி அதிகாரத்திலிருந்து விடுபட்ட பின்னர், மொழி மற்றும் நிலஅமைப்பைச் சார்ந்திருந்த இந்தியா பல்வேறு மாநிலங்களாக கட்டமைக்கப்பட வேண்டிய தேவை உருவானது. இந்தப் பின்புலத்தில் அம்பேத்கர் 1948-1955 இடைப்பட்ட காலங்களில் மாநிலங்கள் உருவாக்கச் சிக்கல்கள் குறித்து விரிவான ஆய்வுகளை மேற்கொண்டார். நிலப்பரப்பு, மொழி, தேசிய இனங்கள், பொருளாதாரப் பண்பாட்டுப் பின்புலங்கள் முதலியவற்றைக் கணக்கில் கொண்டு மாநிலங்கள் உருவாக்கப்படுவதில் பல்வேறு சிக்கல்கள் இருப்பதை உரையாடலுக்குட்படுத்தினார். குறிப்பாக, சாதி மற்றும் மொழி சார்ந்த பல்வேறு தன்மைகளை ஆய்வு செய்து பல்வேறு பரிந்துரைகளை முன்வைத்தார்.

மொழிவாரி மாகாணங்கள் உருவாக்கப்படுவதிலுள்ள சிக்கல்களைப் பின்வருமாறு பதிவு செய்கிறார் அம்பேத்கர்:

“தம்முடைய இனம், மொழி, இலக்கியம் முதலியவற்றில் பெருமை கொள்ளும் எத்தனை குழுக்கள் உள்ளனவோ அத்தனை தேசங்கள் உருவாவதற்கு மொழிவாரி மாகாணங்கள் பாதை அமைக்கும். மத்தியச் சட்டமியற்றும் அவை தேசங்களின் கழகம்போல ஆகிவிடும். எனவே, தமது பண்பாட்டில், தமது நலன்களில் தாங்கள் தனி வேறானவை என்ற உள்ளுணர்வு பொங்கி வழியும். தனித்தனியான, இறுகி உறுதிப்பட்டுள்ள தேசியங்களின் கூட்டாக மத்திய ஆட்சிப் பிரிவு ஆகிவிடும். அரசியல் அடிப்படையில் கீழ்ப்படியாத மனப்போக்கை - அதாவது, பெரும்பான்மைக்குக் கட்டுப்பட்டு நடக்க மறுத்தல், வெளிநடப்புச் செய்தல் போன்ற மனப்போக்கை அவை வளர்க்கக்கூடும். இத்தகைய மனப்பாங்கு வளர்ச்சியடையாது என்று ஒரேயடியாகப் புறக்கணிப்பதற்கில்லை. இத்தகைய மனப்பான்மை பெருகி வளர்ந்தால், வெகு எளிதில் மத்திய அரசாங்கம் செயல்பட முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடும்”

(தொ. 38: பக். 14-15).

இவ்வகையில் மொழிவாரி மாநிலங்களை உருவாக்குவது என்பது, நிருவாக உறவுகளைப் பேண முடியாத நிலையை ஏற்படுத்தும். அலுவல் மொழியாக ஒவ்வொரு மாநில மொழியும் இருக்க வேண்டும் என்பதும் சாத்தியமற்றது என அம்பேத்கர் பதிவு செய்கிறார். அப்படியானால், அம்பேத்கர் மொழிவாரி மாநில உருவாக்கத்திற்கு எதிராகவே இருக்கிறாரென்று கூறுவதற்கில்லை. இவ்வகையான சிக்கல்கள் உருவாகும் என்று எச்சரிக்கிறார். இந்தச் சிக்கல் நடைமுறையில் இருப்பதை நாம் இன்றும் காண்கிறோம். எதிர்நிலையில் மொழிவாரி மாநிலச் சிக்கல்களைப் பேசிய அம்பேத்கர், மொழிவாரி மாநிலங்கள் உருவாவதன் நன்மைகள் குறித்தும் பேசியுள்ளார்:

“மொழிவாரி மாகாண அமைப்பில் என்னை மிகவும் வலுவாகக் கவர்ந்திழுக்கும் ஒரு முதன்மையான நன்மை உள்ளது. பன்மொழி மாகாணங்களைக் காட்டிலும் மொழிவாரி மாகாணங்கள் சனநாயகத்தை மேலும் சிறப்பாகச் செயலாற்றச் செய்யமுடியும் என்பதே, அது. சனநாயகத்துக்குத் தேவையானதை - அதாவது, சமூக ஒருபடித்தன்மையை, மொழிவாரி மாகாணம் உருவாக்குகிறது. தங்களது பொதுவான தோற்றுவாய் பற்றிய நம்பிக்கை, பொது மொழியையும் இலக்கியத்தையும் பெற்றிருத்தல், வரலாற்றுப் பொது மரபுகளைப் பெற்றிருக்கும் பெருமை, சமூகப் பழக்கவழக்கங்களில் பொது உணர்வு முதலியவற்றைத்தான் மக்களின் ஒருபடித்தன்மை சார்ந்திருக்கிறது. இந்தக் கருதுகோளை எந்தச் சமூகவியல் மாணவரும் மறுக்க முடியாது”

(தொ. 38: பக். 16).

அம்பேத்கர் மொழிவாரி மாநிலங்கள் உருவாக்கத்தின் தீமைகள், நன்மைகள் இரண்டையும் ஒரு சமூக வரலாற்று ஆய்வறிஞர் என்ற நிலையில் பதிவு செய்கிறார். 1948-1955 காலங்களில் இருந்த இந்தியச் சூழல் சார்ந்து, இரண்டு வகையான பார்வைகளும் அவரிடம் இருந்ததைக் காண்கிறோம். இன்றைய சூழலில், அம்பேத்கர் தீமையான விளைவுகள் என்று பதிவு செய்தவை, பெரிதும் பொருளற்றவையாகவே காணப்படுகின்றன. அவர் பதிவு செய்த நன்மைகள் என்பவை, இன்று மேலும் வளர்ச்சி பெற்று, புதிய சனநாயகத்தை வளர்த்தெடுத்திருக்கின்றன என்றே கருதமுடியும். இதனால் மாநில உரிமைகள் குறித்து இன்று விரிவாகப் பேசப்படுகிறது. தேசியக் கட்சிகளின்

செல்வாக்கு குறைந்து மாநிலக் கட்சிகளின் செல்வாக்கு கூடியிருப்பதைக் காணமுடிகிறது.

அம்பேத்கர் மேலே குறிப்பிட்ட மொழிவாரி மாநில உருவாக்கத்தில், அவரது மாநிலமான மராட்டியம் குறித்து விரிவான ஆய்வைச் செய்துள்ளார். மராட்டியத்தில் கூட்டமைப்பு முறைகள் எவ்வாறு செயல்படுகின்றன; அதன் விளைவுகள் எவை என்பதை விரிவான புள்ளிவிவரங்கள், நிலப்படங்கள் வழி பதிவு செய்கிறார். அந்த நிலப் பகுதியிலுள்ள பல்வேறு மொழி பேசும் மக்களை உள்ளடக்கிய மாநிலத்தை உருவாக்க வேண்டியதன் பல பரிமாணங்களைத் தெளிவுபடுத்துகின்றார்.

பிரித்தானியர்கள் காலத்தில் கல்கத்தா (இப்போது கொல்கத்தா), பம்பாய் (இப்போது மும்பை), மதராஸ் (இப்போது சென்னை) முதலிய மூன்று பெருநகரங்கள் உருப்பெற்றிருந்தன. இந்நகரங்களில் பம்பாய் மற்றும் மதராஸ், தனிமாநிலங்களாக உருப்பெறும் காலங்களில், இந்நகரங்களைத் தனியாகப் பிரித்துப் பேசும் சூழல் உருவானது. இந்த வகையில் பம்பாய் நகரை மட்டும் தனிமாநிலமாகக் கருத வேண்டும். அது குஜராத்திகளுக்குச் சொந்தமானது (சென்னை ஆந்திரர்களுக்குச் சொந்தமானது என்ற வாதம்) என்ற முறையில் முன்னெடுக்கப்பட்டது. இந்த உரையாடலின் பல்வேறு விவரணங்களை விரிவாக அம்பேத்கர் பதிவு செய்கிறார். பம்பாயைப் பற்றிய இந்த உரையாடலை வரலாற்றுப் பின்புலம், புவியியல் கூறுகள் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு விவாதிக்கிறார்.

பம்பாய் நகரில் அன்று பெரிய வணிகர்களாகவும் மிகுந்த செல்வாக்கு மிக்கவர்களாகவும் குஜராத்திகள் இருந்தனர். பம்பாய் நகரின் தொல்குடிகள் குஜராத்திகள் என்று பேசப்பட்டது. குஜராத்திகளின் வணிகமையம், குஜராத்திகளுக்கு உரிய நகரம் பம்பாய் என்று முன்வைக்கப்பட்டது. இவ்வாறான பல்வேறு நிலைகள் குறித்து அம்பேத்கர் விரிவான உரையாடலை நிகழ்த்தினார். பம்பாய் நகரத்தில் வாழும் மக்களின் சாதி தொடர்பான இருப்புநிலை எவ்வாறு உள்ளது என்பதைப் பற்றியும் பேசுகிறார். கல்கத்தாவின் சூழலோடு பம்பாயின் சூழலை இணைத்துப் பேசுகிறார். இவ்வகையான உரையாடலின் இறுதியாக சமநிலையான வாழ்முறையை நோக்கி மாநிலங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்று வாதிடுகிறார். சிறுபான்மை வகுப்பினரை அடக்கி ஆளும் வடிவில் மாநிலங்கள் உருப்பெறக் கூடாது என்றும் பேசியுள்ளார். மொழிவாரி மாநில அமைப்பு குறித்த அம்பேத்கரின் பதிவு பின்வருமாறு அமைகிறது:

“மொழிவாரி மாநிலங்களை அமைப்பது தேவையென்பதில் ஐயமில்லை. இன்றியமையாதது என்பதிலும் ஐயமில்லை. ஆனால், எத்தகைய அடாவடித்தனத்தாலும் இதனை முடிவு செய்ய முடியாது. அதேபோல் கட்சி நலனுக்கு ஆதரவான முறையிலும் இதற்குத் தீர்வு கண்டுவிடக் கூடாது. முற்றிலும் நுண்ணறிவான முறையில்தான் இதற்குத் தீர்வுகாண வேண்டும். இவ்வாறுதான் நான் செய்துள்ளேன்; ” (தொ. 38: பக். 81)

இவ்வகையில் மொழி அடிப்படைவாதம் முன்னிலை பெறாமலும் மாநில உருவாக்கம் நிகழவேண்டும் என்று வாதிட்டார் அம்பேத்கர். தொடக்கத்தில் ஒரு மொழிக்கு ஒரு மாநிலம் என்பதை விமர்சனமாக அணுகிய அம்பேத்கர் பின்னர் பல்வேறு உலக நாடுகளை எடுத்துக்காட்டி, மொழி சார்ந்த மாநில உருவாக்கத்தை ஏற்றுக்கொள்கிறார். அவ்வாறு மொழிவாரி மாநில உருவாக்கத்திலுள்ள நடைமுறைத் தன்மைகள், பெரும்பான்மை-சிறுபான்மைச் சிக்கல்கள், அதில் அரசியல் பெரும்பான்மை, வகுப்புப் பெரும்பான்மை முதலியவை குறித்த கூர்மையான விளக்கத்தையும் தருகிறார். அப்பகுதி பின்வருமாறு அமைகிறது:

“ அரசியல் பெரும்பான்மை என்பது அதன் வர்க்க இயைபில் மாறக்கூடியது. அரசியல் பெரும்பான்மை, வளர்ச்சியால் வருவது; வகுப்புப் பெரும்பான்மை பிறப்பால் வருவது. அரசியல் பெரும்பான்மையின் கதவு எப்போதும் திறந்தே வைக்கப்பட்டுள்ளது. வகுப்புப் பெரும்பான்மையின் கதவு எப்போதும் மூடியே வைக்கப்பட்டுள்ளது. அரசியல் பெரும்பான்மையின் அரசியலை ஆக்கவோ அழிக்கவோ அனைவருக்கும் உரிமை உண்டு. ஒரு வகுப்புப் பெரும்பான்மையின் அரசியல் அந்த வகுப்பில் பிறந்த அதன் உறுப்பினர்களாலேயே உருவாக்கப்படுகிறது” (தொ. 38: பக். 144).

பிரித்தானியர்களின் ஆட்சி அதிகாரத்திலிருந்து விடுபட்ட இந்தியர் முன்னிருந்த பெரும் சிக்கல் என்பது எவ்வகையான அரசியல் கருத்துநிலையை உருவாக்கிச் சட்டமாக வடிவமைப்பது, நூற்றுக்கணக்கான மொழிகள் புழங்கும் தேசத்தில் மொழி சார்ந்த அடையாளத்தை எவ்வாறு முன்னெடுப்பது, சிறுபான்மை – பெரும்பான்மையாக உள்ள வகுப்புச் சிக்கலை எதிர்கொள்வது எவ்வாறு? என்ற உரையாடல்கள் மாநிலங்கள் உருவாக்கங்கள் நிகழ்ந்தபோது முன்னெழுந்தது. மிகவும் சிக்கலாக அமைந்த இதனை அம்பேத்கர் எவ்வாறு எதிர்கொண்டார்? தனது சொந்த மாநிலத்தின் நிலைமைகளை அடிப்படையாகக் கொண்டு இந்தியா முழுவதும் மாநிலங்களை உருவாக்குவதற்கான வழிகாட்டுதல்களை எவ்வாறெல்லாம் முன்வைத்தார் என்பதை நாம் மேற்குறித்த உரையாடல்களின் வழி அறியமுடிகிறது.

•••

**1919**ஆம் ஆண்டு பிரித்தானிய அரசு மாண்டேகு – செம்ஸ்ஃபோர்டு திட்டத்தின் மூலம் இந்தியாவில் இரட்டையாட்சியை அறிமுகப்படுத்தியது. வட்டார அளவில் உருவாகியிருந்த கட்சிகளும் இந்தியா முழுவதும் செயல்பட்ட காங்கிரஸ் கட்சியும் இரட்டையாட்சி முறையில் பங்கேற்கும் வாய்ப்பு உருவானது. இவ்வகையான ஆட்சிமுறை சார்ந்து 1935ஆம் ஆண்டு இந்திய அரசாங்கச் சட்டத்தை உருவாக்கியது. வட்டமேசை மாநாடுகளின் தொடர்ச்சியாக இதனைக் கருதலாம். 1930களின் இறுதியில் காங்கிரஸ் கட்சிக்குச் செல்வாக்கு மிகுதியானது. பல இடங்களில் ஆட்சி அமைக்கும் வாய்ப்பு உருவானது. இந்தப் பின்னணியில்தான் அண்ணல் அம்பேத்கர், 1939இல் 'கோகலே அரசியல் பொருளாதாரக் கழகம்' ஏற்பாடு செய்திருந்த உரையில், இந்தியாவில் கூட்டாட்சி குறித்த உரையை நிகழ்த்தினார். அதன் அச்சு வடிவமாக, கூட்டாட்சியா – சுதந்திரமா? எனும் நூல் உருவானது. இதில் அம்பேத்கர் இந்தியாவின் கூட்டாட்சி முறையின் பல்வேறு பரிமாணங்களை விரிவாக முன்வைக்கிறார். இந்தியச் சூழலில் கூட்டாட்சி பற்றிய அம்பேத்கரின் பதிவு பின்வருமாறு அமைகிறது:

"கூட்டாட்சியைப் பொறுத்தவரை, இந்தியப் பொதுமக்களில் பெரும்பாலானோர் ஒரு பனிமூட்டத்தில் வாழ்ந்துகொண்டிருப்பதாகவே தோன்றுகிறது. ஒரு கூட்டாட்சி வரப்போகிறது. கூட்டாட்சி என்றாலே தீங்கானது, மோசமானது என்பதற்கு மேல், இந்தக் கூட்டாட்சியின் தன்மை என்னவென்பதைப் பற்றிப் பொதுமக்களுக்குத் தெளிவானதொரு கருத்து கிடையாது. எனவே, அது குறித்த ஓர் அறிவார்ந்த கருத்தினை அவர்களால் பெற முடியவில்லை. கூட்டாட்சிக் கட்டமைப்பு குறித்த ஓர் உருவரையும் அந்த அமைப்பு பற்றிய சிறியதொரு திறனாய்வும் அடங்கிய ஒரு வெளியீடு பொதுமக்களுக்குத் தேவையாகும்" (தொ.39.பக்.12).

அம்பேத்கர் மேலே கூறியுள்ள அடிப்படையில் இந்தியாவில் கூட்டாட்சி குறித்த விரிவான உரையாடலை மேற்கொண்டிருக்கிறார். அந்த உரையாடல் பிரித்தானிய அரசு 1935 இல் உருவாக்கியுள்ள 'இந்திய அரசாங்கச் சட்டம்' எனும் வரையறைகள் சார்ந்து நிகழ்த்தப் பெறுகிறது.

இந்தியாவில் சமஸ்தானங்களின் ஆட்சி பல இடங்களில் நிகழ்கிறது. மாகாணங்கள் என்ற அடிப்படையிலும் ஆட்சி நிகழ்த்துகின்றனர். இந்த ஆட்சிகளின் மேல் மதிப்பீட்டாளராக பிரித்தானிய அரசின் ஆட்சியாளர்கள் இருக்கின்றனர். இதில் பிரித்தானியர் X இந்தியர் என்ற இரட்டையாட்சி ஒருபுறம்; சமஸ்தானங்கள் X இந்திய ஆட்சியாளர்கள் என்று இன்னொரு புறமும் இருப்பதைக் காண்கிறோம். இவ்வகையான இரட்டையாட்சி முறைகளைப் பற்றிப் பல்வேறு கோணங்களில் உரையாடுகிறார் அம்பேத்கர். இதில் ஆட்சி செய்யும் பரப்புகள், ஆட்சியாளர்களுக்குள்ள அதிகாரங்கள், ஆட்சி செய்பவருக்கும் மக்களுக்குமுள்ள உரிமைகள் முதலியவை குறித்துப் பேசுகிறார்.

இரட்டையாட்சியைப் பொறுத்தவரை, சட்டமியற்றும் அவை, ஆட்சி செய்வோர் பிரிவு, நீதித்துறை முதலியவை செயல்படுகின்றன. இவ்வகையான செயல்பாடுகள் எவ்வகையான அதிகாரங்களை நடைமுறைப்படுத்துகின்றன என்பதைப் பற்றி அம்பேத்கர் உரையாடுகிறார். கூட்டாட்சியின் சட்டமியற்றும் அதிகாரங்களின் மூலம் 'கூட்டாட்சிப் பட்டியல்', 'மாகாணப் பட்டியல்', 'பொதுப் பட்டியல்' என்ற மூன்று பட்டியல்களைச் சார்ந்துதான் அதிகாரங்கள் வரையறுக்கப்படுகின்றன. யார் யாருக்கு எவ்வகையான அதிகாரங்கள் உள்ளனவென்பதும் வரையறுக்கப்பட்டிருப்பதை அம்பேத்கர் தெளிவுபடுத்துகிறார்.

கூட்டாட்சியின் தன்மை என்பது அடிப்படையில் ஒன்றியமாக அமைகிறது. இந்த ஒன்றியங்களின் செயல்பாடுகளைச் சார்ந்து அம்பேத்கர் எழுப்பும் கேள்விகள் முக்கியமானவை. இன்றும் அவை உயிர்ப்புடன் இருப்பதாகக் கருதலாம். அவை வருமாறு:

"1. இந்தக் கூட்டாட்சி ஒரு நிரந்தர ஒன்றியமா?
2. கூட்டாட்சி அரசாங்கத்துடன் அதன் அலகுகளின் உறவு முறை என்ன?
3. அலகுகளுக்கிடையேயான உறவுமுறை என்ன?
4. இந்த அலகுகளின் கீழுள்ள மக்களிடையேயான உறவு முறை என்ன?" (தொ. 39: பக். 47)

இன்றைய சூழலிலும் மத்தியில் நடைபெறும் ஆட்சி ஒன்றியங்களின் கூட்டிணைவு என்றே கருதுகின்றனர். அதில் மேற்குறித்த கேள்விகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்தக் கேள்விகளுக்கு விடையாக, கூட்டாட்சித் தத்துவத்தின் பல பரிமாணங்கள் அம்பேத்கரால் உரையாடலுக்குட்படுவதைக் காண்கிறோம். சட்டமியற்றுதல் / நிருவாக முறைகள் / நிதித் தொடர்புகள் முதலிய பல கூறுகளில் மேற்குறித்த தன்மை சார்ந்து அம்பேத்கர் பேசுகிறார். தொடர்ந்து கூட்டாட்சியின் நன்மைகள், தீமைகள் குறித்தும் அம்பேத்கர் பேசுகிறார். நன்மைகளாகப் பின்வருவனவற்றைச் சொல்கிறார்:

ஒருமைப்பாட்டைக் கட்டமைக்க கூட்டாட்சி உதவும்; எதேச்சதிகார ஆட்சி முறைமை என்பது தவிர்க்கப்பட்டு, சனநாயகத் தன்மை உருப்பெறும்; சமூகத்தில் வாழும் அனைவருக்கும் ஒரு வகையான

பொறுப்புத் தன்மை உருப்பெறும். அந்தப் பொறுப்புத் தன்மை பற்றி அம்பேத்கர் செய்துள்ள பதிவு:

“கூட்டாட்சித் திட்டத்தில் கூறப்படும் பொறுப்புமுறை,

1919 ஆம் ஆண்டுச் சட்டத்தின்படி கொண்டுவரப்பட்ட இரட்டை ஆட்சிமுறையைப் போல உள்ளதென்று நான் கூறியிருந்தேன். ஆயினும், இந்த இரண்டையும் ஒப்பிட்டுப்பார்த்தால் கூட்டாட்சித் திட்டத்தில் இரட்டை ஆட்சிமுறையைவிடக் குறைவான பொறுப்பே அளிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இரட்டை ஆட்சிமுறையில் இல்லாத இரு கூறுகள் கூட்டாட்சித் திட்டத்தில் புகுத்தப்பட்டுள்ளன; இரட்டை ஆட்சிமுறையில் இருந்த ஒரு பிரிவுக் கூறு கூட்டாட்சித் திட்டத்தில் இல்லை. இவ்வாறு புதிதாகச் சேர்க்கப்பட்ட இரு கூறுகளும், முன்பு இருந்து இப்போது இல்லாமல் போயிருக்கும் இரு கூறுகளும் என்ற நிலையில் கூட்டாட்சித் திட்டத்தின் இரட்டை ஆட்சி, மாகாணங்களின் இரட்டை ஆட்சியைவிட மோசமாகியிருக்கிறது”

(தொ. 39: பக். 95).

இவ்வகையில் கூட்டாட்சித் திட்டத்தின் பொறுப்பு குறித்து அம்பேத்கர் பேசுகிறார். கூட்டாட்சித் திட்டத்தின் நல்விளைவுகளைப் பற்றிப் பேசிய அம்பேத்கர், கூட்டாட்சியை முழுமையாகப் புரிந்துகொள்ள அதன் மறுபக்கத்தையும் பேசுகிறார். அத்தன்மை கொடிய தீமையாக அமைவதைச் சுட்டிக்காட்டுகிறார்.

கூட்டாட்சித் திட்டத்தில் சுதந்திரம், குடியுரிமை, சனநாயக நடைமுறை சார்ந்த தேர்தல்கள் இடம்பெற வேண்டும். மாகாணங்களுக்கும் சமஸ்தானங்களுக்கும் கூட்டாட்சியில் சமமான முறையில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு இல்லையெனில், கூட்டாட்சி என்பது இந்தியாவின் ஒற்றுமையைச் சிதைத்து, பிரிவினைப் போக்குகளுக்கு வழிவகுக்கும் என்றும் அம்பேத்கர் எச்சரிக்கை விடுக்கிறார்.

கூட்டாட்சித் திட்டத்தின் அழிவு என்பது சமஸ்தானங்களின் நடைமுறைகளால் கட்டமைக்கப்படுவதாகக் கூறப்படுகிறது. அவ்வாறெனில், சமஸ்தானங்களை என்ன செய்யவேண்டும், சமஸ்தானங்களை எவ்வாறு அணுகுவது என்பது குறித்து அம்பேத்கர் பதிவு வருமாறு:

“இந்திய சமஸ்தானங்களைச் சீரமைப்பு செய்வது அரசியல் சிக்கல் அல்ல; இது முற்றிலும் நிருவாகம் தொடர்பான சிக்கல் என்பதே என் கருத்து. இது தவிர்க்கப்பட முடியாத சிக்கலும்கூட. இதை எதிர்கொண்டு சீரமைக்காமல் இருப்பது சமஸ்தானங்களின் கோடிக்கணக்கான மக்களைத் துன்பங்கள் நிறைந்த வாழ்க்கையில் பாதுகாப்பற்ற நிலையில் உழன்றுகொண்டிருக்க விடுவதாகும். நான் சொல்லும் வழி ஒன்றும் புரட்சிகரமானது அல்ல. ஒரு சமஸ்தான மன்னருக்கு ஓய்வூதியம் கொடுத்து நீக்கிவிட்டு, அவரது சமஸ்தானப் பகுதியை எடுத்துக்கொள்வது முற்றிலும் சட்டப்படியான செயலே. நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின் கீழ் பொதுச் செயல்களுக்காகத் தனியார் உரிமைகளையும் உடைமைகளையும் அரசாங்கம் எடுத்துக்கொள்வது நமக்குத் தெரிந்ததே”

(தொ. 39: பக். 129).

1948இல் சர்தார் வல்லபாய் படேல் (1875-1950) சமஸ்தானங்களை இணைப்பதற்கு மேற்கொண்ட செயல், 1972இல் இந்திராகாந்தி அம்மையார் (1917-1984) கொண்டு வந்த மன்னர் மானியம் ஒழிப்பு முதலிய பல்வேறு நடவடிக்கைகள் தொடர்பான கருத்துருக்களை அம்பேத்கர் 1939இல் பதிவு செய்திருப்பதைக் காண்கிறோம். இந்தியாவிலுள்ள நிலைமைகள் குறித்த துல்லியமான கணிப்புகளை அம்பேத்கர் செய்திருப்பதை அவரது பதிவுகளில் காணமுடிகிறது.

சமஸ்தானங்கள் இல்லாத கூட்டாட்சியை நடைமுறைப்படுத்துவது குறித்தும் அம்பேத்கர் விரிவாகப் பேசியுள்ளார். சமஸ்தானங்களைப் பற்றிக் கவலைப்படாமல், வளர்ந்து வரும் பரிணாமக் கருத்து மரபுகளை முன்னெடுத்து சமஸ்தானங்கள் இல்லாத கூட்டாட்சியை இந்தியா உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று எழுதியுள்ளார். இத்தன்மை பிற்காலங்களில் காங்கிரஸ் கட்சித் தலைவர்களின் முன்னெடுப்பால் நடைமுறைப்படுத்தப்பட்டதைக் காண்கிறோம்.

கூட்டாட்சி முறையின் முடிவுரைப் பகுதியில் அரசியல்வாதிகளின் செயல்பாடுகளை விமர்சனம் செய்கிறார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இரானடேயின் அரசியல் செயல்பாடுகளோடு காந்தியின் செயல்களை ஒப்பிட்டுப் பேசுகிறார், அம்பேத்கர். காந்தி கால அரசியல்வாதிகள் இரானடே போல் இல்லையென்ற தமது ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார். மேதகு காந்தியாரைப் பற்றி அம்பேத்கர் பதிவு பின்வருமாறு:

“இந்த காந்தி காலம் இந்தியாவின் இருண்டகாலம் என்பதில் எனக்கு ஐயமில்லை. மக்கள் தங்கள் இலட்சியங்களை வருங்காலத்தில் காண்பதற்குப் பதிலாகப் பழைமைக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் காலம் இது. மக்கள் சொந்தமாகச் சிந்தனை செய்வதை நிறுத்திவிட்ட காலம் இது. சிந்தனை செய்வதை நிறுத்தி விட்டதைப் போலவே அவர்கள் படிப்பதையும் வாழ்க்கையின் உண்மைகளை ஆராய்வதையும் நிறுத்திவிட்டார்கள்.”

(தொ. 39: பக்.155)

இவ்வகையில் இந்தியாவில் உருவான இரட்டையாட்சி, கூட்டாட்சி முதலிய தன்மைகளைத் தமது கண்ணோட்டத்தில் பதிவு செய்துள்ளார். உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளின் ஆட்சிமுறைமைகளையும் இந்தியாவின் ஆட்சிமுறை மற்றும் ஆட்சியாளர்கள் குறித்தும் விரிவான பதிவை 1939இல் செய்திருக்கிறார். அவை பிற்காலத்தில் நிதர்சனமான உண்மை நிகழ்வுகளாகியிருப்பதைக் காணமுடிகிறது.

•••

பிரித்தானியர் ஆட்சி அதிகாரத்திலிருந்து விடுபட்ட இந்தியா, ஓர் அரசமைப்பு வாயிலாக இந்தியாவை ஆட்சி செய்யும் நிலை 1948இல் உருவானது. இதன் விளைவாக, இந்திய அரசமைப்பு உருவானது. அதன் முகப்புரை நம்முடைய அரசமைப்புப் பேரவையில், '1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்' என்ற பதிவு உள்ளது. இவ்வகையான பதிவு உருப்பெறுவதற்கு முன்னோடியாகப் பல நிகழ்வுகள் நடைபெற்றன. அதில் அம்பேத்கர் நேரடியாகப் பங்கு பெற்றார். அந்தப் பின்புலத்தில், மாநிலங்கள் உருப்பெறும்போது, சிறுபான்மையினர் எவ்விதம் நடத்தப் பெற வேண்டும் என்பதற்கான வரைவை (articles) அம்பேத்கர் உருவாக்கினார். இந்த வரைவு அகில இந்தியப் பட்டியல் சாதியினர் கூட்டமைப்பின் சார்பாக, பட்டியல் சாதியினரின் நலன்களுக்கான பாதுகாப்பு சார்ந்தும் அரசமைப்புப் பேரவைக்கு வழங்கப்பட்டது. இந்திய அரசமைப்புச் சட்டம் எவ்வகையான முறையில் பின்னர் எழுதப்பட்டதோ அந்த முறையை 1947இல் அம்பேத்கர் பின்பற்றி இந்த வரைவை உருவாக்கியுள்ளார்.

இந்த வரைவில் குடிமக்களின் உரிமைகள், சிறுபான்மையினரின் உரிமைகள் மற்றும் பட்டியல் சாதியினரின் உரிமைகள் குறித்த கருத்துகளைப் பதிவு செய்தார். பட்டியல் சாதி மக்களை சிறுபான்மையினர் என்ற பிரிவில் சேர்க்கக்கூடாது என்று வாதிடப்பட்டது. இதனை மறுத்து, பட்டியல் சாதி மக்கள் சிறுபான்மையினர் என்ற கருத்துநிலையை அம்பேத்கர் முன்வைத்துள்ளார்.

இந்த வரைவில் ஒரு முகப்புரை (Preamble) இடம்பெற்றுள்ளது. இந்திய மாநிலங்கள் உருவாக்கப்படும்போது மேற்கொள்ள வேண்டியவை தொடர்பான வரைவுகளை அம்பேத்கர் வகுத்தளித்துள்ளார்.

இந்திய ஒன்றியத்திற்குள் இந்தியாவிலுள்ள சமஸ்தானங்களை இணைப்பது தொடர்பான விரிவான உரைகள் இடம்பெற்றுள்ளன. இந்தியக் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் குறித்த வரைவுகளை உருவாக்கித் தந்துள்ளார். அடிப்படை உரிமைகள் தாக்குதலுக்குள்ளாகும்போது எவ்வகையான தீர்வுகளை முன்வைப்பது என்பது குறித்த வரைவுகள் உள்ளன. உரிமைகள் மீதான தாக்குதல்களான, நிருவாகக் கொடுமை, சமத்துவமின்மை, பாகுபாடு, பொருளாதாரச் சுரண்டல் முதலியவற்றை எதிர்கொள்ள வேண்டிய வரைவுகளை அம்பேத்கர் இதில் உருவாக்கித் தந்துள்ளார்.

மாநிலங்கள் உருவான பின்பு சிறுபான்மை மக்களின் பாதுகாப்புக்குரிய பல பிரிவுக் கூறுகளை வரைவுகளாகச் செய்துள்ளார். வகுப்புவாத ஆட்சிப் பிரிவுக்கு எதிரான பாதுகாப்பு, சமூக மற்றும் அதிகார கொடுங்கோன்மைக்கு எதிரான பாதுகாப்பு, சமூகப் புறக்கணிப்பிலிருந்து பாதுகாப்பு முதலிய பல கூறுகள் இந்த வரைவில் இடம்பெற்றுள்ளன.

பட்டியல் சாதியினருக்கான பாதுகாப்புகள் குறித்த விரிவான வரைவை அம்பேத்கர் உருவாக்கியுள்ளார்.

சட்டமியற்றும் அவைகளில் சார்பாண்மை உரிமை, நிருவாகத்தில் சார்பாண்மை உரிமை, அரசுப் பணித்துறைகளில் சார்பாண்மை உரிமை முதலியவற்றை பட்டியல் சாதி மக்களுக்கு எவ்விதம் வழங்க வேண்டும் என்ற வரைவை உருவாக்கியுள்ளார். பட்டியல் சாதி மக்களுக்கான சிறப்புக் கூறுகளாக, உயர்கல்விக்கான ஏற்பாடுகள், புதிய குடியேற்றத்திற்கான ஏற்பாடுகள் முதலியவற்றை விரிவாக வழங்கியுள்ளார்.

இந்தியச் சமஸ்தானங்களில் வாழும் பட்டியல் சாதி மக்களுக்கான பாதுகாப்பு குறித்தும் வரைவை உருவாக்கியுள்ளார். மேற்குறித்த அனைத்து வரைவுகளுக்கு விரிவான விளக்கக் குறிப்புகளையும் புள்ளிவிவரப் பட்டியல்களையும் பல்வேறு அட்டவணைகளாக அம்பேத்கர் கொடுத்துள்ளார்.

இவ்வகையில், 1947இல் ஆட்சி அதிகாரம் மாற்றம் பெற்று, 1948இல் ஆட்சி அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் அரசமைப்புச் சட்ட விதிகளை உருவாக்கத் தொடங்கினர். 1949இல் சட்டப்படியாக அறிவித்தனர். இந்த நடைமுறையில், 1947இலேயே சிறுபான்மை மக்கள் என்ற பிரிவில் பட்டியல் சாதி மக்களையும் இணைத்து அம்பேத்கர் உருவாக்கியுள்ள வரைவுகள், பின்னர் எவ்வகையில் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ளன, பின்னர் நடைமுறையில் எவ்வாறு உள்ளன என்பது குறித்த ஆய்வை மேற்கொள்வது மிகவும் அவசியமான பணியாகும். அது நிகழ்த்தப் பெற்றிருப்பதாகக் கருத முடியவில்லை. அதனை நிகழ்த்தும் தேவை இப்போது நம்முன் உள்ளது.

●

**கட்டுரையாளர்: முதன்மைப் பதிப்பாசிரியர்,**
**அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் மக்கள் பதிப்பு.**

NCBH

## நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடாக

# மீள் புரிதல் நோக்கில் செவ்வியல் நூல்கள்

## தமிழாய்வு வரலாற்றில் ஓர் அரிய முயற்சி!

**செயல் வரைவு தயாரித்தல் - வரைவைக் கலந்துரையாடலுக்கு உட்படுத்துதல் – வரைவு செம்மையாக்கம் பெறல் – அறிஞர் தெரிவிற்கான கலந்துரையாடல் – கட்டுரை பெறுதல் - விழியினர் விவாதத்திற்குட்படுத்துதல் - மீளெழுதுகைக்கு ஆட்படுத்துதல் – செம்மையுறாக் கட்டுரைகளைத் தவிர்த்தல் – இணையவழி அமர்வில் வாசித்தல் – கலந்துரையாடலுக்கு உட்படுத்துதல் - மீண்டும் செம்மையாக்கப்பெறல் எனப் பல கட்ட முன்னெடுப்புகள்வழி உருக்கொண்ட முயற்சியில் விளைந்தவை.**

தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, முத்தொள்ளாயிரம் ஆகிய நூல்களைப் பதிப்பியல், யாப்பியல், அணியியல், மொழிபெயர்ப்பியல், உளவியல், சமூகவியல், மானுடவியல் எனப் பல்வேறு நிலைகளில் தக்க அறிஞர்கள் ஆராய்ந்து எழுதியவை.

**60க்கும் மேற்பட்ட ஆய்வுரைகள்**
**1300 பக்கங்கள்**
**உயர்தரத் தாளில் 12 தொகுதிகளுக்கும் சேர்த்து**
**விலை ரூ. ~~1631~~/-**
**முன்வெளியீட்டுத் திட்டத்தில் ரூபாய் 1000/- மட்டுமே.**
**விரைவில் முன்பதிவு செய்திடுவீர்!**

பயணக் கட்டுரை

# சிங்கப்பூர் நிகழ்வுகளும் நினைவுகளும்




சிங்கப்பூரில் தமிழ்மொழியின் இருப்பையும் சிறப்பையும் நிலை நாட்டுவதற்கு அங்குள்ள தமிழ் அமைப்புகளும் தமிழர்களும் பன்முக முயற்சிகளை மேற்கொள்கின்றனர். சிங்கப்பூர் அரசும் தமிழர்களின் முன்னெடுப்புகளுக்குத் தோள் கொடுத்து ஊக்கப்படுத்துகிறது. உடன் நிற்கிறது. ஆண்டுதோறும் ஏப்ரல் மாதங்களில் சிங்கப்பூர் அரசின் ஆதரவுடன் அங்கு தமிழ்மொழி விழா சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு தமிழ்மொழி விழா நிகழ்வுகளில் பங்கேற்க அழைக்கப்பட்டிருந்தேன். ஏப்ரல் 18ஆம் தேதி சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்று 23ஆம் தேதி அதிகாலை ஈரோடு வந்து சேர்ந்தேன். 19ஆம் தேதி காலையில் சென்றடைந்த பின்னர் அன்று மாலையே முதல் முக்கிய நிகழ்வில் பங்கேற்றேன். அது அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் சங்க சிங்கப்பூர் கிளை சார்பில் நடைபெற்ற தமிழ்மொழி விழா. சிங்கப்பூரில் முக்கிய தமிழ் விழாக்கள் நடைபெறுகிற மிகவும் விசாலமான உமறுப்புலவர் அரங்கில் நடைபெற்றது.

அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் சிங்கப்பூரில் ஏராளமானோர் உள்ளனர். அவர்கள் நல்ல வேலைகளிலும், சிலர் சுயமாகத் தொழில் செய்து கொண்டும் உள்ளனர். 1998லேயே அவர்களுக்கான தனி அமைப்பைத் தொடங்கி தொடர்ந்து முறையாக இயங்கி வருகின்றனர். சிங்கப்பூரின் தமிழ் வளர்ச்சிக்காகவும், தமிழ்க் குடும்ப மாணவர்களின் தமிழ் மற்றும் தனித்திறன்கள் மேம்பாட்டுக்காகவும், ஒட்டுமொத்த சிங்கப்பூர் தமிழ் மக்களிடையே தமிழ் இலக்கியத்தையும், தமிழ்ச் சிந்தனையையும் வளர்க்கும் எண்ணத்தோடும் சிங்கப்பூர் அரசின் அமைப்பாகிய வளர்தமிழ் இயக்கத்தின் ஒருங்கிணைப்பில் அண்ணாமலைப் பல்கலைக்கழக

**த. ஸ்டாலின் குணசேகரன்**

முன்னாள் மாணவர்கள் சங்கத்தால் இந்நிகழ்வு நடத்தப்படுகிறது.

வளர்தமிழ் இயக்கம் என்ற அமைப்பை சிங்கப்பூர் அரசு 2000ஆம் ஆண்டில் தொடங்கியது. தற்போதைய குடியரசுத் தலைவராக விளங்கும் இலங்கைத் தமிழர் தர்மன் சண்முகரத்னம், மேனாள் துணைப் பிரதமர் பேராசிரியர் ச. ஜயக்குமார், முன்னாள் அமைச்சர்கள் டாக்டர் பாலாஜி சதாசிவன், எஸ். ஈஸ்வரன், கா. சண்முகம் உள்ளிட்ட முக்கிய அரசியல் மற்றும் கல்வி சார்ந்த ஆளுமைகள் வளர்தமிழ் இயக்கத்தின் மதியுரைஞர்களாக இருந்துள்ளனர்.

சிங்கப்பூரில் செயல்பட்டு வரும் அனைத்துத் தமிழ் அமைப்புகளின் நிர்வாகிகளும் இந்நிகழ்வில் பங்கேற்று நிகழ்வைச் சிறப்பித்தனர். முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் தலைவர் பெ. மூர்த்தி நிகழ்வுக்குத் தலைமை வகித்தார். 90 வயது நிரம்பிய சிங்கப்பூரின் மூத்த தமிழறிஞரும் அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர் மற்றும் பேராசிரியரும் இவ்வமைப்பின் முன்னாள் தலைவருமான பேராசிரியர் சுப. திண்ணப்பன் அவர்கள் எனக்கு முன்பாக சுமார் 15 நிமிடங்கள் தனது வயது மற்றும் உடல் நிலையையும் பொருட்படுத்தாது மேடையில் நின்றவாறு பேசினார்.




தமிழ் மொழி விழாவில் சிங்கபூர் அரசு மற்றும் தமிழ் ஆளுமைகளுடன்...

அவரையடுத்து 'ஈடுபாட்டுடன் பாடுவோம்' என்ற தலைப்பில் சுமார் ஒரு மணி நேரம் உரையாற்றினேன். 'ஈடுபாடு ' என்பது வளர்தமிழ் இயக்கம் இந்த ஆண்டின் தமிழ்மொழி விழாவிற்குத் தந்த பொதுத் தலைப்பு. அச்சொல்லை உள்ளடக்கி அமைப்புகள் அவரவருக்குப் பிடித்த தலைப்பை வைத்துக் கொள்ளலாம். அதன் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட தலைப்பு.

தமிழ் மாணவர்கள் இந்நிகழ்வில் பங்கேற்று மேடையில் சொற்பொழிவுக்கு முன்னதாக நடத்திய தமிழ் மற்றும் அறிவியல் சார்ந்த நிகழ்வு அர்த்த அடர்த்தியுடனும் கலைநயத்துடனும் காணப்பட்டது. கல்வி நிலையங்களிலும் பொதுவாகவும் நிலவும் ஆங்கிலச் சூழலுக்கும் மீறி தமிழ்க் குடும்ப மாணவர்கள் தமிழில் சிறப்புடன் விளங்குவதற்கு அங்கு செயல்பட்டு வரும் தமிழ் அமைப்புகளின் இத்தகைய சிறப்பு முயற்சிகளே பிரதானக் காரணமாக விளங்குகின்றன.

ஏற்பாடும், நடந்த விதமும், திரளான மக்கள் பங்கெடுப்பும் நிகழ்ச்சியை உயிர்ப்புடன் இருக்கச் செய்தன. தமிழ்மொழி விழாவின் சிறப்பு வருகையாளர்களாக சிங்கப்பூர் நாடாளுமன்ற முன்னாள் நியமன உறுப்பினர்கள் இரா. தினகரன், முகமது இர்சாத் ஆகியோரும், சிங்கப்பூர் அரசு வளர்தமிழ் இயக்கத் தலைவர் நசீர்கனி, தமிழ் வளர்ச்சிக்குழு இயக்குநர் சிவகுமார் விஸ்வநாதன், சிங்கப்பூர் கட்டடக் கட்டுமான வாரிய ஆணையர் தனபால் காளியண்ணன் ஆகியோர் பங்கேற்றனர். முன்வரிசையில் அமர்ந்திருந்த இவர்கள் அனைவரும் பரிசளிக்கும் நிகழ்வுக்காக மேடைக்கு அழைக்கப்பட்டனர்.

நிகழ்ச்சி முடிந்த இரண்டாம் நாள் அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் மாணவர்கள் சங்க நிர்வாகிகளும் முக்கிய உறுப்பினர்களும் அடங்கிய கூட்டமொன்றை தனி அரங்கில் ஏற்பாடு செய்து அதற்கு எம்மை அழைத்திருந்தனர். அக்கூட்டத்தில் நடைபெற்று முடிந்த நிகழ்வு பற்றியும் அங்கு நிகழ்த்தப்பட்ட எமது உரை பற்றியும் ஏறத்தாழ அனைவருமே கருத்துத் தெரிவித்தனர். அக்கூட்டத்திலும் உரை நிகழ்த்தப் பணித்தனர். அங்கு எமது முக்கால் மணிநேர உரைக்குப் பிறகு பலர் கேள்விகள் கேட்டனர். 'ஸ்டாலின்' என்ற பெயர் வரக் காரணம் என்னவோ? என்பதிலிருந்து விதவிதமான கேள்விகள் கேட்கப்பட்டன. தங்களது மகிழ்வையும் நன்றியையும் தெரிவிக்கும் விதத்தில் விருந்துடன் முடிந்தது அந்நிகழ்வு.

ஏப்ரல் 20ஆம் தேதி 'சிங்கப்பூர் தமிழ் இலக்கியக் களம்' அமைப்பின் சார்பில் சிங்கப்பூர் தேசிய நூலக அரங்கில் மாலை 6 மணிக்கு 'பாரதிதாசன் விழா' நடைபெற்றது. இலக்கியக் களம் அமைப்பு 2004ஆம் ஆண்டு தமிழாசிரியர் முனைவர் இரத்தின வேங்கடேசன் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டது. 2013ஆம் ஆண்டிலிருந்து 'பாரதிதாசன் விழா'வை இவ்வமைப்பு ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தி வருகிறது. 2013இல் இவ்வமைப்பால் நடத்தப்பட்ட முதல் பாரதிதாசன் விழாவில் உரையாற்ற அழைக்கப்பட்டிருந்தேன். இலக்கியக் களம் அமைப்பின் தலைவர் முனைவர் இரத்தின வேங்கடேசன் நடத்திய அவ்விழாவினை கவிஞர் இறை. மதியழகன் உடனிருந்து ஒருங்கிணைத்திருந்தார். சிங்கப்பூரில் பாரதி விழா, பாரதிதாசன் விழா, திருக்குறள் விழா, பட்டுக்கோட்டையார் விழா, கம்பன் விழா, கண்ணதாசன் விழா என்று நடத்துவர். ஒரு விழாவை ஓர் அமைப்பு நடத்தினால் இன்னோர் அமைப்பு அதை நடத்துவதில்லை. அது அவர்களுக்குள் பின்பற்றப்பட்டு வரும் எழுதப்படாத ஒப்பந்தம். அந்த அடிப்படையில் பாரதிதாசன் விழாவை நடத்துகிற பொறுப்பை இலக்கியக் களம் ஏற்று நடத்தி வருகிறது.

நான் சிங்கப்பூரில் பங்கேற்ற முதல் நிகழ்வு 2013இல் 'சிங்கப்பூர் தமிழ் இலக்கியக் களம்' நடத்திய பாரதிதாசன் விழாதான். அப்பயணத்தின் போதே சிங்கப்பூரின் முக்கிய தமிழ் ஆளுமை நா. ஆண்டியப்பன் அவர்களின் தலைமையில் இயங்கிய கீர்த்திமிக்க அமைப்பான சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் சார்பில் நான் பங்கேற்கும் விதமாக சிறப்புக் கலந்துரையாடல் நிகழ்வொன்று மற்றொரு நாளில் தனித்துவத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அக்கலந்துரையாடலில் சிங்கப்பூரில் செயல்பட்டு வரும் அனைத்துத் தமிழ் அமைப்புகளின் நிர்வாகிகளும் அழைக்கப்பட்டிருந்தனர். அந்நிகழ்வில் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க எமது 'விடுதலை வேள்வியில் தமிழகம் 'நூல் பற்றியும் 'மக்கள் சிந்தனைப் பேரவை' குறித்தும் ' ஈரோடு புத்தகத் திருவிழா' மற்றும் அதிலுள்ள 'உலகத்தமிழர் படைப்பரங்கம்' பற்றியும் மிகவும் விரிவாகப் பேசினேன். உரை முடிந்ததும் கலந்து கொண்டவர்களில் பலர் கேட்ட கேள்விகளுக்கும் பதிலளித்தேன். இந்த முதல் பயணத்தின் போதே நேதாஜி சிங்கப்பூரில் கால் பதித்த வரலாற்றுத் தடங்களையும் சிங்கப்பூரின் சிற்பி லீ குவான் யூ அவர்களின் அரசியல் வரலாற்றையும் அறிந்து கொள்ளும் விதத்தில் எனது பயணத் திட்டத்தை வடிவமைத்திருந்தேன். சின்னச் சின்ன நிகழ்வுகளில் பங்கேற்பது, பல முக்கியத் தமிழ் ஆளுமைகளைச் சந்திப்பது, சிங்கப்பூரின் வரலாறு, பொருளாதார வளர்ச்சி, பன்முகத்தன்மை, அரசியல், ஆட்சிமுறை ஆகியவற்றை அறிந்து கொள்வதில் ஆர்வம் செலுத்தினேன். இதற்காக நான் சந்தித்த அனைவருமே முழு ஈடுபாட்டுடன் ஒத்துழைத்தனர்; உதவினர்.




பாரதிதாசன் விழாவில் தனித்திறன்மிக்க மாணவிக்குப் பரிசளித்தல்

சிங்கப்பூரைப் பற்றி சில நூல்களை ஏற்கெனவே வாசித்திருந்தாலும், ஏழு நாட்கள் நேரில் பார்த்தலும் படித்தலும் அந்நாட்டைப் பற்றியான ஒரு புரிதலை ஏற்படுத்தின. அப்பயணத்தின் போதே மலேசியவுக்குச் எழுத்தாளர் சை. பீர்முகமது அவர்களின் அழைப்பின் பேரில் மலேசியா சென்றிருந்தேன். அங்கு போய்ச் சேர்ந்தவுடன் அவரின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பு நான் எதிர்பாராதது. அடுத்த நாள் அத்தனை தமிழ் இதழ்களிலும் எமது வருகை குறித்தும் செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்த கருத்துகளைப் பற்றியும் விரிவான செய்திகள் வெளிவந்திருந்தன.

இரண்டாம் நாள் மாலை மலேசியாவிலுள்ள துன் சம்பந்தம் நிலைய அரங்கில் நடைபெற்ற சிறப்புமிகு இலக்கியக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினேன். பின்னர் சிங்கப்பூருக்குத் திரும்பி


வந்து உடன் இந்தியாவுக்குத் திரும்பினேன். அதன் பிறகு நான்கரை மாதங்களில் சிங்கப்பூர் மக்கள் கவிஞர் மன்றத்தின் சார்பில் 2014 மே 1 ஆம் தேதி சிங்கப்பூரில் திறந்தவெளி மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த பிரம்மாண்ட அலங்கார அரங்கில் நடைபெற்ற மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் விழாவில் பங்கேற்று ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் முன்னிலையில் ' பாட்டெழுதி எமைக் கவர்ந்த பாட்டாளி ' என்ற தலைப்பில் மிக நீண்ட உரை நிகழ்த்தும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றது.

மே 4ஆம் தேதி 'சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகம்' நடத்திய 'கதைக்களம்' நிகழ்வில் பங்கேற்று ‘கதை கதையாம் காரணமாம்’ எனும் தலைப்பில் ஒரு தனி உரை நிகழ்த்தினேன். தமிழ்க் கதைகளின் தோற்றம் வளர்ச்சி, சிறுகதை, நாவல், தமிழ்ப் படைப்பாளிகளின் அணுகுமுறை உள்ளிட்ட பல தமிழ்க் கதையம்சங்களை விளக்கிப் பேசினேன். முழுமையான இலக்கிய உரை. அதன் பிறகு ஓராண்டாவதற்கு முன்பு 2015 ஏப்ரலில் சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் தலைவர் நா. ஆண்டியப்பன் அவர்களின் அழைப்பின் பேரில் சிங்கப்பூருக்குச் சென்று எழுத்தாளர் கழகத்தின் சார்பில் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிற முத்தாய்ப்பான முத்தமிழ் விழாவில் பங்கேற்று உரையாற்றினேன். சிங்கப்பூரில் நடைபெறுகிற மிக முக்கிய தமிழ் விழா அது. ஏப்ரல் 11இல் உமறுப்புலவர் அரங்கில் நடைபெற்றது.

அடுத்த நாள் ஏப்ரல் 12 ஆம் தேதி 'சிங்கப்பூர் தமிழ் இலக்கியக் களம்' சார்பில் ‘2015 ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழா’ என்ற தலைப்பில் ஒரு சிறப்புக் கலந்துரையாடல் நிகழ்வொன்றை அரிதின் முயன்று ஏற்பாடு செய்திருந்தனர். ஈரோடு புத்தகத் திருவிழாவின் நோக்கம், சிறப்பு அம்சங்கள் உள்ளிட்ட அனைத்தையும் ஆழமாக எடுத்துரைக்கக் கேட்டுக் கொண்டதோடு மக்கள் சிந்தனைப் பேரவையின் இதர செயல்பாடுகள் பற்றியும் விரித்துரைக்க வேண்டினர். அவ்வாறே செய்தேன். என்னுடைய உரைக்குப் பின்னர் பல ஆரோக்கியமான கேள்விகளைக் கேட்டு வந்திருந்தோர் தெளிவடைந்தனர்.

2013இல் ஒரு சொற்பொழிவாளனாக மட்டுமே முதல் முறையாக சிங்கப்பூருக்கு அழைக்கப்பட்டிருந்தேன். என்னுடைய உரைகள், ' விடுதலை வேள்வியில் தமிழகம் ' உள்ளிட்ட என்னுடைய பல நூல்கள் என்று அடுத்தடுத்துச் சென்ற சிங்கப்பூர் ஆர்வலர்கள் - புத்தகத் திருவிழா பற்றியும், அங்குள்ள உலகத் தமிழர் படைப்பரங்கம் குறித்தும் தன்னார்வத்துடன் தெரிந்து கொண்டனர். நான் எந்த இடத்திலும் யாரொருவரிடமும் பேரவை பற்றிச் சொல்லி இவ்வாறான கூட்டங்கள் ஏற்பாடு செய்யச் சொல்லவும் இல்லை. அது குறித்து நான் எனக்குள் கூட எண்ணிப் பார்க்கவுமில்லை. அவர்களே படிப்படியாக அறிந்து கொண்டும், சிலர் ஈரோடு புத்தகத் திருவிழாவிற்கு நேரடியாக வந்து பார்த்து கிடைத்த அனுபவத்தின் விளைவாகவும், இணையதளம் மூலமாகக் கிடைத்த தகவல்களைக் கொண்டும், கேள்விப்பட்டும் தன்னெழுச்சியாக செய்யப்பட்ட ஏற்பாடுகளே இவையனைத்தும்.

2015இல் சிங்கப்பூர் முன்னாள் குடியரசுத் தலைவர் எஸ்.ஆர். நாதன் அவர்களை நேரடியாக அவரது இல்லத்தில் சந்தித்து உரையாடும் வாய்ப்பை நா.ஆண்டியப்பன் ஏற்படுத்திக் கொடுத்தார். அச்சந்திப்பு எனது பயணத்தை மேலும் அர்த்தமுள்ளதாக்கியது. அவரைச் சந்திக்கும் முன்பே 'உழைப்பின் உயர்வு' என்ற 678 பக்கங்களைக் கொண்ட அவரின் சுயசரிதை நூலை வாசித்திருந்தேன். அதனால் ஏற்பட்ட ஈர்ப்பே அவரைச் சந்திக்கத் தூண்டியது எனலாம்.





2016 செப்டம்பர் 17, 18, 24, 25 ஆகிய 4 நாட்கள் சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் நாற்பதாம் ஆண்டு விழா மிகச் சிறப்பாக நடந்தது. தொடக்கநாள் உரையாற்றுவதற்காக நான் அழைக்கப்பட்டிருந்தேன். அனைத்து நிகழ்வுகளிலும் பங்கேற்க வேண்டுமென்றும்

நிறைவு நாளில் நடைபெறவுள்ள முத்தாய்ப்பான சிறப்பு நிகழ்விலும் விருந்திலும் கலந்து கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்பட்டதால், அந்த முறை சுமார் 10 நாட்களுக்கும் மேல் சிங்கப்பூரில் இருக்கும் நிலை ஏற்பட்டது.

பல்கலைக்கழகங்கள், வரலாற்றுச் சின்னங்கள், அருங்காட்சியகங்கள், பசுமைப் பிரதேசங்கள், கடல் நீரைக் குடிநீராக்கும் திட்ட நிலையங்கள், கடல் பகுதியை நிரப்பி அவற்றின் மேல் பல மாடிக் கட்டடங்கள் எழுப்பப்பட்ட அதிசயங்கள், துறைமுகம், நாடாளுமன்றம் நடக்கும் முறை, லீ குவான் யூ வரலாற்றுச் சிறப்புக் கண்காட்சி, பதினாறு அடுக்குகளுக்கும் மேல் உள்ள மிக பிரம்மாண்டமான சிங்கப்பூர் தேசிய நூலகம் என்று சிங்கப்பூரின் அச்சாணியாகவுள்ள கேந்திரமான பகுதிகளைப் பார்க்கவும் அதிக நேரம் ஒதுக்கி அவற்றைப் பற்றி பிறரிடம் ஆழ்ந்து விவாதிக்கவும் வாய்ப்புகள் அமைந்தன.

2013இல் முதன்முறையாக அழைத்த 'சிங்கப்பூர் தமிழ் இலக்கியக் களம்' அமைப்பின் தலைவர் முனைவர் இரத்தின வேங்கடேசன் அவர்கள்தான் இந்த ஆண்டு 2026இல் அதே பாரதிதாசன் விழாவுக்கு என்னை அழைத்திருந்தார். சிங்கப்பூர் நாடாளுமன்ற முன்னாள் நியமன உறுப்பினர் இரா. தினகரன் பரிசுகள் வழங்கி உரையாற்றினார். 'பாவேந்தரின் கனவு' என்ற தலைப்பில் சுமார் ஒன்றரை மணி நேரம் நீண்ட உரை நிகழ்த்தினேன். நிகழ்வே அதற்கேற்ற விதத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அன்று திங்கள்கிழமை. வேலை நாள். வழக்கமாக அத்தகைய நாட்களில் அங்கு யாரும் கூட்டம் நடத்துவதில்லை. ஆனால், துணிந்து ஏற்பாடு செய்திருந்தனர். ' சுழலும் சொல்லரங்கம்' என்பதுதான் இவர்களின் வழக்கமான நிகழ்வு முறை. ஐந்து, ஆறு பேருக்கு அதில் பேச வாய்ப்பு. அதையும் தவிர்த்து ஒரு நீண்ட உரைக்கான நிகழ்வு என்பதுபோல் இந்தமுறை மாற்றி ஏற்பாடு செய்திருந்தனர். இத்தனைக்கும் மீறி கூட்டம் கண்ணியம் மிக்க கனவான்களால் நிரம்பியிருந்தது. குடும்பம் குடும்பமாக வந்திருந்தனர். கலை நிகழ்ச்சி போன்று ஈர்ப்புமிக்க துணை நிகழ்வுகளும் அன்று இல்லை. நூலக அலுவல் நேரம் இரவு ஒன்பது மணி வரை மட்டுமே. நூலகம் பூட்டப்படும் நேரமும் கூட்டம் முடிந்த நேரமும் ஒன்று. இறுதிவரை கூட்டம் கட்டொழுங்கோடும் கவனக் குவியலோடும் காட்சியளித்தது.


இந்த முறை சிங்கப்பூர் சென்றடைந்தவுடன், ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விடுதி அறைக்குச் செல்வதற்கு முன்பே மருத்துவமனையில் கவலைக்கிடமான நிலையில் இருந்த சிங்கப்பூரின் சிறப்புமிக்க மூத்த தமிழ் ஆளுமைகளில் ஒருவரும் எனக்கு மிக அணுக்கமான நண்பருமான புதுமைத் தேனீ மா. அன்பழகன் அவர்களைப் பார்க்க மருத்துவமனைக்கு விரைந்தோம். அன்பின் உருவமான அவர் நினைவிழந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நிலை எமக்கு கலக்கத்தை உருவாக்கியது. அவரின் நிலை குறித்து அறிந்த பின்னர் சிறிது நேரம் அங்கு செய்வதறியாது நின்றிருந்தோம்.



புதுமைத் தேனீ மா.அன்பழகன்

அன்பழகன் சிறந்த எழுத்தாளர்; கவிஞர். முப்பதுக்கும் மேற்பட்ட தரமான நூல்களை எழுதியவர். சிங்கப்பூருக்கும் ஈரோட்டுக்கும் இடையில் பாலம் அமைக்கத்தக்க அளவில் மக்கள் சிந்தனைப் பேரவையின் நிகழ்வுகளில் பங்கேற்ற சிங்கப்பூர்த் தமிழ் ஆளுமைகளில் முக்கியமானவர். வயது 83. அடுத்த நாள் மறுபடியும் மருத்துவமனைக்குச் சென்று பார்த்தோம். புறப்படும் நாள் அதிகாலையில் அன்பழகன் மறைந்து விட்ட துயரச் செய்தி கிடைத்தது. இறுதி அஞ்சலி செலுத்தப்படுவதற்காக அவரது உடல் வைக்கப்பட்டிருந்த இடத்திற்குச் சென்று மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினோம். வெகு நேரம் அங்கேயே இருந்துவிட்டு நேராக விமான நிலையம் புறப்பட்டுச் சென்றோம். இந்த முறை தமிழறிஞர் சுப. திண்ணப்பம் அவர்களை அவரது இல்லத்திற்குச் சென்று சந்தித்து நீண்டநேரம் அவருடன் உரையாடினோம். நா. ஆண்டியப்பன் அவர்கள் 'வாமனத் தீவு' என்ற சிங்கப்பூர் வரலாற்று நூலை எழுதி வெளியிட்டுள்ளார். சிங்கப்பூர் தமிழ் எழுத்தாளர் கழகத் தலைவர் சு. முத்துமாணிக்கம், 'மக்கள் மனம்' இதழாசிரியர் கவிஞர் பிச்சினிக்காடு




இளங்கோ, சிங்கப்பூர் பெரியார் சமூக சேவை மன்ற நிர்வாகி வீ. கலைச்செல்வம் ஆகியோரை அறைக்கு அழைத்து வந்து அருகிலிருந்த விடுதியில் ஒரு விருந்து ஏற்பாடு செய்து தனது நூலையும் வழங்கியதோடு அங்கு ஒரு சிறு கலந்துரையாடல் நடைபெறுவதற்கும் வழிவகை செய்திருந்தார் நா. ஆண்டியப்பன்.

பேராசிரியர் அ. வீரமணி சிறப்புமிக்க ஆய்வறிஞர். பன்முக ஆளுமை மிக்கவர். சிங்கப்பூர் தேசியப் பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்தபோது அங்கு தமிழ்ப் பேரவையைத் தொடங்கியவர். சிங்கப்பூரில் தமிழ் மற்றும் தமிழர் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பு செய்துள்ள இவரின் சமீபத்திய சாதனை ‘சிங்கப்பூர்த் தமிழர் இருநூற்றுவர்’ என்ற அரிய நூலின் தொகுப்பாசிரியராக விளங்குவதாகும். சிங்கப்பூரில் பல துறைகளில் முத்திரை பதித்த இருநூறு பேரின் வரலாற்றுச் சுருக்கத்தை ஆவணப்படுத்தி இரண்டு தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். இவரை முதல்முறையாக தனித்த ஏற்பாடுகளுடன் சந்தித்து நீண்டநேரம் கலந்துரையாடினோம். அதேபோன்று வளர்தமிழ் இயக்கத்தின் மேனாள் தலைவர் இரா. ராஜாராம் அவர்களிடம் நீண்டநேரம் உரையாடல்களை மேற்கொண்டோம். தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத் தலைவர் மு. ஹரிகிருஷ்ணன், சிங்கப்பூர்த் தமிழாசிரியர் சங்கத் தலைவர் தனபால் குமார், இந்திய முஸ்லிம் பேரவைத் தலைவர் முகமது பிலால் உள்ளிட்ட பல தமிழ் அமைப்புகளின் நிர்வாகிகளை நிகழ்ச்சிகளில் சந்தித்தோம்.

ஈரோடு புத்தகத் திருவிழாவில் ஆண்டுதோறும் மக்கள் சிந்தனைப் பேரவையால் வழங்கப்பட்டு வரும் ‘அறிவியல் மேதை ஜி.டி. நாயுடு விருது’க்கு ரூபாய் ஒரு லட்சம் பரிசுத் தொகையை வழங்கி வரும் சிங்கப்பூர் முஸ்தபா தமிழ் அறக்கட்டளைத் தலைவர் எம்.ஏ. முஸ்தபா அவர்களையும் ‘சிராங்கூன் டைம்ஸ்’ இதழாசிரியர் ஷாநவாஸ் அவர்களையும் சந்தித்து உரையாடினோம். கவிஞர் தியாக ரமேஷ், மலையரசி சீனிவாசன், முத்தழகு மெய்யப்பன், க. நெடுஞ்செழியன் உள்ளிட்ட பல எழுத்தாளர்கள் எம்மைச் சந்தித்து அவர்கள் எழுதிய நூல்களை வழங்கினர்.

எனது உரையில் ஆர்.எஸ். ஜேக்கப் எழுதிய ‘வாத்தியார்’, ‘மரண வாயில்’ ஆகிய இரண்டு நூல்களையும், செக்கோஸ்லேவேகியா புரட்சியாளர் ஜூலியஸ் பூசிக் எழுதிய ‘தூக்கு மேடைக் குறிப்புகள்’ என்ற நூலையும் மேற்கோள் காட்டியும், வலுவாக அறிமுகப்படுத்தியும் பேசியிருந்தேன். பாரதிதாசனின் படைப்புகளைப் பற்றி வெளிவந்துள்ள பல ஆய்வு நூல்களைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தேன்.


இந்த முறை சிங்கப்பூர் பயணம் உரைகள், உரையாடல்கள், புத்தகங்கள், சந்திப்புகள், நூலகம், அணுக்கமான ஆளுமைக்கு அஞ்சலி என்று நிகழ்வுகளும் நினைவுகளுமாக அமைந்திருந்தது.

●


**கட்டுரையாளர்:**
**நியூசெஞ்சுரி புத்தக நிறுவனத் தலைவர்,**
**மக்கள் சிந்தனைப் பேரவைத் தலைவர்**

மதிப்புரை

# கலகத்தை நிகழ்த்தும் கவிதைகள்




பெண் கவிஞர்களின் கவிதைகளில் வாழ்வியல்
ஆ. நளினி சுந்தரி | வேரல் பதிப்பகம் | விலை:ரூ.320/-.
தொடர்புக்கு:9578764322.



ந.முருகேசபாண்டியன்

நவீனத் தமிழ்க் கவிதை வரலாற்றில் பெண் கவிஞர்கள் எழுதியுள்ள கவிதைகள் இன்று தனித்து விளங்குகின்றன. பெரும்பாலான பெண் கவிஞர்கள் பெண் என்று தன்னிருப்பை அறிந்திட்ட சூழலில் பெண் கவிதை என்பது மொழி, பால் அடையாளத்துடன் வெளிப்பட்டுள்ளது. இருபத்தொன்றாம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்கள் ஒருபுறம் எனில், மின்னணு வெளியின் தாக்கம் இன்னொருபுறம் வலுவாக உள்ளது. இந்நிலையில், காலங்காலமாகக் குடும்ப நிறுவனத்தின் மூலம் கட்டமைக்கப்பட்ட பெண் பிம்பத்தைக் கேள்விக்குள்ளாக்குகின்ற பெண் படைப்பாளர்கள் புனைகின்ற கவிதைகள் புதிய தடத்தில் பயணிக்கின்றன. பெண் கவிஞர்கள் எழுதியுள்ள கவிதைத் தொகுதிகளை முன்வைத்து நண்பர், இணைப் பேராசிரியர் முனைவர் ஆ. நளினி சுந்தரி, முனைவர் பட்ட ஆய்விற்காக எழுதிய ஆய்வேட்டின் செம்மையாக்கப்பட்ட பிரதியான 'பெண் கவிஞர்கள் கவிதைகளில் வாழ்வியல்' புத்தகத்தை வாசித்தபோது, கவிதை மீதான அவருடைய ஈடுபாடு புலனாகியது. ஆ. நளினி 2011ஆம் ஆண்டில் நளினி என்ற பெயரில் ‘முதற் பேறு’ என்ற கவிதைத் தொகுதியை வெளியிட்டிருப்பது இங்குக் கவனத்திற்குரியது. ஆய்வாளரின் கவிதை தோய்ந்த மனம், சமகாலக் கவிதைகளைப் பற்றிய புரிதலுடன் கவிதைகளைப் பாடுபொருளாக்கி ஆய்வினை மேற்கொண்டுள்ளது. குறிப்பிட்ட காலகட்டத்தில் வெளியான கவிதைத் தொகுதிகளை முன்வைத்துக் கவிதையைப் பற்றிய பேச்சுகளையும் மறுபேச்சுகளையும் உருவாக்கிட முயன்றுள்ள ஆய்வாளர் ஆ.நளினியின் ஆய்வு, சமகாலத் தமிழ்க் கவிதையியல் ஆய்வில் புதிய திறப்புகளை உருவாக்கியுள்ளது.

தமிழாய்வு என்பது வெறுமனே ஆய்வாளருக்கு முனைவர் பட்டம் பெறுவதற்கானது என்று கல்விப்புலம் சார்ந்து வரையறுத்திடுவது ஏற்புடையதல்ல. ஏனெனில், இரண்டாயிரமாண்டு வரலாற்றுப் பின்புலத்தில் பண்பாடும் மரபும் சார்ந்த தொடர்ச்சியைச் சாத்தியப்படுத்துகின்ற தமிழ் மொழியினால் உருவான தமிழ்ச் சமூகத்தைப் பற்றிய அடிப்படையான கேள்விகளை எழுப்புவதில் தமிழாய்வு முக்கியமானது. சங்க இலக்கியம் முதலாகத் தொடர்ந்திடும் தமிழ்க் கவிதை வரலாற்றில் நவீன கவிதை தனித்துவமானது. பிற இலக்கிய வடிவங்களில் இருந்து மாறுபடுகின்ற கவிதை, ஒப்பீட்டளவில் மனதுடன் நெருங்கிய தொடர்புடையது. தனிமனித மனம், நினைவுகளின் வழியாக வாழ்க்கையின் சாரத்தையும் அனுபவங்களையும் கவித்துவமான சொற்களில் ஈரத்துடன் பதிவாக்குகிறது. உணர்வுகள் கொப்பளித்திட மனம் கட்டமைக்கிற சொற்களின் வழியே கவிதை வடிவெடுக்கிறது. ஒருபோதும் முடிவற்ற தவிப்புகளும் துடிப்புகளும் கவிதை வரிகளாக உருவெடுத்துப் புனைகிற உலகம், முடிவிலியாக விரிகின்றது. ஒவ்வொரு கணத்திலும் பொங்குகின்ற அனுபவங்களைக் கவிதையாக்குகிற கவிஞரின் மொழியாளுகை தனித்துவமானது. இயற்கையுடன் நெருக்கமான பெண்ணுடலும் பெண் மனமும் ஒருவகையில் கவிதை மொழிக்கு நெருக்கமானவை. பெண் கவிதை மொழி, அன்றாட வாழ்வில் ஒத்திசைந்து உருவாக்கும் வரிகள், கவிஞர் அன்றாட வாழ்வில் எதிர்கொண்ட முக்கியமான காட்சிகளை இயல்பாகப் பதிவு செய்கின்றன. ஒப்பீட்டு நிலையில் பெண் கவிதை மொழியானது ஆண் கவிஞர்களின் கவிதை மொழியில் இருந்து மாறுபட்டுள்ளது என்று மொழியியல் வல்லுநர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சங்க காலத்தில் 41 பெண் கவிஞர்கள் தொடங்கி, காரைக்காலம்மையார், ஆண்டாள் என்று உச்சநிலை அடைந்த பெண் கவிதையாடல், பின்னர் ஆயிரமாண்டுகளாகத் தொய்வடைந்திருந்தது. எழுபதுகளில் இரா.மீனாட்சி, திரிசடை போன்ற பெண் கவிஞர்கள் கவிதை எழுதியபோது கவிதைச் சூழலில் சிறிய அளவில் மாற்றம் ஏற்பட்டது. தொண்ணூறுகளில் வீரியத்துடன் பெண்கள் கவிதை எழுதத் தொடங்கிய சூழலில் அதிர்வுகள் ஏற்பட்டன. இருபத்தொன்றாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழில் பெண் கவிதைத் தொகுதிகள் கணிசமாக வெளியாகின. இன்று உலகமெங்கிலும் நூற்றுக்கணக்கான பெண் கவிஞர்கள் தமிழில் கவிதை எழுதிக் கொண்டிருக்கின்றனர். பெண் கவிஞர்களின் கவிதைகள் மீதான அக்கறையுடன் ஆ.நளினி சுந்தரி 2001 முதல் 2005 வரையில் ஐந்து ஆண்டுகள் காலகட்டத்தில் வெளியாகியுள்ள பெண் கவிஞர்களின் கவிதைத் தொகுதிகளை ஆய்விற்குட்படுத்தியுள்ளார். அவருடைய ஆய்வுத் தேடல் பெண் கவிஞர்கள் எழுதியுள்ள கவிதைகளைப் பற்றிய பன்முகப் பார்வைகளைக் கண்டறிந்துள்ளது.

21ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் உலகமயமாக்கல் அரசியல் காரணமாக எங்கும் நுகர்பொருள் பண்பாடு ஆதிக்கம் செலுத்தியது. அதேவேளையில், இணையவெளியில் மின்னணு ஊடகங்கள் ஏற்படுத்திய மாற்றங்கள் பல்கிப் பெருகின. தமிழ்நாட்டில் வாழ்கின்ற மக்களின் அன்றாட வாழ்க்கையில் இதுவரை நிலவிய சமூக மதிப்பீடுகள் கேள்விக்குள்ளாகின. எதுவும் நிகழ்வதற்கான சாத்தியப்பாடுகள் வலுவடைந்துள்ள சூழலில் பெண்களின் சமூகப் பங்களிப்பு வீச்சாகப் பரவியுள்ளது. இதுவரை ஆண்களின் ஆதிக்கத்தில் இருந்த கவிதையுலகில் பெண் கவிஞர்கள் தங்களுடைய கவிதைத் தொகுப்புகளுடன் களத்தில் குதித்தனர். பெண் கவிஞர்களின் கவிதைகளில் வெளிப்பட்ட பெண்ணுடலை மையமிட்ட கவிதைகளின் உக்கிரத்தைத் தாங்கிடாமல் அலறிய அன்றைய ஆண் மையவாதிகளின் அதிகாரப் பேச்சுகள் இன்றைய தலைமுறையினர் அறியாதவை. பண்பாட்டுக் காவலர்களாக வேடந்தாங்கிய அராஜகவாதிகளின் வன்முறைப் பேச்சுக்கு எதிராகச் சென்னை மாநகரில் 2004, மார்ச் 27 அன்று 'அணங்கு' அமைப்பு நடத்திய கருத்தரங்கில் பங்கேற்று 'நவீனப் பெண் கவிதையியலின் அகம்Xபுறம்' என்ற தலைப்பில் கட்டுரை வாசித்தேன். அந்தக் கருத்தரங்கக் கட்டுரைகள் ‘அணங்கு’ என்ற பெயரில் நூலாகியுள்ளன. பெண் கவிஞர்களின் கவிதைகளுக்கு எதிரான கொந்தளிப்பு நிலவிய காலகட்டத்தில் வெளியான கவிதைத் தொகுப்புகள் பெண்ணிய வரலாற்றில் முக்கியமானவை. காலங்காலமாக நிலவிய கவிதையாடலைக் கேள்விக்குள்ளாக்கிய பெண் கவிஞர்களின் கவிதைகளை முன்வைத்து ஆய்வாளர் ஆ.நளினி மேற்கொண்ட ஆய்வு, அவருடைய சமூக அக்கறையின் வெளிப்பாடு. அழகுநிலா, ஆண்டாள் பிரியதர்சினி, இராஜலெட்சுமி, கனிமொழி, குட்டி ரேவதி, தமிழச்சி தங்கப்பாண்டியன், திலகபாமா, தேன்மொழி, மாலதி மைத்ரி, ரிஷி, வெண்ணிலா ஆகிய பன்னிரு பெண் கவிஞர்கள் வெளியிட்டுள்ள 21 கவிதைத் தொகுப்புகளின் பின்புலத்தில் விரிந்துள்ள ஆய்வு பெண்ணியக் கவிதைப் போக்குகளின் முதன்மை அம்சங்களைப் பதிவாக்கியுள்ளது.பெண் கவிஞர்களின் கவிதைகளைப் பாடுபொருள்கள், வெளிப்பாட்டு முறைகள், உத்திகள் என்ற வகைப்பாடுகளில் பகுத்து விளக்கியுள்ள ஆய்வாளர் நளினியின் ஆய்வுமுறையியல் நுணுக்கமானது. பெண் கவிஞர்கள் எழுதியுள்ள கவிதைகளின் பாடுபொருள்கள் பெரிதும் சமுதாயத்தை மையப்படுத்தியுள்ளன என்று குறிப்பிடும் ஆ. நளினி மனித மன உணர்வுகள், வாழ்வியல் தொடர்பான உணர்வுகள், இயற்கையோடு தொடர்பான பதிவுகள்

எனப் பகுத்து விளக்கியுள்ளார். அவர் குறிப்பிடுகின்ற மனித மன உணர்வுகளைப் பற்றிய பதிவுகள் உளவியல்ரீதியில் கவனத்திற்குரியன.

பேசும் தனிமை, மௌனம் பேசிய கவிதை என்று கவிதைகளை அணுகியிருப்பது ஆ.நளினியின் கவித்துவ வாசிப்புக்குச் சான்றாக விளங்குகின்றது. ஒரு தலைப்பின் கீழ் எப்படியெல்லாம் கவிஞர்கள் கவிதைகளை எழுதியுள்ளனர் என்று ஆய்வாளர் தந்துள்ள கவிதை விமர்சனம் முக்கியமானது. கவிதையைப் பொருத்தவரையில் உள்ளடக்கத்துடன் கவிதையின் வெளிப்பாடும் மொழித் தேர்வும் முக்கியமானவை என்று ஆ.நளினி பகுத்துத் தந்துள்ளவை பின்வருமாறு: தனிமை, மௌனம், அச்சம், வெறுமை, நினைவு (கடந்த கால நினைவு), ஆன்மா, கனவு, மாயை, ஏக்கம், வேற்று உலக எண்ணம், கற்பனை உலகம், மன அழுத்தம், மனநிலை, மனித மனம், மனிதனின் மாற்றம், முடிவற்ற நிலை, தன்னம்பிக்கை, நேசிப்பின் மீதம், அன்பு, அலுத்துப்போகும் விஷயங்கள், இறந்தவன் முகம், பார்வை, ஸ்பரிசம், பிரிவு, எதிர்பார்ப்பு, காத்திருப்பு, அறிவை எதிர்கொள்ளுதல், மயான வேளை, கனவோசை நிகழ்வு, எச்சில், வெட்கம், தேவதையின் செயல், வாழ்வின் அனுபவம், அவமானத்தின்போது ஏற்படும் சூழல், இழப்பு, பேசாமல் இருந்தவர் சந்திப்பு, போராட்டம், ஆளுமை, வார்த்தை அடைத்துப் போதல், விடுதலை, ரசனை, இன்பத்தின் வலி, நாவுகள், படிப்பினை, எதிர்காலம், அன்பின் வெளிப்பாடு,அதிர்வுகள், குழப்பம், ஆறுதல், துக்கம், முயற்சி, துன்பம், பிரபஞ்சம் பற்றிய கனவு, ஆசை, வலி, அந்தரங்கம், அசரீரி, அறிவு, ஒளிவட்டம், மனப்புழுக்கம், ஏமாற்றம்... ஒவ்வொரு கவிதைக்குள்ளும் குறுக்கு நெடுக்கிலும் பயணித்துக் கண்டறிந்த கவிதையின் மையத்தைப் பற்றிய ஆய்வாளரின் விவரிப்புகள், குறிப்பிடத்தக்கனவாக விளங்குகின்றன.

ஒவ்வொருவரும் பேசும்போது குறியீடுகள்மூலம் கருத்தைத் தெரிவிக்க முயலுகின்றனர். ஆனால் மொழியே ஒரு குறியீடுதான். உரைநடையில் சொற்களின் இணைப்பு என்பது பொருளை மட்டுமே உருவாக்குகிறது. அந்த இணைப்பிலிருந்து உருவாகும் அனுபவத்தின் மூலம் மொழியைச் சார்ந்து விளக்கமுடியாத மர்மக் கூறு எதுவும் இல்லை. ஆனால் கவிதையில் சொற்களின் இணைப்பானது சொற்களுக்குரிய பொருளைத் தாண்டிய வெறொரு புதிய தளத்திற்கு நகர்த்திடும் இயல்புடையது. அதனால் கவிதை வரிகளுக்கு இடையில் வாசிப்பின் வழியாகப் பயணித்திட தோது உள்ளது. கவிதைப் பின்புலம், கவிதை மொழி, கருத்தியல் வெளிப்பாடு என்று கவிதைகளை ஆய்வாளர் ஆ.நளினி அணுகியிருப்பது ஏற்புடையது. கவிதை உணர்த்துமுறை என்ற தலைப்பின் கீழ் கவிதைகளை ஆய்வாளர் பகுத்துள்ள பகுப்புகள் பின்வருமாறு. அவை: ஒரே சொல்லை அடுக்கி உணர்த்துதல், கலைத்துவத்துடன் கருத்துணர்த்துதல், எள்ளலாக உணர்த்துதல், திகைப்பூட்டும் காட்சி வழியே உணர்த்துதல், சொல்லழகில் கலைச்சுவையை உணர்த்துதல், ஆண்-பெண் முன்னிலைப்படுத்தி உணர்த்துதல், படிப்பினை வழியாக உணர்த்துதல். ஒரு மையப் பொருண்மையில் கவிதைகளைத் தொகுத்துப் பகுத்து வகுத்து விளக்கிடும் ஆ.நளினியின் அணுகுமுறையென்பது வாசிப்பில் கவிதைகள் பற்றிய புரிதலை ஆழப்படுத்துகின்றன. பெண் கவிஞர்களின் கவிதைகளில் மனதினை மேம்படுத்துதல், பிரச்சினையை எதிர்கொள்ளல், சகித்தல், விடுபடல் போன்ற உளவியல் கூறுகளைப் பற்றிய விவரிப்புகள் கவனத்திற்குரியன.

விழிகளுக்கு மை தீட்டுவதுபோலக் கவிதை மொழிக்கு உவமை உள்ளிட்ட அழகியலான கவித்துவக் கூறுகளைப் பற்றி ஆய்வாளர் ஒப்பீட்டு நிலையில் விளக்கியுள்ளார். அவை கவிதையைப் பற்றிய ஆ.நளினியின் ரசனைக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்குகின்றன. கவிதையில் வெளிப்படுகின்ற உவமை, உருவகம், படிமம், குறியீடு, தொன்மம், இருண்மை, அங்கதம், பகடி, முரண், பொருள் மயக்கம் போன்றவற்றை நுணுகி ஆராய்ந்து பெண் கவிஞர்களின் கவிதை வரிகளின் தனித்துவத்தைப் பற்றிய ஆ.நளினியின் விளக்கம், கவிதையியலாக விரிந்துள்ளது.

தனிமனித மன உணர்வுகளைப் புரிந்திருக்கிற பெண் கவிஞர்கள், ஒருநிலையில் தனிமையான சூழலில் தங்களுக்குள் கட்டமைத்திடும் உரையாடல்களைக் கவிதையாக்கியுள்ளனர் என்ற ஆய்வாளர் ஆ.நளினியின் கண்டறிதல் முக்கியமானது. பாலினச் சமத்துவம் நிலவிடாத இன்றையச் சமூகச் சூழலில் பெண் என்ற புரிதலுடன் பாலியல் அத்துமீறல்களுக்கு எதிரான கலகக் குரலைக் கவிதை வரிகளாக்கியுள்ள பெண் கவிஞர்களின் சமூக அக்கறையை வெளிப்படுத்துகின்ற போக்கு நூலில் அழுத்தமாகப் பதிவாகியுள்ளது.

பெண் கவிஞர்களின் கவிதைகளைப் பற்றிய அவதானிப்பில் ஆ.நளினி கோட்டோவியமாகக் கவிதைகளைப் பற்றித் தீட்டியுள்ள பின்வரும் மதிப்பீடுகள், அவருடைய நுணுக்கமான கண்டறிதலுக்குச் சான்றாக விளங்குகின்றன. "ஆங்கிலப் புலமையின் எழுத்து மொழிதனை வெளிக்காட்ட விரும்பாத கவிஞர்களாய் அழகுநிலா, திலகபாமா, இராஜலட்சுமி, தேன்மொழி ஆகியோர் திகழ்கின்றனர். புதிய உலகத்தைத் தொட்டுவிட விரும்பும் ஏக்க உணர்வை அழகுநிலா தருகிறார். எத்தகையச் சூழலிலும் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மனோதிடம் வேண்டும் என்ற உணர்வையும், சமூக அக்கறையுடன் வாழத் துடிக்கும் எத்தனிப்பையும் ஆண்டாளின் கவிதைகள்

உணர்த்துகின்றன. தன்னைப் புதுவிதமான அடையாளப்படுத்தலுக்கு உட்படுத்த விரும்பாமல் இயல்பான புரிதலுக்குட்பட்டுச் சூழ்நிலைகளைக் கடக்க வேண்டும் என மொழிகிறார் இராஜலட்சுமி. மரபு சார்ந்த நிலையிலிருந்து மாறாமல் சமூக அக்கறையின் தேவைகளை உணரச் செய்கிறார் கனிமொழி, பாலின அதிகாரத்திற்கு எதிரான குரலாகவே மாலதி, குட்டிரேவதி, சல்மா ஆகியோரின் கவிதைகள் அமைகின்றன. இருப்பை மறந்து புதிதாய் எதனைச் சொல்லுவது என்ற மனநிறைவோடு எழுதி வாசிப்போரையும் கவிதை எழுதச் செய்கிறார் தமிழச்சி. அடக்குமுறைக்கு எதிரான கவிதைக்குரல் திலகபாமாவினுடையது. வாழ்வின் மீதான நம்பிக்கைத்தன்மையை ஒருபோதும் விட்டுவிடாதவராய் தேன்மொழி; ஆண்-பெண் பேதங்கள் படைப்பில் இருக்கக்கூடாது என்ற நோக்குடன் இறுக்கமான எதிர்ப்புக் குரலாய் ரிஷி; எளிமையும் இயல்பும் கலந்து மௌனத்தைப்போல அழுத்தமாய்ச் சொல்லும் வேகத்தோடு வெண்ணிலாவின் கவிதைகள் எனப் பெண் கவிஞர்களின் கவிதைகள் அமைந்துள்ளன.” ஆய்விற்குட்படுத்தப்பட்ட பெண் கவிஞர் ஒவ்வொருவரைப் பற்றியும் தன்னுடைய கருத்தை எளிய மொழியில் ஆ.நளினி பதிவாக்கியிருப்பது அவருடைய கவித்துவ ஈடுபாட்டின் வெளிப்பாடுதான்.

ஒரு காலகட்டத்தில் எழுதப்பட்ட பெண் கவிதைகயைப் பற்றிய ஆ.நளினியின் விமர்சனம் இன்றையக் கவிதைகளைப் புரிந்திட உதவுகிறது. இன்று சகலமும் மறுதலிக்கப்பட்டு மறுவாசிப்பு செய்யப்படும் வேளையில், கவிதை மட்டும் தனித்திருக்க முடியாது. உருப்பளிங்கு போன்ற வடிவத்திற்குள் செய்நேர்த்தியான வரிகளைக் கவிதையென்று போற்றிய மனநிலை மறைந்துவிட்டது. பெண்ணின் அனுபவங்கள் வீட்டை விட்டு வெளியேறி வெளியெங்கும் மிதக்கின்றன. பெண் தனக்கென உருவாக்கிய வெளியில், புனைந்திடும் கவிதை வரிகள் வாசிப்பில் அதிர்வை ஏற்படுத்துகின்றன. காலந்தோறும் மொழியின் வழியே புனையப்பட்ட கற்பிதங்களைப் புறந்தள்ளிவிட்டு, பெண்ணின் சுயமான இருப்பு, ஆயிரமாயிரம் மறுதலிப்புகளையும் கேள்விகளையும் எழுப்புகின்றது. இதுவரையில் தமிழ்ச் சமூகம் கட்டமைத்திருக்கிற பெண்ணை பற்றிய கற்பிதங்களை மறுதலித்துவிட்டுப் புதிய வாசிப்பைப் பெண் கவிஞர்களின் கவிதைகள் கோருகின்றன; கலகத்தை நிகழ்த்துகின்றன. பெண்ணுடல் இழிவானது என்ற மத அடிப்படைவாதச் சொல்லாடலைச் சிதைத்திடும் பெண் கவிதை மொழியைப் பற்றிய ஆ.நளினியின் பன்முகப் பார்வைகள், ஒடுக்கப்படும் பெண்களின் குரல்களாக வெளிப்பட்டுள்ளன. அதேவேளையில், 'பெண் கவிஞர்கள் கவிதைகளில் வாழ்வியல்’ நூல், பெண்கள் எதிர்கொள்கின்ற பாலின சமத்துவமின்மை முதலான பல்வேறு பிரச்சினைகளைப் பற்றிய புரிதல்களையும் பெண்ணைச் சக மனுஷியாகப் பார்க்கின்ற பார்வையையும் வாசிப்பில் உருவாக்கிடும் வல்லமையுடையது.

ஆ.நளினி சுந்தரி எழுதியுள்ள ’பெண் கவிஞர்கள் கவிதைகளில் வாழ்வியல்’ நூல் பெண்ணியக் கவிதைகள் திறனாய்வு வரலாற்றில் என்றும் தனித்து விளங்கும். இந்த நூல் பெண்ணிய வாசிப்பில் உருவாக்கியுள்ள மனப்பதிவுகள் காத்திரமானவை. பேராசிரியர் ஆ.நளினி சுந்தரி ஆய்வுலகில் தொடர்ந்து இயங்கிட வேண்டியது அவசியம். அதற்கான நம்பிக்கையையும் தேவையையும் அவருடைய ஆய்வு நூல் ஏற்படுத்துகிறது.


●

**கட்டுரையாளர்: எழுத்தாளர்**


**புதிய வரவு**

## வாருங்கள் குரலழகரே!

**மா.கமலவேலன்**




மதுரை. அகில இந்திய வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பான ‘பாட்டி பேசுகின்றாள்’, ‘சக்தி’, ‘வாருங்கள் குரலழகரே!’ ஆகிய மூன்று நாடகங்களின் தொகுப்பே மா.கமலவேலன் அவர்களின் இந்த நூல்! மிகச் செறிவான வாழ்வியல் கருத்துகளை உணர்ச்சிப் பெருக்குடன் வெளிப்படுத்துகின்றன, இந்த நாடகங்கள்

**விலை: ரூ. 115**


கட்டுரை



# மகாகவி பாரதிக்குப் பின்...

யாருக்காகவும், எதற்காகவும் காத்திருக்காமல் இயங்கும் காலத்தின் பதிவுகளை இலக்கியமாக்குவதில் எழுத்தாளர்களும் கவிஞர்களும் சலிப்படைவதில்லை. எழுதப்படும் மொழி எக்காலத்தில் தோன்றியதாக இருப்பினும், அதில் எழுதப்படும் இலக்கியங்கள் எழுதப்படும் காலத்தின் குரலாக இருப்பதோடல்லாமல், எல்லாக் காலத்திலும் நிகழ்காலத்தியச் சாயல்களோடு இருக்கும் தகுதி படைத்தவை. எனவே, காலத்தே தோன்றிய எழுத்தாக்கங்கள் காலங்கடந்து நிற்கும் பெற்றி உடையவை. இந்தப் பெற்றி என்பது அவை யாருக்காக, யாரால் எழுதப்பெற்றன என்பதைப் பொருத்தது.

கவனக் குறைவாலும் கரையானுக்கு இரையானதாலும் அழிந்தவை போக, எஞ்சிய ஆக்கங்களே, தமிழின், தமிழர்களின் ஆவணங்களாக விளங்கிவருகின்றன. பழந் தமிழ் இலக்கியங்களைப் பேணுதலில் காட்டுகிற அக்கறையில் சிறிதும் குறையாமல் புத்திலக்கியங்களைப் பேணிக் காப்பதிலும், வாசகர்களுக்கு அழகுற வழங்குவதிலும் ஈடுபடுகிற பதிப்பகங்களுள் முதன்மைபெறும் நிறுவனங்களில் ஒன்று, என்.சி.பி.எச். கிளை பல தாங்கியும், வாசகர்களின் நிறை பலம் கொண்டும் வளர்ந்து வருகிற இந்நிறுவனத்தின் அரிய பெரிய வெளியீடுகள் ஆவணக் களஞ்சியங்கள்.



முனைவர் சொ.சேதுபதி

வாய்ப்புகளும் வசதிகளும் பெருகி வரும் இக்காலத்தில், இம்மாதிரியான தொகுதிகளை வெளிக்கொணர்தல் சாத்தியம்தான் எனினும், தமிழுக்குத் தகு உயர்வளிக்கும் தக்க படைப்புகளைத் தெரிவு செய்து வழங்குவதில் இந்நிறுவனம் தனிக்கவனம் செலுத்திவருகிறது. நூற்றாண்டு கண்ட கவிஞர் ‘தமிழ்ஒளி’யின் படைப்புகளை முழுத் தொகுப்பாக வெளியிட்ட கையோடு, கவிஞர் சிற்பியின் கவிதைத் தொகுதிகள் முழுமையையும் திறம்படத் தந்திருக்கிறது.

★

மகாகவி பாரதிக்குப் பின்னர் தமிழ்க் கவிதையில் தடம்பதித்து முன்னேறியவர்கள் பலர். அவர்களுள் பாரதியை விடவும் அதிகக் கவிதைகளைப் படைத்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்களின் கவிதைகள் பாரதியின் உயரத்தைத் தாண்டி வளர்ந்துள்ளனவா என்பதைக் காலம்தான் தீர்மானிக்க வேண்டும். ஆனால், அவர் உருவாக்கிய கவிதைத் தடத்தில் தன் காலம் முழுவதும் கவிதைக்காக இயங்கிய கவிஞர்களின் வரிசையில்,


கவிஞர் சிற்பி சிறப்பிடத்தைப் பெறுகிறார். அதற்கான அறிமுகத்தை, பாரதியின் தலைமைச் சீடரான பாரதிதாசனே தன் வாழ்த்துக் கவிதையில் கொடுத்திருக்கிறார். 'நிலவுப் பூ'- கையெழுத்துப் பிரதியைக் கண்ணுற்ற மாத்திரத்தில், 'கவிதை ஒவ்வொன்றும் அமிழ்தாக நான் கண்டேன்' என்று மகிழ்ந்துரைத்த அவர்,

**பாட்டுத் திறம் கண்டேன்; பாலசுப்பிரமணியப்**
**பாவாணர் செய்த அப் பச்சைத் தமிழ்நூலில்**
**நாட்டுத் திறம் என்னே; நாற்கவியும் முத்தமிழும்**
**நல்கும் பயன் என்னே; நாவூறிப் போனேன் நான்!**
**வீட்டில் குறட்டை விட்ட செந்தமிழர் கண்விழிக்க**
**வெற்றி இலக்கியத்தை அன்றளித்த பாரதிபோல்**
**பாட்டைத் திறக்க வந்த பாலசுப்பிர மணியப்**
**பைந்தமிழ்ப் பாவாணர் புகழ் பெற்று வாழியவே!**

என்ற வாழ்த்து அப்படியே பலிதமாகியிருக்கிறது.

★

'எனக்கவனே குரு, அவன் எழுத்து வேதம், வார்த்தை சட்டம், வாழ்க்கை சத்தியம்' என்று பாரதியை முன்னிறுத்திச் சூளுரைத்துக் கொண்டு, தனது 16 வயதில் கவிதை எழுதப் புகுந்தவர் சிற்பி. ஆத்துப்பொள்ளாச்சி, 'நடராச பாலசுப்பிரமணிய சேதுராமசாமி' எனும் பெயர் கொண்ட 'பொ. பாலசுப்பிரமணியம்' என்பவர், கண்ணதாசனின் தென்றல் இதழுக்கு வெண்பாப் புனைய அமைத்துக் கொண்ட 'சிற்பி' என்கிற பெயரே இயற்பெயராய்க் கவிதை உலகில் நிலைத்தது. 1963இல் வெளிவந்த 'நிலவுப் பூ' தொகுப்புத் தொடங்கி, அண்மை(2025) யில் வெளிவந்த 'கிரண ஊர்வலம்' வரையிலான 24 தொகுப்புகளும், திரண்ட முழுத் தொகுதிகளாக, 'சிற்பி கவிதைகள்' என்கிற பெயரில் மூன்று பெரு நூல்களை, புகழ் பூத்த நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்டிருக்கிறது.




சென்ற நூற்றாண்டின் சரி பாதியில் தொடங்கி, இந்த நூற்றாண்டின் கால் பகுதி வரைக்குமான காலப் பெருவெளியில் கவிஞர் எழுதிய இக்கவிதைகள், வெவ்வேறு காலக்கட்ட அரசியலை, அறிவியல் வளர்ச்சியை, ஆன்மிகப் புரிதலை, பண்பாட்டு நெருக்கடிகளை, கலை, இலக்கிய, பொருளாதார மாற்றங்களை, தத்துவ சித்தாந்தங்கள் எதிர்கொண்ட சிக்கல்களை, மானுடத்தின் அற்புதங்களை, அவலங்களைக் கவித்துவத்தோடு கதைத்தன்மை துலங்க எடுத்துரைக்கின்றன.

மிகைப்படுத்தல் இல்லாது இயல்புநவிற்சியுடன் சொற்சித்திரங்களாகும் இக்கவிதைகளில் மனிதம் மலர்கிறது. பாரதி, பாரதிதாசனுக்குப் பிறகு பெண்மை குறித்தும், ஒடுக்கப்பட்டோர் நலன் குறித்தும் பரக்கப்பேசும் இவருடைய கவிதைகள், தனி ஆராய்ச்சிக்குக் களம் விரிக்கின்றன. இதிகாச, காப்பியப் பாத்திரங்களை முன்னிறுத்திக் கதைக் கவிதைகளாக விரியும் படைப்புகள் இவர்தம் கவியாளுமைக்குச் சான்றுகளாகின்றன. "கவிஞர் சிற்பிக்கு வியக்கத்தக்க படைப்புப் பரப்பு இருக்கிறது. ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுகளிலிருந்து விலகி, புதிய வடிவங்கள், புதிய நடை, புதிய கற்பனைகளைப் படைக்கிறார்' எனச் சொல்லிப் பாராட்டுகிறார், ஞானபீட விருது பெற்ற மலையாள எழுத்தாளர் எம்.டி.வாசுதேவ நாயர். அதனை மெய்ப்பிக்கும் கவிதைகள் அடங்கிய பெருந் தொகுதிகள் இவை.

★

கடலூர்ச் சிறையில் அடைபட்ட பாரதியின் தன்னுணர்வுச் சிந்தனைகளைத் தாங்கிய 'பாரதி கைதி எண் 253', தமிழர் வாழ்வொடு பிணைந்த மகாத்மா காந்தியின் மகத்தான வாழ்வுச் செய்திகளைச் சித்திரங்களாக்கிய 'மகாத்மா', தன் சமகால மானுடப் பாத்திரங்களைக் கொண்டு படைக்கப்பெற்ற கதைக் காவியமான 'மௌன மயக்கங்கள்', வரலாற்றுக் கவிதை நாடகமாகிய 'ஆதிரை', தத்துவச் செறிவுமிகுந்த 'பூஜ்யங்களின் சங்கிலி', தன் கிராமத்துக் கதாபாத்திரங்களை அலைகளாய் விரித்து ஓடிவரும் 'ஒரு கிராமத்து நதி', அரசியல் காத்திரம் மிகுந்த 'சர்ப்ப யாகம்', அறிவியல் தளம் விரிக்கும் 'சூரிய நிழல்', சூழலியல் சிந்தனையில் முகிழ்த்த 'கண்ணாடிச் சிறகுள்ள பறவை', வினாக்களின் வேள்வியாய் விளைந்த 'இதுவும் ஒரு கேள்விகளின் புத்தகம்', முதுமையின் அழகியல் காட்டும் 'நீலக்குருவி', 'கை நழுவும் காலம்', முகநூலில் எழுதிய கவிதைகளின் தொகுப்புகளாக, 'முகந்து தீராக் கடல்', 'நறிவிலி', தமிழ் உணர்வு பெருக்கெடுக்கும் 'கிரண ஊர்வலம்' முதலான தொகுப்புகள் மூல நூல்களின் தன்மை

மாறாமல் இத்தொகுப்பில் தரப்பெற்றிருக்கின்றன. கூடுதலாக, கவிஞரின் சிறார்பாடல்தொகுப்புகளான வண்ணப்பூக்கள், சிற்பி தரும் ஆத்திசூடி ஆகியனவும் இடம்பெறுகின்றன. மூன்றாம் தொகுதியில், இவ்வனைத்து நூல்களுக்குமான முன்னுரைகள், பதிப்புரைகள், அணிந்துரைகள், கால வரிசையில் முழுமையாகத் தரப்பெற்றிருக்கின்றன. அவற்றுள், பாவேந்தர் பாரதிதாசன், கவியரசு கண்ணதாசன், ஞானபீட விருதாளர் ஜெயகாந்தன், இசை மேதை எம்பி.சீனிவாசன், தீபம் நா.பார்த்தசாரதி, கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி, கவிஞர்கள் மீரா, பாலா, கல்யாண்ஜி, இந்திரன், மேனாள் துணைவேந்தர் ப.க.பொன்னுசாமி, திறனாய்வாளர் க.பஞ்சாங்கம் உள்ளிட்டவர்களின் அணிந்துரைகள், ஆய்வுரைகள் எனக் கொள்ளத்தக்கவை. சிற்பி என்ற ஆளுமையை, அவர்தம் கவிதைகளைக் கொண்டு அளந்தறிந்து அறிவித்த முன்னோட்டக் கணிப்புகள்.

★

**90**களில் தொடங்கி, இன்றளவும் கவிதைத்துறையில் இயங்கிவரும் என்னை ஈர்த்த பெருங்கவிஞர் சிற்பி. அவர் கவிதை எழுதுபவராக மட்டுமல்ல, கவிஞராகவும் வாழ்ந்து வருகிறவர். தன் வாழ்வில் கண்ட, தமிழ் வாயிலாகக் கற்ற, மார்க்சிய நெறியில் நின்ற, பிற மொழிகள் எழுப்பி வரும் புதிய கலை இலக்கிய அலைகளை உள்வாங்கி மொழிபெயர்த்த, அனுபவங்களின் அடர்த்தியில் விளைந்த நிகழ்வுகளைக் கதைத்தன்மையோடு கவிதையாகத் தரும் கலையில் பொய்மை கலவாத வாய்மையாளராக அவர் தன்னை நிலைநிறுத்தியிருக்கிறார்.

"கவிஞருள் மகாத்மா" என்று ஞானபீட விருது பெற்ற எழுத்தாளர் ஜெயகாந்தனாலும், "கவிஞர் சிற்பி அவர்களின் கவிதைப் படைப்புகளைப் படிக்கும்போது, தூங்காமல் துயில் கொண்டு கவிதைப் பண் பாடி வாழ்ந்து இவ்வையகத்தைச் சிறப்பிக்கும் ஒரு கவிதை மகான் என்று போற்றத் தோன்றுகிறது" என்று மேதகு மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஆ.ப.ஜெ. அப்துல்கலாமாலும் பாராட்டப்பெற்ற கவிஞர் சிற்பிக்கு வந்த பட்டங்கள் பல; என்றாலும், தன்னைக் கவிஞர் என்று கூடக் குறித்துக் கொள்ளத் தயங்குகிறவர்; ஆனால், கவிதைக்காகவே, தன் வாழ்வை அர்ப்பணித்து இயங்குகிறவர். சிறுகதைக் கூறுகள் குறையாத கவிதைகளையும், புதினப் பாங்குடைய கதைக் காவியத்தையும் படைத்தளித்த அவர் முயன்றிருந்தால், சிறப்புமிகுந்த புனைகதைகளை உருவாக்கியிருக்க முடியும். அதற்கான அனுபவமும் எழுத்து முதிர்ச்சியும் அவருக்கு உண்டு என்பதை அவர்தம் கட்டுரைகளும், மொழிபெயர்ப்புப் படைப்புகளும் உறுதிப்படுத்துகின்றன. ஆனாலும், தனது களம் கவிதை என்பதில் எப்போதும் உறுதி கொண்டிருக்கிறார். உள்ளூர்க் கவிஞர்கள் தொடங்கி உலகக் கவிஞர்களின் ஆக்கங்கள் பலவற்றையும் விமர்சித்தும், மொழிபெயர்த்தும் தமிழுக்குப் பங்களித்து வருகிற கவிஞர் சிற்பியின் கவிதைகள், மொழிபெயர்ப்புச் சாயல்கள் சிறிதும் அற்ற அசலான, உலகு தழுவிய பார்வை கொண்ட தமிழ்க் கவிதைகள்.

"கவிஞர் சிற்பி, தமிழுக்குக் கிடைத்த அரிய பொக்கிஷம். ஆனால், நாம் அவரைத் தமிழுக்கு மட்டும்தான் சொந்தம் என்று ஒரு பேழையிலே வைப்பது நல்லதல்ல. அவர் உலகக் கவிஞர்" என்று உணர்ந்து உரைக்கிறார், கவிஞரும் விஞ்ஞானியுமான டாக்டர் ய.சு.ராஜன்.

★

**பா**ரதியின் கவிதைகளைப் போல், இவரது கவிதைகளும் எளிமையானவை; ஆனால், பொருட்செறிவு மிக்கவை. குறியீடு, படிமம் என்கிற எல்லைகளைக் கடந்து உள்ளுறையையும் இறைச்சியையும் உள்ளடக்கிய சங்கப் பாடல்களின் சாயல்கள் வாய்ந்தவை. ஐங்குறுநூறைப்போல் அமைந்த கவிதைகளும், கலித்தொகையைப்போல் நீண்ட கவிதைகளும் இடம்பெற்ற இத் தொகுப்புகளில், புதிய புறப்பாடல்களும், அரிய அறிவியல் கவிதைகளும், செறிவார்ந்த வரலாற்று, தத்துவப் பார்வையைக் கொண்ட கவிதைகளும் இடம்பெறுகின்றன. ஒன்பான் சுவைகளுள் ரௌத்திரம் பொங்கும் கவிதைகளும், நகைச்சுவைக்குக் களம் அமைக்கும் பல நல்ல கவிதைகளும் இருக்கின்றன.

"ஆலிவர் கோல்ட்ஸ்மித்தைப் பற்றி சாம்யுவல் ஜான்ஸன் கூறினார்: 'அவர் தொடாத இலக்கியத் துறை எதுவுமில்லை; தொட்டு அணி செய்யாதது எதுவுமில்லை.' எனக்குக் கவிஞர் சிற்பியை இப்படித்தான் சித்திரிக்க வேண்டுமென்று தோன்றுகிறது" என்கிறார் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி. இக்கூற்று மிகையானதில்லை என்பதற்குக் கவிஞர் ஆற்றிய இலக்கியப் பணிகளே சாட்சியங்கள்; அதன் தலைச்சன் குழந்தை, இக் கவிதைப் படையல்.

★

**வா**ர்த்தை விளையாட்டு, கூறியவை கூறல், மிகையுணர்ச்சி, வலிந்து யாப்பொழுங்கினைத் தவிர்த்தல் அல்லது புகுத்தல், இயற்கை இறந்த எழுத்து எனும் குறைபாடுகள் ஏதுமில்லாத இத்தொகுப்பில், ஹைகூக் கவிதைகள் இல்லை. அளவு நெருக்கடிகளுக்கு ஆட்பட்டுப் பிதுங்குகிற, தொங்குகிற வரிச் சுமைகள் இல்லை. சிற்பம் போன்ற செதுக்கல்களில் பிசிறு தட்டாத செய்நேர்த்தியுடன் கவிதாப் பாத்திரங்கள் கச்சிதமாய் அமைகிற தனித்தன்மை சிறப்பு.

தொடக்கத்தில் மரபுமணம் கமழும் கவிதைளைப் பற்றி எழுதியபோதும், இடைக்காலத்தில் சமூகச்

சிக்கல்களைச் சாடிய போதும், நிகழ்காலத்து நிகழ்வுகளை நேருறப் புதுநடையில் வழங்கியபோதும், தமிழ் மரபு மாறாமல் தனித்துவத்தைப் பேணி வந்திருக்கிறார். அதனால்தான், மலையாளத்தில் எழுதி வரும் உலகக் கவிஞரான சச்சிதானந்தன், "சிற்பியின் கவிதைகள் நேர்மையானவை; செறிவானவை. இயற்கையின் மீதான அன்பு, தன் கிராமம் குறித்த ஏக்கமூட்டும் நினைவுகள் மற்றும் தன் மொழி, மரபு ஆகியவற்றின் மீதான ஆழ்ந்த மதிப்பு ஆகியவற்றால் அவை நிரம்பியுள்ளன. ஐரோப்பியச் சாயலற்ற ஒரு தனித்துவமான நவீனத்துவத்தை அவர் கைக்கொள்கிறார்; மரபையும், சமகாலச் சமூக விழிப்புணர்வையும், நவீன உணர்வுகளையும் ஈடுஇணையற்ற வகையில் அவர் ஒன்றிணைக்கிறார்" என்று மதிப்பிட்டுரைக்கிறார்.

பாரதிக்குப் பிறகு, அவர்தம் வழியில் இயங்கிவரும் எழுத்தாளராக தோழர் ஜெயகாந்தனையும், கவிஞராக சிற்பியையும் காலம் நமக்குக் கொடையளித்திருக்கிறது. புலனழுக்கற்ற செந்தண்மைகொண்டிலங்கும் சிற்பியின் பண்பு நலன்களும் கவிதை இயக்கமும் பலரைக் கவர்ந்தவை. இவர்தம் கவியாளுமையைத் தேர்ந்து தெளிந்து, தனது கம்பீரக் குரலால் கலகக்குரல்களுக்குப் பதில் கொடுத்துவந்த கவிஞர் பாலா, தன் காலத்தில் இவரது கவிதைகளைத் தொகுப்பு நூல்களாக்கித் தந்திருக்கிறார். அவர்தம் மறைவுக்குப் பிறகு, தோழர் நவபாரதியின் முன்னுரையோடு, சிற்பியின் கவிதைகளைத் தொகுத்து, அவர்தம் பவளவிழாவில் என்னால் தர முடிந்தது. அதற்குப் பிறகு, அவர் படைத்த கவிதைகளையும் இணைத்த மூன்று தொகுதிகளாக இவை வெளிவந்திருக்கின்றன. ('கருணைக் கடல் இராமாநுசர் காவியம்' தனிக் காப்பியம். எனவே,இதில் சேர்க்கப்பெறவில்லை; கணக்கிற்குக் கால் நூறு படைப்புகளைக் கவிநூல்களாக்கிய சிற்பி, கவியரங்குகளில் பாடிய கவிதைகளைப் பெரும்பாலும் தவிர்த்தே இருக்கிறார். தொகுத்தால், அதுவே தனிநூலாக வரும்.)

★

காலவரிசையில், நூல் முகப்புகளுடன் தரப்பெற்ற இத்தொகுதிகளுக்கான கவிஞர் சிற்பியின் முன்னுரை, அவர்தம் கவிதை வரலாற்றையும், அவர் களம் இறங்கிய வரலாற்றையும் உரிய தரவுகளோடு, இயல்புறப் பேசுகிறது. அவர் யாருக்காக, எந்தத் தளத்தில் இருந்து தன் மொழியில் கவிதை எழுதுகிறார் என்கிற புரிதலை அது புலப்படுத்துகிறது. தமிழ்நாடு கலைஇலக்கியப் பெருமன்றத்தின் முதுபெரும் இலக்கிய ஆளுமைகளுள் ஒருவராகத் திகழும் கவிஞர் சிற்பியின் படைப்பாளுமையை, மார்க்சியச் சிந்தனையோடு அணுகிய தோழர் நவபாரதியின் விரிவான முன்னுரை, அவரது மகாகவித்துவ அடையாளங்களைக் காட்சிப்படுத்துகிறது. அவர், "பாரதிக்குப் பிறகு பன்முகத் தன்மை கொண்ட ஒரு மகாகவியாக எழுச்சி பெறும் பேறு பெற்றவர் சிற்பி; சிற்பி மட்டுமே. வெறும் புகழ்ச்சி அல்ல இது. சிற்பி நம்மோடு வாழ்கின்ற நூற்றாண்டுகளின் சாரமும், சிற்பி எழுதுகின்ற பல நூறு கவிதைகளின் சாரமும் அவர் மகாகவி என்பதை நிலைநிறுத்தும்" என்று உரத்து மொழிகிறார்.

இரு நூற்றாண்டுகளின் இலக்கிய சாசனங்களாக இக்கவிதைகள் அமைந்த பாங்கினை, காலப் பின்புலத்தோடு விவரிப்பதாகத் தொகுப்பாசிரியத் தொகுப்புரை அமைகிறது.

★

மண்ணின் மீதும் மனிதத்தின்மேலும் கவிஞர் கொண்டுள்ள அக்கறையின் புலப்பாடாய், அறச்சீற்றத்துடன் தோன்றிய ஏகாதிபத்திய, போர் எதிர்ப்புக் கவிதைகளும், ஒடுக்குமுறைக்கு எதிராகப் போர்க்குரல் எழுப்பும் கவிதைகளும் அடங்கிய முதல் தொகுதிக்கு செம்மண்ணிறப் பின்னணியில் சிரித்த முகச் சிற்பியைத் தன் தூரிகை விரல்களால் தீட்டித் தந்த ஓவியர் திலகம் மணியன் செல்வன், பசுமைக்கும் சூழலியல் செழுமைக்கும் குரல் கொடுக்கும் கவிதைகள் அடர்ந்த இரண்டாம் தொகுதிக்குப் பசுமை வண்ணத்தையும், முதுமையின் அனுபவச் செறிவுடனும், அழகுடனும் முழுமையை நோக்கி முன்னேறும் கவிதைகள் மலிந்த மூன்றாம் தொகுதிக்கு நீல வண்ணத்தையும் பின்புலமாக்கி, சிற்பியின் முகச் சிரிப்பினைச் சித்திரங்கள் ஆக்கியிருக்கிறார்.

மொழிபெயர்ப்புக்கும் தன் சுய படைப்புக்குமாக, சாகித்திய அகாதெமியின் இரு விருதுகளை முதன்முதலில் தமிழுக்குப் பெற்றுத் தந்தவரும், பத்மஸ்ரீ விருது முதலான பல விருதுகள் பெற்றவருமான கவிஞர் சிற்பி, தன் காலத்துக் கவிஞர்களைத் தக்கவாறு அடையாளம் கண்டு, தன் பெயரில் ஆண்டுதோறும் விருதுகளை வழங்கிப் பாராட்டிவருகிறவர். வாழும் காலத்தில் மூத்த படைப்பாளியின் ஒட்டுமொத்தக் கவிதைப் பங்களிப்பினை ஆவணப்படுத்திய வரலாற்றுப் பெருமையை என்.சி.பி.எச். ஏற்றிருக்கிறது. கவிதை ரசிகர்களுக்கும், கவிதை எழுதுவோர்க்கும், ஆய்வாளர்களுக்கும் சிறந்த இலக்கிய விருந்து அளிக்கும் இத் தொகுதிகள் காலத்தின் சாட்சியமாக நின்று தமிழுக்குப் பெருமிதம் தரக்கூடியவை; மகாகவி பாரதிக்குப் பிறகு வரும் தமிழ்க் கவிஞர்களின் வரிசையில், ஒரு மாபெரும் கவிஞராக, சிற்பியை நிலைநிறுத்தும் வல்லமை மிக்கவை. பாரதி, பாரதிதாசன் கவிதைகள் வரிசையில், ஒவ்வோர் இல்லத்திலும் இருக்கவேண்டிய இலக்கிய சாசனங்கள் இவை என்பதைத் தேர்ந்த வாசகர்கள் மறுக்க மாட்டார்கள்.

●

கட்டுரையாளர்: – பேராசிரியர், சிற்பி கவிதைகள் மூன்று தொகுதிகள், (தொகுப்பாசிரியர் – கிருங்கை சேதுபதி, என்.சி.பி.எச். சிறப்பு வெளியீடு. 2026.

புதிய வரவு

## அமுதமாகி வருக

**சிற்பி பாலசுப்பிரமணியம்**




**விலை: ரூ.** 320

கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் எழுதிய 57 கட்டுரைகளின் தொகுப்பே அமுதமாகி வருக என்னும் இந்நூல். நூலுக்குத் தலைப்பாகியுள்ள ‘அமுதமாகி வருக’ என்னும் கட்டுரையும், ‘சங்க இலக்கியத்தில் இயற்கை’, ‘சிலப்பதிகாரத்தில் குறியீட்டு நுட்பங்கள்’, ‘மகாகவியும் மகாத்மாவும்’, ‘பூத்த கரும்பும், காய்த்த நெல்லும்’ உள்ளிட்ட கட்டுரைகளும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. சங்க இலக்கியத்தில் தொடங்கி, இன்றைய இலக்கியங்கள் வரையிலான பல செய்திகளை இந்தக் கட்டுரைகளில் எழுதியுள்ளவர் கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம். இலக்கியங்களைத் தெரிவுசெய்து அவற்றின் பொருண்மையின் சாரத்தையும், இயற்றிய இலக்கிய ஆளர்களின் படைப்புப் பெருமையையும் சுருங்கக் கூறியிருக்கிறார். இந்நூலாசிரியர். இந்த அருந்தமிழ்க் கட்டுரைகளைத் தொகுத்தளித்திருக்கிறார். பேரா. கிருங்கை சேதுபதி.

புதிய வரவு

## அன்பு மத்தாப்பூ

**இரா.ஆனந்தகுமார் இ.ஆ.ப.**

வாழ்வில் நாம் சந்தித்த ஒரு நிகழ்வு நம் மனதைத் தொட்டு விட்டால். அது குறிப்பிடத்தக்க நிகழ்வாகி விடுகிறது; அதைப் பிறரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று மனதில் ஒரு வித உந்துதலை ஏற்படுத்திக் கொண்டே இருக்கும். எழுத்தாளர்கள் அப்படியொரு நிகழ்வைச் சந்திக்க நேர்ந்தால், அது இலக்கியமாகிறது. இரா.ஆனந்தகுமார் இ.ஆ.ப. எழுதிய 150 குட்டிக் கதைகளின் தொகுப்பே ‘அன்பு மத்தாப்பூ’ என்னும் இந்த நூல். தத்துவமும் உளவியலும் நிறைந்த எளிய கதைகள் இவை.




**விலை: ரூ.** 165



கட்டுரை

# திருமுருகாற்றுப்படை பெரியபுராணம் பிறமொழி இலக்கியங்கள்

இரா. அறவேந்தன்

பெரும்பாலான திராவிட மொழிகள் தென்னிந்தியாவில் பேசப்படுகின்றன. இந்தத் திராவிட மொழிகளில் தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு எனும் நான்கு மொழிகளுக்கே பழமையான இலக்கியங்கள் உள்ளன. தமிழ்மொழியின் இலக்கிய வரலாறு கி.மு.க்கு முற்பட்டதாக உள்ளது. ஏனைய மூன்று மொழிகளுக்குமுரிய இலக்கிய வரலாறு கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாக உள்ளது. தமிழில் பக்தி இலக்கியம் என்பது கி.பி. ஏழு முதல் ஒன்பதாம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் எழுதப்பட்டுள்ளது. இவற்றால், தமிழ் பக்தி இலக்கியத்தின் செல்வாக்கு ஏனைய திராவிட மொழிகளிலும் இடம்பெற்றிருக்க வாய்ப்புண்டு என்ற கோணத்தில் அறிஞர் பலர் விளக்கம் அளித்துள்ளனர். குறிப்பாக, தமிழ் நாயன்மார் வரலாறுகள் தெலுங்கிலும் கன்னடத்திலும் தனி நூல்களாக எழுதப்பட்டுள்ளன என்றும், தமிழ்த் திருமுருகாற்றுப்படையில் விவரிக்கப்பட்டுள்ள வெறியாட்டு எனும் வழிபாட்டுமுறை தற்கால வட மலையாள மக்களிடம் வழக்கிலுள்ளது என்றும் விளக்கம் அளித்துள்ளனர். இந்த வழிபாட்டு முறைகளில் ‘சாதி நீக்கம்’ எனும் கருத்தியல் உள்ளூறையாக அமைந்துள்ளது. இதற்கான மூலவேர் திருமுருகாற்றுப்படைப் படைப்பாக்கமுறையில் உள்ளது என்று கருத வாய்ப்புள்ளது.

எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்கள், சங்க இலக்கியம் எனும் ஒற்றைப் பொருண்மையில் அழைக்கப்பட்டாலும், வெவ்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்டுள்ளன. இதனை, நூல்களின் பாடுபொருள் மற்றும் கவிதை படைக்கப்பட்டுள்ள முறையைக் கருத்தில் கொண்டு அறிஞர்கள் பலர் விளக்கியுள்ளனர். அந்த

விளக்கங்களைக் கவனத்தில்கொண்டு கீழ்வருமாறு சங்க இலக்கிய நூல்களைப் பகுத்துக் கொள்ளலாம்:

- முதல் கட்டம் : குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, புறநானூறு.
- இரண்டாம் கட்டம் : கலித்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து பரிபாடல்.
- மூன்றாம் கட்டம் : சிறுபாணாற்றுப்படை முதலான பத்துப்பாட்டு நூல்கள்.
- நான்காம் கட்டம் : திருமுருகாற்றுப்படை.

இந்தப் பகுப்புமுறை, தமிழ் பக்தி இலக்கியத்திற்கு முந்திய காலகட்டத்தில் தமிழ்நாட்டில் நிலவிய கடவுள் நம்பிக்கை பற்றிய கருத்து வளர்ச்சியைப் பகுத்துப் புரிந்துகொள்ளத் துணைநிற்கிறது. அதாவது, பக்தி இலக்கியத்திற்கு அடிப்படையாக அமைந்த கடவுள் நம்பிக்கையை அறிந்துகொள்ளத் துணைசெய்கிறது. இதன்வழி, ஏனைய திராவிட மொழிகளில் இடம்பெற்றுள்ள பக்தி இலக்கியக் கருத்தியல் நீரோட்டத்திற்கான அடிப்படையைப் புரிந்துகொள்ளவும் முடிகிறது.

தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்றமையும் நூல்களில் நடுகல், கொடிநிலை, கந்தழி, வள்ளி, பேய், பூதம், யமன், அணங்கு, சூர், மாயோன்,சேயோன்,வேந்தன்,வருணன்,முருகன், ஆலமர் செல்வன், ஆனேற்றுக் கொடியுடையான், ஈசன்,ஈர்ஞ்சடை அந்தணன், காலக் கடவுள், தாழ்சடைப் பெரியோன், நீலமேனி வாலிழைபாகத்து ஒருவன்,மணிமிடற்றன், முக்கட் செல்வன் , கொற்றவை, கொல்லிப்பாவை, இயக்கி, தவ்வை, கட்டு, கழங்கு, வெறியாட்டு என வழிபாட்டுடன் தொடர்புடைய பல்வேறு சொற்கள் பயின்று வந்துள்ளன. இந்தச் சொற்கள் பயன்படுத்தப் பெற்றுள்ள சூழல்களின் அடிப்படையில் பண்டைத் தமிழகத்தில் இயற்கை வழிபாட்டுமுறை , மீ இயற்கை வழிபாட்டுமுறை, திணை வழிபாட்டுமுறை, உருவ வழிபாட்டுமுறை என்ற வழிபாட்டுமுறைகள் வழக்கிலிருந்ததை அறிந்துகொள்ள முடிகிறது. இவற்றில், முருகு – முருகன் எனும் தனி ஒரு கடவுளுக்கான வழிபாட்டுமுறை திணை வழிபாட்டுமுறை எனும் இனக்குழு வழிபாட்டுமுறையிலிருந்து உருவ வழிபாடு (வைதீக வழிபாடு) எனும் நகர்மைய வழிபாட்டுமுறைக்கு வளர்ந்துள்ளது. விவரம் வருமாறு:

சங்க இலக்கியங்களில் முருகன் தொடர்பான பதிவுகள் முருகு,செவ்வேள் என நேரடியாகவும் வேலன்,வெறியாட்டு, நெடுவேள் எனத் தொடர்புபடுத்த தக்கவகையிலும் அமைந்துள்ளன (குறிப்பு – 1). எனினும், பரிபாடல், திருமுருகாற்றுப்படை எனும் இரண்டு நூல்களில்தான் வெளிப்படையாகவும் விரிவாகவும் முருக வழிபாடு இடம்பெற்றுள்ளது. இதை, மேல் சுட்டப்பட்ட நான்கு காலகட்டப் பகுப்புவழி விளக்கமாகக் காணலாம்.

முதல் கட்ட நூல்களில் சீற்றம்,வலிமை,வீரம் ஆகியவற்றுடன் முருகன் தொடர்புபடுத்திப் படைக்கப்பட்டுள்ளான். சங்க இலக்கியத்தில் தலைவனுக்கு ஒப்புமையாக இச்சொற்கள் சில இடங்களில் பயின்று வந்துள்ளன. எனினும், இந்த முருகன் தொடர்பான உருவ விவரிப்புமுறை இந்த நூல்களில் இடம் பெறவில்லை. கோட்டம் என்ற குறிப்புக் கிடைக்கிறதே தவிர, அது தொடர்பான வழிபாட்டுமுறையை அறிந்துகொள்ள சான்றுகள் கிடைக்கவில்லை. முருக வழிபாடு தற்காலிக இடங்களில் நிகழ்த்தப்பட்டதற்கான சன்றுகளே கிடைக்கின்றன. இந்த வழிபாட்டுமுறையைத் ‘திணை வழிபாட்டுமுறை’ என்று குறிப்பிடலாம். இந்த வழிபாட்டு முறையில் குறிசொல்லுதல் வெறியாட்டு எனும் இரண்டும் முக்கியத்துவம் பெறுகின்றன. அதாவது, மனித வாழ்க்கையின் முக்கிய நிலையாக அமைகிற தலைவன் - தலைவி வாழ்க்கை முறையோடு தொடர்புடையதாக இந்த வழிபாட்டுமுறை அமைகிறது. இந்த வழிபாட்டை நிகழ்த்தியதில் ‘வேலன்’ என்ற ஆணுக்கு எந்த அளவு முக்கியத்துவம் இருந்ததோ அதே அளவு ‘அகவன் மகள்’ என்ற பெண்ணுக்கும் முக்கியத்துவம் இருந்தது.

இரண்டாவது கட்ட நூல்களில் வெறியாட்டு என்ற முருக வழிபாடு, தனி ஓர் இலக்கியப் பாடுபொருளாக அமையும் பாங்கினைக் காண முடிகிறது. ஐங்குறுநூற்றில் பத்துப் பாடல்கள் இந்தப் பொருளில் இடம்பெற்றுள்ளன. இதே காலகட்டத்தில் எழுதப்பட்ட பரிபாடல் எனும் நூலில் செவ்வேள் எனும் பெயரில் முருகன் தொடர்பான பாடல்கள் கணிசமாக இடம் பெற்றுள்ளன. அந்தப் பாடல்களில் முருகன் தொடர்பான விளக்கத்தில் வட புல இலக்கியங்களில் உள்ள ஸ்கந்தன் தொடர்பான கருத்துகள் வெளிப்படையாக இடம்பெறுகின்றன. அதாவது, முருகன், வள்ளி, தெய்வானை எனும் மூவரும் ஒருவரோடு ஒருவர் தொடர்புபடுத்தப் பெறுகின்றனர்.

மூன்றாவதாக இடம்பெறும் பத்துப்பாட்டு நூல்களில், முருகனோடு தொடர்புடைய குறிஞ்சி நில வாழ்வியலைப் பேசுகிற முக்கியமான நூல் குறிஞ்சிப்பாட்டு ஆகும். எனினும், அந்நூலிலும் முருகனுக்கான வெறியாடல் தொடர்பான பதிவு

கதைப் போக்குடன் இணைக்கப்படவில்லை; ஓரிடத்தில் உவமையாக மட்டுமே வந்திருக்கிறது. அதாவது, வெறியாட்டு இல்லாமலேயே குறிஞ்சி நில மக்களின் காதல் வாழ்க்கை பேசப்பட்டுள்ளது.

நான்காவதாக அமைகிற திருமுருகாற்றுப்படை எனும் நூல் முருகன் சார்ந்த கோவில்களை ஒருங்கிணைத்துப் பாடுவதாக உள்ளது. குறிப்பிட்ட ஒரு கோவிலை அடையாளப்படுத்தி அந்தக் கோவிலில் அந்தணர்கள் மட்டும் வழிபடுவதாகவும், அது சார்ந்த வழிபாட்டு முறையை விளக்குவதாகவும் நூலில் திருவேரகம் எனும் பகுதி அமைகிறது. இதற்கு நேர் மாறாகப் பழமுதிர்சோலை என்ற மற்றொரு பகுதி அமைகிறது. இந்தப் பகுதியில் வேலன் ஆட்டுக்குட்டியை அறுத்து வெறியாட்டு நிகழ்த்தி முருகனை வழிபடுவது விளக்கப்பெறுகிறது. அதாவது, திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம் எனப் பெருங்கோவில் வழிபாடுகள் வளர்ந்துவிட்ட பிறகு, பழமுதிர்ச்சோலையில் திணை வழிபாட்டுமுறை எனும் பண்டைத் தமிழ் வழிபாட்டுமுறை விளக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றாகவும், பக்தி இலக்கிய நூல்களுள் ஒன்றாகவும் இடம்பெறும் இந்த நூலுக்கு 11, 13 ஆம் நூற்றாண்டுகளில் அறிஞர்கள் உரை எழுதியுள்ளனர். வேறு எந்த சங்க இலக்கியத்திற்கும் இத்தகு பழைய உரைகள் கிடைக்கவில்லை. இந்த நூல் தமிழ்ப் பண்பாட்டின் அல்லது திராவிடப் பண்பாட்டின் தொன்மையான கூறாகத் திகழும் திணை வாழ்வியலை வலியுறுத்திச் சொல்வதாக இருக்கிறது.

தமிழர் வழிபாட்டுமுறையில், வழிபடுவோன் நேரடியாகக் கடவுளைப் போற்றிப்பாடிக் கடவுளைத் தன்னிருப்பிடத்திற்கு வருவித்துக் கடவுளிடம் தனக்கு வேண்டியதைப் பெறுதல் என்பது ஒரு முறையாக இருந்தது. இதற்கு அப்பாற்பட்டுப் வழிபடுவோன் கடவுளை நாடிச்செல்லலாம் என்ற ஆற்றுப்படைத் தன்மையைத் திருமுருகாற்றுப்படை விளக்குகிறது. ஆற்றுப்படை நூல்களில் ஏழ்மை நிலையிலுள்ள கலைஞன் ஒருவன் வள்ளலை நாடிச் சென்று தன்னுடைய கலைத்திறனைக் காட்டிப் பொருள் பெறுவதாகப் பாடுபொருள் அமைந்திருக்கும். அதேபோன்றுதான், அன்புக்காகவும் அறிவுக்காகவும் ஏங்குகின்ற ஒருவன் முருகக்கடவுளிடம் சென்று அதைப் பெறவியலும் என்பதை வலியுறுத்துவதாகத் திருமுருகாற்றுப்படையின் பாடுபொருள் அமைந்துள்ளது. இதை, ஒருவர் தனக்கான தேவையை அந்தத் தேவையை நிறைவேற்றும் ஆற்றல் வாய்ந்தவரை நேரில் சந்தித்துப் பூர்த்தி செய்துகொள்ளுதலைக் குறிக்கும். அதாவது,தேவைக்குரியவர்க்கும் தேவையை நிறைவேற்றுபவர்க்கும் இடையே ‘ஒருவரும்’ வேண்டியது இல்லை. என்று கருத்தாக்கம் செய்ய இயலும். இந்தக் கருத்தாக்கமானது, திருமுருகாற்றுப்படையில் இரண்டு முக்கியக் கூறுகள் கவனத்திற்கு உரியனவாக உள்ளன என்பதைத் தெளிவுபடுத்துகிறது. அவை வருமாறு:

1. ஒரு குறிப்பிட்ட கோவிலை அடிப்படையாகக் கொண்டு இறைவனைப் போற்றிப் பாடுதல்.
2. தமிழ் X சமஸ்கிருதம் அல்லது வைதீகம் X அல்வைதிகம் அல்லது அந்தணர் X வேலன் என இருவேறு எதிர்நிலைகளைச் சமன் செய்தல்.

இந்த இரண்டு கூறுகளும் தமிழ் பக்தி இலக்கியத்தில் வெகுவாக ஊடுருவியுள்ளன. இன்னும் குறிப்பிட்டுச் சொல்வதென்றால், தமிழ் பக்தி இலக்கியத்தின் அடி வேர்களாகவே அமைகின்றன. தமிழ் பக்தி இலக்கியத்தில் தொடக்க காலத்திற்குரிய திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் பாடிய பாடல்கள் எல்லாம் ஏதேனும் ஒரு கோவிலை அடிப்படையாகக் கொண்டே அமைகின்றன. நேரில் சென்று திருநாவுக்கரசர் பாடிய கோவில்கள் 125 என்றும், திருஞானசம்பந்தர் பாடிய கோவில்கள் 219 என்றும், சுந்தரர் பாடிய கோவில்கள் 84 என்றும் தகவல்கள் கிடைக்கின்றன. அதாவது, கோவிலில் இருக்கிற இறைவனைப் பாடுதல் என்ற முறை திருமுருகாற்றுப்படைவழித் தமிழ் இலக்கிய வரலாற்றில் வளர்ச்சி பெற்றுள்ளது எனலாம். விவரம் வருமாறு:

திருமுருகாற்றுப்படையையும் பரிபாடலையும் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பின்பு எழுதப்பட்ட நூல்களாகப் பிளல் சாமி குறிப்பிடுகின்றார்(1990). அதிலும், திருமுருகாற்றுப்படையைக் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டது என்கிறார். இது தொடர்பாக பிளல் சாமி அளித்துள்ள விளக்கத்தில் இடம்பெறும் கருத்தியல் வருமாறு:

- திருமுருகாற்றுப்படையில் ‘நரைக்காய்’ என்று ஒரு காய் இடம்பெறுகிறது. இது, சாதிக்காயைக் குறிக்கும் என்று உரையாசிரியர்கள் கருதுகின்றனர். இந்தச் சாதிக்காய் மலேசியாவில் இருந்து இந்தியாவிற்குக் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் கொண்டு வரப்பட்டது. இதைத் தாவரவியல் அறிஞர்கள் தெளிவாக எடுத்துரைத்துள்ளனர்.
- திருமுருகாற்றுப்படையிலும் பரிபாடலிலும் இடம்பெறுகின்ற வைதீகத் தன்மை சார்ந்த முருகனுடைய அனைத்து விவரங்களும் ராமாயணம், மகாபாரதம், குமாரசம்பவம் ஆகிய வடமொழி நூல்களில் இருந்து தமிழுக்கு வந்தவை.

அதாவது, குறுந்தொகை முதலான முதற்கட்ட நூல்களில் உருவமற்ற கடவுளாகச் சித்திரிக்கப்பட்ட முருகன், கந்தழி என்று சொல்லப்பட்ட முருகன் திருமுருகாற்றுப்படையில் ஆறுமுகங்களையும் பன்னிரண்டு கரங்களையும் உடையவனாகப் படைக்கப்படுகிறான். இதற்கும் வடமொழிப் புராணங்கள்தான் அடிப்படை என்கின்றார். பி.எல்.சாமி. எட்டுத்தொகை நூல்களுள் 'கொற்றவை சிறுவ' என்று ஒரு தாயினுடைய மகனாக முருகன் சுட்டப் பெறுகிறான். ஆனால், திருமுருகாற்றுப்படையில் சிவனுடைய மகனாக முருகன் சொல்லப்பெறுகிறான். இதற்கும் காரணம் சமஸ்கிருத இலக்கியங்களுடைய செல்வாக்குத்தான் என்கிறார். ஆக, திருமுருகாற்றுப்படையில் தமிழ் அல்லது தமிழ் மரபுக்குரிய திணை வழிபாட்டு முருகக்கடவுளும் வைதீக வழிபாட்டு முருகக்கடவுளும் சமன் செய்யப்படுகின்றனர் எனலாம். இந்தச் சமப்படுத்தம் என்பது தமிழ், சமஸ்கிருதம் என்ற மொழிவேறுபாட்டு நிலைக்கு அப்பாற்பட்டதாக உள்ளது. ஒரு குறிப்பிட்ட கடவுளுக்குரிய இருவேறு வழிபாட்டு முறைகளைச் சமப்படுத்துவது இங்குக் கவனத்திற்குரியது. அதுவும், புலால் உணவை மறுக்கிற அந்தணரும் புலால் உணவை வாழ்க்கையின் மையமாகக் கொண்ட வேடுவரும் முருகனை வழிபடுவதாகக் காட்டுவது கவனத்திற்குரியது. அந்தணர் பூவால் முருகனை வழிபட, வேலன் ஆட்டை அறுத்து வழிபடுகிறான். அதாவது, எதிர்நிலைப்பட்ட வழிபாட்டு மரபுகள் சமன் செய்யப்படுகின்றன. இதை, 'சாதியச் சமநிலைப்படுத்தம்' என்ற புரிதலுக்குரியதாகக் கொண்டு செல்லலாம். அதாவது, ஒரு குறிப்பிட்ட இறைவனுக்கான வழிபாட்டுமுறை சாதியத்திற்கு அப்பாற்பட்டதாக அமைய வேண்டும் என்ற கருத்து உருக்கொண்டுள்ளது எனலாம். சுருங்கச் சொல்வதென்றால், இறைவனைப் போற்றும்போது

- குறிப்பிட்ட கோவிலையும் அந்தக் கோவில் இருக்கும் ஊரையும் கவிதைப் படைப்பில் கொண்டு வருதல்,
- சாதிய சமநிலையை உருவாக்க விழைதல்

எனும் இரண்டும் திருமுருகாற்றுப்படையில் அறிமுகமாகியுள்ளன எனலாம். இந்த மனவோட்டம் பக்தி இலக்கியத்தில் பரிணமித்து வளர்ந்துள்ளது. விவரம் வருமாறு:

பக்தி இலக்கியத்தில் இடம்பெறுகிற நாயன்மார்களைச் சாதிய அடிப்படையில் அறிஞர் பலர் வகைப்படுத்தியுள்ளனர். அந்தணர் முதல் புலையர் வரை பல்வேறு வகுப்புகளை சார்ந்த நாயன்மார்கள் இடம்பெறுவதனை அறிஞர் விளக்கியுள்ளனர். இவர்களுக்குச் சமூகத்தில் அளிக்கப்பட்ட மதிப்பு நிலையில் வேறுபாடுள்ளது என்பதையும் திறனாய்வாளர்கள் சுட்டியுள்ளனர். எனினும், சிவன் அல்லது இறைவனுடைய பக்தன் என்ற நிலையில் அந்தணரான ஞானசம்பந்தர்க்கு நிகராகப் புலையர் வகுப்பைச் சேர்ந்த நந்தனார் நிலைநிறுத்தப் பெறுகிறார். இந்த நிலைநிறுத்தம்தான் சாதியற்ற ஒரு சமூகத்தை குறிப்பாக வழிபாட்டுமுறையில் சாதியற்ற சமூகத்தை உருவாக்க விழைந்துள்ளனர் என்று கருத வழிவகுக்கிறது. இதனை உறுதிசெய்துகொள்ள ஏராளமான சான்றுகள் கிடைக்கின்றன. புலால் உணவிலிருந்து வெகுதூரம் தள்ளிநின்ற சமணத்திலிருந்து சைவத்திற்கு வந்தவர் திருநாவுக்கரசர். அவர் தன்னுடைய பாடலில்,

> **அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்**
> **ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்**
> **கங்கைவார் சடைக்கரந்தார்க்கு அன்பராகில்**
> **அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே.**

என்று குறிப்பிடுகிறார். ஆக, இதுவரை விளக்கப்பட்ட நான்கு காலகட்ட கருத்தியலைப் பன்னிரு திருமுறை இலக்கியப் பொருண்மையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ் பக்தி இலக்கிய வரலாற்றில் நிகழ்ந்த வளர்ச்சிநிலை கீழ்வருமாறு அமைவது தெரியவருகிறது.

- நிலை ஒன்று; ஆற்றுப்படை: கலைஞன் - வழிப்பயணம் - அரண்மனை - அரசன் \ வள்ளல் – சாதியற்ற நிலை – பொருளியல்வழி மேல்நிலையாக்கம்.
- நிலை இரண்டு; திருமுருகாற்றுப்படை: புலவன் – வழிப்பயணம் – கோவில் – முருகன் – அந்தணர் வேடுவர் சமன் செய்தல் – மதியியல்வழி மேல்நிலையாக்கம்.
- நிலை மூன்று ; பன்னிருதிருமுறை: நாயன்மார் – வழிப்பயணம் – கோவில் – சிவபெருமான் – ஆவுரித்து உண்பவரைக் கடவுளாக்குதல் - வழிபாட்டியல்வழி மேல்நிலையாக்கம்.

இந்த மூன்று கருத்துகளையும் கீழ்வருமாறு கொள்கையாக்கம் செய்யலாம்:

திணைச்சமூகக் காலகட்டத்தில் சாதியற்றநிலை இருக்கிறது. திருமுருகாற்றுப்படைக் காலகட்டத்தில் சாதியத்தைச் சமநிலைப்படுத்தும் சூழல் இருக்கிறது. நாயன்மார் காலத்தில் சாதியைச் சமநிலைப்படுத்துவதற்கு ஓர் அழுத்தம் தருகிற சூழல் உருவாகிறது.

இவற்றில், சாதியைச் சமநிலைப்படுத்த வேண்டும் என்று அழுத்தம் தருகிற மூன்றாவது கருத்தானது ஏனைய திராவிட மொழிகளுக்கும்

சமஸ்கிருத இலக்கியங்களுக்கும் பெரியபுராணம் வழியாகப் பரவுகிறது.விவரம் வருமாறு:

பெரியபுராணத்தில் இடம்பெறும் நாயன்மார், தெலுங்கில் பால்குறிக்கி சோமநாதர் எழுதிய பசவபுராணத்திலும் இடம்பெற்றுள்ளனர்; கன்னடத்தில் ஹரீஸ்வரர் எழுதிய சிவகணதரகளேகளு எனும் நூலிலும் இடம்பெற்றுள்ளனர். பெரியபுராணம் சமஸ்கிருதத்தில் சிவ பக்த விலாசம் என மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப்படையில் இடம் பெறுகிற வேலன் வழிபாட்டு முறையின் மையப்பகுதிகளாக அமையும்

1) களம் அமைத்தல்
2) பலி இடுதல்
3) பாடுதல்
4) வழிபடுதல்

எனும் கூறுகள் இன்றைய வட கேரளப் பகுதியில் வழக்கில் இருப்பதனை பி.எல்.சாமி தம் கள ஆய்வுவழித் தெளிவாக விளக்கியுள்ளார். வட கேரளத்தில் ஆடப்படும் திரையாட்டம் தெற்குக் கர்நாடகத்திலும் இலங்கையிலும் ஆடப்படும் கோலம் எனும் ஆட்டத்திலும் வெறியாட்டின் கூறுகள் இடம்பெற்றுள்ளன என்கிறார். ஆக, சுருக்கமாகச் சொல்லுவது என்றால் தமிழ்த் திருமுருகாற்றுப்படையில் விதையாக இடம்பெற்ற 'சாதிநீக்கம்' எனும் கருத்து தமிழ் பக்தி இலக்கியத்தில் செடியாகவும் மரமாகவும் வளர்ந்தது, தன்னுடைய விழுதுகளைத் தன்னொத்த மொழிகளில் எழுதப்படும் இலக்கியங்களில் இடம்பெற வழிவகுத்தது என்று குறிப்பிடலாம்.

**குறிப்பு – 1**

முருகன் (பொரு. 131, பரி. 8:81,82, அகம். 1:3, 59:11, 98:10, 158:16, புறம்.16:12, 23:4, 299:6), முருகு (திரு. 243,244, மது. 38 ,181,611,724, பட். 37, நற்.34:11, 47:10, 82:4, 225:1, குறு. 362:1, ஐங். 245: 3,247:3.249 2,308:4, பதி. 26:12, பரி. 8:65, 21:51, அகம். 22:11,28:6, 118:5,137:8, 138:10,181:6,232:4,272:13, 288:4, புறம். 56:14,259:5), செவ்வேள் (பட். 154,155, பரி. 5:13,14,34:2,35:2), கொற்றவை சிறுவ (திரு 258.).

**துணைநின்றவை**


- அறவேந்தன், இரா., ''திருமுருகாற்றுப்படையில் திணைப்பண்பாடு'', மணற்கேணி 61, 2023.
- சாமி,பி.எல்.,1990(மு.ப.), சங்க நூல்களில் முருகன், சேகர் பதிப்பகம்,சென்னை.
- திருமுருகாற்றுப்படை உரைவேறுபாடு, 2024(மு.பதி.), இரா.அறவேந்தன் & நித்தியா அறவேந்தன், என்.சி.பி.எச்., சென்னை.


●



பேராசிரியர் & தலைவர்,
சிறப்புநிலைத் தமிழ்த்துறை, ஜவகர்லால்நேரு
பல்கலைக்கழகம், புதுதில்லி 110 067



**புதிய வரவு**


## அண்மைக்காலத் தமிழ் நாவல்கள் கோட்பாட்டு வாசிப்பு

**பா.ஆனந்தகுமார்**




**விலை: ரூ. 140**

புதிய ஒப்பிலக்கிய ஆய்வில் இத்தாலிய ஆய்வாளரான ஃபிராங்கோ மொரெட்டியின் விலகி வாசித்தலும் அமைப்பின் கோட்பாடும் அண்மைக் காலத்தில் இலக்கிய உலகின் கவனத்தை ஈர்த்துள்ளன. அவற்றைப் பொருண்மையாகக் கொண்ட கட்டுரை இந்த நூலில் முதல் கட்டுரையாக இடம்பெற்றுள்ளது. இந்தக் கட்டுரையினை அடிப்படையாகக் கொண்டு, நாவல்களை எவ்வாறு அணுக வேண்டும் என்று அறிவுறுத்தலுடன். நாவல்களுக்கான விமர்சனங்களும் இந்த நூலில் கட்டுரைகளாக வைக்கப்பட்டுள்ளன. நாவல்களை வாசிக்க. இந்த நூல் உதவும்.



கட்டுரை

# மாக்சிம் கார்க்கி
## அன்னையிட்ட அணையா நெருப்பு!



பாரதிபாலன்

பெலகேயா நீலவ்னா எளிய குடும்பத்தைச் சேர்ந்த பெண். ரஷ்யாவில் ஒரு தொழில் நகரத்தில் வாழ்ந்தார். அது மிகவும் சிறிய நகரம். அங்கு தொழிற்சாலைகள் அதிகம் இருந்தன. தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் புகைகள், தொழிலாளர்களை வேலைக்கு அழைக்கும் ஓங்கி ஒலிக்கும் சங்கொலி, தொழிலாளர்களின் பரபரப்பு என்று அந்த சிறு நகரம் எப்போதும் ஒரே இரைச்சலாகவே இருக்கும்!.

பெலகேயா நீலவ்னாவின் வாழ்க்கை மிகவும் கஷ்டமானது!. அவரது கணவர் மிகவும் கட்டுப்பாடானவர். அவரை ஓர் அடிமை போல் தான் நடத்துவார். அடிக்கடி அவருடன் சண்டை போடுவார். அதனால் பெலாகேயா எப்போதும் ஒருவிதமான பதற்றத்திலும் பயத்திலுமே வாழ்ந்தார். எதற்கும் எதுவும் பேசாமல் அடங்கி, அமைதியாக இருப்பதே தனக்குப் பாதுகாப்பு என்று அவர் நினைத்தார். உலக வாழ்க்கை எதுவுமே தெரியாமல் இருளில் இருப்பதுபோலத்தான் அவர் இருந்தார், இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவர் கணவர் இறந்து விடுகிறார். கணவர் இறந்த பின்பு வாழ்க்கையைத் தனியாக எதிர்கொள்ள வேண்டிய ஒரு நிலை. என்ன செய்வது என்றே தெரியவில்லை. ஒரே திகைப்பு! ஆனாலும் அவர் துணிந்து எழுந்தார். தனி ஒருத்தியாக வாழ்க்கையை எதிர்கொண்டார். உழைத்தார்; கடுமையாக உழைத்தார்; தன் மகனை வளர்த்தார். கடைசி வரை தன் மகன் பாவேலுடன் வாழ்ந்தார். அவருக்கென்று தனியாக எந்தக் கனவும் இல்லை. மகனை நல்ல நிலைக்குக் கொண்டு வர வேண்டும். அவன் கஷ்டம் இல்லாமல் வாழ வேண்டும், இதுதான் அவருடைய ஆசை.

பாவேல் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்தார். ஆனால் அவர் மற்ற தொழிலாளர்களைப் போல இல்லை. தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருக்கமாட்டார். இரவில் நிறையப் புத்தகங்களைப் படிப்பார். அதிகமாகச் சிந்திப்பார், எப்போதும் மாடாக உழைத்துக் கொண்டிருக்கும் தொழிலாளர்கள் மட்டும் ஏன் வாழ்நாள் முழுவதும் ஏழைகளாகவே இருக்கிறார்கள், முதலாளிகள் ஏன் தொடர்ந்து பணக்காரர்களாகவே இருக்கிறார்கள் என்பதுதான் அவர் சிந்தனை. அனைவரும் சரிசமமாக, பரஸ்பரம் மரியாதையுடன் வாழ வேண்டும் என்று அவர் விரும்பினார். அவர், அப்படி நினைப்பது அவர் அம்மாவுக்கு ஒருவிதமான பயத்தைத் தந்தது. ஏனென்றால், அப்போதைய சமூகச் சூழல் மிகவும் மோசமாக இருந்தது. தொழிலாளர்களுக்குப் பரிந்து பேசினால் ஆபத்துதான்.“போலீசாருக்குத் தெரிந்தால் பிடித்துக்கொண்டு போய் விடுவார்களே...” என்று அவர் கவலைப்பட்டார். ஒருவித அச்ச உணர்வோடே இருந்தார்.

காலம் கடந்தது. பாவேலின் நண்பர்கள் சிலர் அவரின் வீட்டுக்கு வரத் தொடங்கினர். அவர்கள் தொழிலாளர்களின் உரிமைகள், சுதந்திரம், நல்ல எதிர்காலம் பற்றிப்பேசத் தொடங்கினார்கள். அவர்களுடைய பேச்சு தொடர்ந்து கொண்டே போனது. இன்னும் பல புதிய நண்பர்களும் சேர்ந்து கொண்டார்கள். ஒவ்வொரு நாளும் இரவு முழுவதும் ஏதாவது பேசிக் கொண்டே இருப்பார்கள். பெலாகேயாவின் காதிலும் அந்தப் பேச்சுக்கள் விழும். அவர் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டே இருப்பார். அவர் எதுவும் பேச மாட்டார்.

ஆரம்பத்தில் பயமாக இருந்தாலும், பின்னர் அவர்களின் பேச்சில் உயர்ந்த எண்ணம் இருப்பதை அறிந்து கொண்டார். அந்த பேச்சில் உள்ள நியாயத்தை உணர்ந்து கொண்டார். மெல்ல அந்தச் சிந்தனையின் பால் அவருக்கும் ஈர்ப்பு வந்தது.தன் மகன் எந்தத் தவறும் செய்யவில்லை என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டார். சமூக நியாயத்திற்காகத்தான் தன் மகன் நிற்கிறான் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்ட பின்பு அவருக்குள் ஒரு தெளிவு ஏற்பட்டது. அந்த மனத்தெளிவுதான் அவருக்குத் தைரியத்தைக் கொடுத்தது. பின்னர் போலீசார் பாவேலை மிகத் தீவிரமாகக் கவனிக்கத் தொடங்கியவுடன், பழைய பயமும் பதற்றமும் மீண்டும் ஏற்படத் தொடங்கியது, ஆனால் இப்போது பெலகேயா ஒதுங்கிப் போகவில்லை. அவருடைய அணுகுமுறையில் பெரிய மாற்றம் தெரிந்தது. இரகசியமாக மகனுக்குப் பல வகையிலும் உதவினார். சில புத்தகங்களை மறைத்து வைத்துக்கொண்டார். இவர்களுடைய இரகசியச் செய்திகளை மற்றவர்களிடம் எடுத்துக் கொண்டு போகும் பணியைச் செய்யத் தொடங்கினார். பாவேலின் நண்பர்கள் பலரை இவர் பாதுகாத்தார். அந்த அனுபவத்தினால் அவர் உள்ளத்தில் தைரியம் வளர்ந்தது. புதிய சிந்தனையும் புத்துணர்வும் மனதில் கிளைத்தன.

அன்று மே தினம்! தொழிலாளர்கள் அமைதியான போராட்டம் ஒன்றினை நடத்தினர். பெரும் திரளாகத் தொழிலாளர்கள் கூடியிருந்தனர். அவர்கள் செங்கொடி ஏந்தி, 'நீதி வேண்டும் ...நீதி வேண்டும்...' என்று வீர முழக்கமிட்டனர். போலீசார் அந்தக் கூட்டத்தினைக் கட்டுப்படுத்தினர். கட்டுப்படாத தொழிலாளர்கள் தொடர்ந்து முழக்கமிட்டுக் கொண்டிருந்தனர். போலீசார் பாவேலைக் கைது செய்தார்கள். இது பெலாகேயாவுக்கு மிகுந்த மனவேதனை அளித்தது. என்றாலும், அவர் உடைந்து போகவில்லை. தன் மகன் நம்பிய எண்ணங்கள், கொண்ட கொள்கைகள் உண்மையானவை, மக்களுக்கானவை, நேர்மையானவை என்று அவர் உறுதியாக நம்பினார். அந்த நம்பிக்கை அவரை வழிநடத்தியது.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. நீதிமன்றத்தில் பாவேல் தொழிலாளர்களுக்காகப் பரிந்து தைரியமாகப் பேசினார். உண்மையை உரத்த குரலில் உணர்ச்சி பொங்கப் பேசினார். அவர் பேசிய அந்தப் பேச்சு எல்லோரையும் கவர்ந்தது. அதைக் கேட்ட பெலகேயாவுக்குப் பெருமையாக இருந்ததது. பாவேல் சிறைக்கு அனுப்பப்பட்டார். மகன் சிறைக்குச் சென்றாலும் அந்த இயக்கப் பணி முடங்கிவிடக் கூடாது என்று பெலாகேயா அந்த இயக்கப் பணியைத் தானே கையில் எடுத்தார். தொழிலாளர்களை வழி நடத்தினார். ஒவ்வோர் ஊராகச் சென்று மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். சுதந்திரம், சமூக நீதி பற்றித் தெருத்தெருவாகப் பிரசாரம் செய்தார். தொழிலாளர்கள் அவர் பின் அணிவகுத்து நின்றனர். அப்போது தொழிளாளர்கள் ஒரு புதிய ஒளி தோன்றியது போல உணர்ந்தனர்.

கதையின் இறுதியில், பெலாகேயா மக்கள் முன் உணர்ச்சி பொங்க வீர உரையாற்றுகிறார். அந்த உரை எல்லோரையும் கவர்கிறது, மெய்சிலிர்க்க வைக்கிறது. அந்த உரையைக் கேட்டு பெரும் திரளான தொழிலாளர்கள் பொங்கி எழுகிறார்கள். புது எழுச்சி கொள்கிறார்கள், போலீஸ் மிகப்பெரிய பதற்றம் அடைகிறது. நிர்வாகம் திகைத்துப் போகிறது. ஒரு புதிய சக்தி உருவாகிவிட்டது என்று அவர்களுக்கு அச்சம். போலீசார் அவரை வளைத்துப் பிடிக்கிறார்கள். ஆனாலும் அவர் துணிந்து நிற்கிறார், எதற்கும் அஞ்சவில்லை. பெரும் ஆற்றலும் வீரமும் கொண்ட ஒரு பெண்மணியாக அவர் அதனை எதிர்கொள்கிறார்.

இதுதான் கால மாற்றம்! எல்லாவற்றுக்கும் அஞ்சிக் கொண்டிருந்த சராசரிக் குடும்பப்பெண், ஒரு குடும்பத்தின் கட்டுப்பாட்டுக்குள் முடங்கிக் கிடந்த பெண், கணவனின் அடக்குமுறைக்கு அடங்கிப் பயந்து பதுங்கிக் கிடந்த பெண், இன்று வீறுகொண்ட சக்தியாக எப்படிப் பரிமாணம் பெற்றார்? இந்த மாற்றம் எப்படி நடந்தது. சமூக உரிமைக்குக் குரல் கொடுக்கும் பெண்ணாக மக்களின் சமூக நீதிக்காகப் போராடும் பெண்ணாக அவர் எப்படி மாறினார். இப்போது சமூகம் அவரை ஒரு இரும்பு மனிசியாகப் பார்க்கிறது. ஒட்டு மொத்த நிர்வாக அமைப்பும் அந்த சக்தியின் ஆற்றலைக் கண்டு அஞ்சிநடுங்குகிறது, இதுதான் மாற்றம், சிந்தனையில் ஏற்பட்ட மாற்றம், இந்த மாற்றம் உடனே நடந்து விடவில்லை, மெல்ல மெல்ல நடந்தது, கால மாற்றத்தோடு நடந்தது. ஆனால் அந்த மாற்றம் உறுதியானது நிலையானது, என்பதுதான் உண்மை, இது தான் தாய் நாவலின் கதை.

இந்த நாவல் ஒரு சாதாரண எளிய மனிதர் கூட உண்மையாக, நேர்மையாக, ஒரு கோட்பாட்டில் உறுதி கொண்டால் எத்தனை துன்பங்கள் நேர்ந்தாலும், கொள்கையைக் கைவிடாமல் பற்றிக் கொண்டால் கால மாற்றத்தில் எல்லாவற்றையும் மாற்றி விட முடியும், மாற்றத்திற்கான சக்தியாக மலர்ச்சியடைய முடியும் என்பதைத்தான் மிக நுட்பமாகவும் விரிவாகவும் பேசுகிறது.

தாய் நாவல் உலக இலக்கியத்தில் மிக முக்கியமான சமூக நாவலாகக் கருதப்படுகிறது. இந்த நாவல், ரஷ்யாவில் தொழிலாளர்களின் போராட்ட வாழ்வையும் வரலாறையும் மிக நுட்பமாக சொன்னாலும் ஒரு காலகட்டத்தில் சமூக அமைப்பை மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கிறது. தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை எப்படி இருந்தது, அவர்களுடைய ஒவ்வொரு நாளும் எவ்வளவு துன்பம் நிறைந்ததாக இருந்தது, அவர்கள் எவ்வாறெல்லாம் சுரண்டப்பட்டார்கள் என்பதை உணர்வுப்பூர்வமாகச் சொல்வதோடு அவர்கள் விழிப்புணர்வு பெற்ற வரலாற்றையும் பேசுகிறது.

இந்த நாவலில் அரசியல் மற்றும் சித்தாந்தக் கருத்துகள் மிகுதியாக இருந்தாலும், குடும்ப உறவுகளையும் - குறிப்பாக, குடும்பத்தில் ஒரு தாயின் பங்கு அவளுடைய தனிப்பட்ட உணர்வுகள் பெண் என்ற நிலையில் அவள் அடையும் துன்பங்கள், மனம், அது சார்ந்த மாற்றங்கள் என்று பல விடயங்களை உளவியல் பூர்வமாகவும் சித்தரிக்கிறது, இங்கே நாம் கவனிக்க வேண்டியது, ஒரு பெண்ணை எவ்வளவு தூரம் அடக்கி அமுக்கி வைத்திருந்தாலும் அவள் உணர்வு கொண்டு சிந்திக்கத் தொடங்குகின்ற பொழுது ஏற்படுகின்ற மாற்றத்தின் வீரியத்தையும் விளைவுகளையும் மிகத் தெளிவாகச் சித்தரிக்கிறது.

நாவலின் மையக் கதாபாத்திரம் பெலாகேயா நிலோவ்னா. நாவலின் தொடக்கத்தில் இவர் ஒரு சராசரி பெண்ணாகவே காட்சிப்படுத்தப்படுகிறாள், மிகவும் பயந்த சுபாவம். அடங்கி ஒடுங்கி நடக்கக்கூடிய ஓர் அடிமையைப் போலவே சித்தரிக்கப்பட்டுள்ளார். அவர் தன் மகன் பாவேலையே உலகமாக நினைக்கிறார். இந்த நிலையில், அவர் மாபெரும் சமூகப் போராட்டத்தின் ஒரு பகுதியாக மாறுவது மிகவும் முக்கியமான மாற்றமாகும். அந்த மாற்றம் எப்படி நிகழ்கிறது என்பது உளவியல் நிலையிலும் சமூக நிலையிலும் முக்கியமானது.

பெலகேயாவின் கதாபாத்திர உருவாக்கம் மிகவும் இயல்பாக அமைந்துள்ளது. அவர் திடீரென்று தைரியமானவராக மாறவில்லை. அந்த மாற்றம் மெல்ல மெல்ல நடக்கிறது. அதற்குப் பின்புலமாக காலமும் சமூகமும் உள்ளன. அவர் தன் மகன் செய்யும் செயல்களைப் பார்த்து, அவன் பேசும் வார்த்தைகளைக் கேட்டுத் தான் அவர் மாறுகிறார். இறுதியில், அவர் உண்மை மற்றும் நீதிக்காக எவ்வளவு பெரிய துன்பத்தையும் ஏற்கத் தயாரான பெண்ணாக மாறுகிறார். இந்த மாற்றமே இந்தப் பாத்திரத்தின் வலிமை.

நாவலின் முக்கியமான மற்றொரு கதாபாத்திரம் பாவேல் வலாசோவ், இவர் ஓர் இளைஞர். தொழிற்சாலையில் வேலை செய்கிறார், ஆனால் மற்றவர்களைப் போல் இவர் சராசரியாக இல்லை. தீவிர வாசிப்புப் பழக்கம் கொண்டவர். தொடர்ந்து, சமூகத்தைப் பற்றிச் சிந்திப்பவர். குறிப்பாக, தொழிலாளர்களின் நிலையைக் குறித்து ஆழமாக யோசிப்பவர், உழைக்கும் வர்க்கமும் சுரண்டும் வர்க்கமும் ஏன் சமூகத்தில் எதிரெதிர் துருவங்களாக இருக்கின்றன? முதலாளிகள் ஏன் மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொள்கிறார்கள் அவர்களுக்குப் பணம் மட்டுமே ஏன் முக்கியமாகப்படுகிறது? தொழிலாளர்கள் ஏன் தொடர்ச்சியாக பசியோடு போராடுகிறார்கள். உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கேட்பது பெரும் குற்றமா? இப்படியெல்லாம் தீவிரமாக, சிந்திக்கிறார்.சமத்துவமான ஒரு சமூகம் உருவாக வேண்டும் என்பது அவருடைய விருப்பமாக இருக்கிறது. பாவேலின் பாத்திரம் புதிய தலைமுறையின் அடையாளமாகக் காட்டப்படுகிறது. மாற்றத்தை விரும்பும் ஒரு சமூகம் உருவாகி வருவதுதான் இந்தக் கதாபாத்திரத்தின் அடையாளம்.

பாவேலின் நண்பர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகச் சித்தரிக்கப்படவில்லை. அவர்கள் ஒரு குழுவாகவே காட்டப்படுகிறார்கள். இது ஆசிரியரின் திட்டமிட்ட உத்தி. அந்தக் குழு, தொழிலாளர் வர்க்கத்தின் ஒற்றுமையைக் காட்டுகிறது. ஒருவருக்கொருவர் உதவுதல், ஒன்றாக இணைந்து

குழுவாகச் செயல்படுதல், தியாகம் செய்யத் தயாரான மனம், பொது நலனில் அக்கறை கொண்ட மனம் போன்ற பண்புகள் அவர்களிடம் வெளிப்படுகின்றன. இதன் மூலம், சமூக மாற்றம் ஒரே ஒரு மனிதனால் அல்ல; பலர் சேர்ந்து தொடர்ச்சியாக மேற்கொள்ளும் முயற்சியால் நிகழ்கிறது என்பதே நாவலின் கருத்தாகிறது.

நாவலாசிரியரின் கருத்து வெளிப்பாட்டு உத்தி மிகவும் எளிமையானது. நேரடியானது. ஆசிரியர் அரசியல் கருத்துகளை நேரடியாகப் போதிப்பதில்லை. அன்றாடச் சமூகத்தில் நடைபெறும் நிகழ்வுகள் ஊடாகவே கருத்துகளைச் சொல்கிறார். தொழிற்சாலைகளின் இருண்ட பக்கங்கள், கடினமான வேலை, போலீசாரின் கண்காணிப்பு, கைது, நீதிமன்ற வழக்கு போன்றவை சமூக அநீதியை வெளிப்படுத்துகின்றன. அதே நேரத்தில், ரகசியக் கூட்டங்கள், நண்பர்களின் ஒற்றுமை, ஒருவருக்கொருவர் காட்டும் அன்பு, பரிவு, பிணைப்பு ஆகியவை நம்பிக்கை வெளிப்படுகின்றன; இவையெல்லாம் மாற்றத்திற்கான குறியீடாகவும் காட்டப்படுகின்றன.

தாய் நாவலில் நேரடியாக மரபான முறையிலே கதைசொல்லும் உத்தி கடைபிடிக்கப்பட்டுள்ளது. கதையில் தொடர்ச்சி இருக்கிறது, குழப்பமான உத்திகள் இல்லை. மூன்றாம் நபர் கதைசொல்லும் உத்தியே கடைபிடிகப்பட்டுள்ளது, ஆனால் பெலகேயாவின் மனநிலை உலகப் பாங்கில் விரிவாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது, அவரது பயம், குழப்பம், பின்னர் உருவாகும் தைரியம் ஆகியவை ஒவ்வொரு நிலையிலும் நுட்பமாகவும் விரிவாகவும் காட்டப்படுகின்றன. இது அப்போதைய மக்களின் இயல்பான மனநிலை, இதனால் வாசகர் அவருடன் மனதளவில் இணைந்து விடுகிறார். குறியீடுகளோ, சிக்கலான மொழியோ இல்லை. இயல்பாக நீரோடை போல கதை நகர்கிறது,

தாய் நாவலின் தனித்தன்மை, மாபெரும் ஒரு பெரிய சமூக இயக்கத்தை ஒரு தாயின் பார்வையில் நகர்த்திச் செல்வதில்தான் உள்ளது. அரசியல் போராட்டச் சிந்தனைகள் ஒவ்வொரு மனதிலிருந்தும் தொடங்குகிறது. இது மற்ற அரசியல் நாவல்களிலிருந்து தாய் நாவலை வேறுபடுத்துகிறது. மேலும், பெண்களின் உள்ளார்ந்த சக்தியை இந்த நாவல் வெளிப்படுத்துகிறது. பெலகேயா உடலால் வலிமை இல்லாதவர். ஆனால் மன உறுதியால் வலிமையானவர்.

பாத்திரப் படைப்பு, கருத்து வெளிப்பாடு, எடுத்துரைப்பு உத்தி, தனித்த பார்வை ஆகிய அனைத்தும் ஒருங்கிணைந்து இந்த நாவலை ஒரு முக்கிய சமூக இலக்கியமாக மாற்றுகின்றன. எளிய மொழியில், ஆழமான கருத்துகளைச் சொல்வதாலேயே தாய் நாவல் இன்றும் முக்கியமான படைப்பாகத் திகழ்கிறது. தாய் நாவல் உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டுப் புகழ்பெற்றது. அதன் புகழ் இன்றும் உலகம் முழுவதும் மங்காமல் இருப்பதுதான் அதன் தனிச் சிறப்பு. உலக சமூகத்தில் அது ஏற்படுத்திய தாக்கம் மிகப் பெரியது.

தமிழில் தாய் நாவல் முதல் மொழிபெயர்ப்பு 'அன்னை (1946)' எனும் பெயரில் ப.ராமஸ்வாமி அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டது. இதன் பிறகு தொ.மு.சி.ரகுநாதன் அவர்கள் 1952ஆம் ஆண்டு மொழிபெயர்ப்பு செய்து ஸ்டார் பிரசுரத்தின் வெளியீடாக வெளியானது. பின்னர் சோவியத் இரஷ்யாவின் முன்னேற்றப் பதிப்பகத்திற்காகவும் தொ.மு.சி.ரகுநாதன் 1975ஆம் ஆண்டு மீண்டும் மொழியாக்கம் செய்தார், இவ்விருமொழிபெயர்ப்புகளும் 'தாய்' என்ற தலைப்பிலேயே வெளியாகின..

முல்லை முத்தையாவின் மொழியாக்கம் 'அம்மா (1956)' எனும் பெயரில் இன்ப நிலைய வெளியீடாகவும், சிவனின் மொழியாக்கம் 'தாய் (2019)' எனும் பெயரில் கலா நிலைய வெளியீட்டிலும் வந்துள்ளன.. இறுதியாக சத்யாவின் மொழியாக்கத்தில் 'தாய்' நாவல் 2021ஆம் ஆண்டு பொன்னுலகத்தின் பதிப்பில் வெளியானது. இவற்றைத் தவிர கலைஞர் கருணாநிதியின் 'தாய் காவியம் (2004)' என்ற பெயரில் கவிதை வடிவில் "தாய்" என்ற காவியத்தை எழுதியுள்ளார்..

மாக்சிம் கார்க்கி உலக இலக்கியத்தில், சமூக மாற்றத்திற்காக எழுத்தை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்திய எழுத்தாளர்களில் முக்கியமானவர் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் ரஷ்யாவில் சமூக-அரசியல் போராட்டங்கள் நிறைந்த காலமாக இருந்தன. தொழில்துறை வளர்ச்சியால் உருவான தொழிலாளர் வர்க்கம், வறுமை, சுரண்டல், அவ மரியாதை, புறக்கணிப்பு போன்ற அவலங்களை அனுபவித்தது. அரசியல் அடக்குமுறையும் முதலாளித்துவ ஆதிக்கமும் பொதுமக்களின் வாழ்வை நசுக்கிய இந்தச் சூழலில்தான் மாக்சிம் கார்க்கி எழுதத் தொடங்கினார். சிறுவயதிலிருந்தே வறுமை, பசி, உழைப்பு என பலவற்றை அனுபவித்த அவரது வாழ்க்கை அனுபவங்கள் அவரது இலக்கியங்களுக்கு வலிமை சேர்த்தன.

மாக்சிம் கார்க்கியின் படைப்புகளில் இலக்கியம் என்பது கற்பனை அல்ல; கலைவடிவம் அல்ல, அது வாழ்க்கையின் நேரடிப் பிரதிபலிப்பு. அவர் சமூக யதார்த்தவாத இலக்கியத்தின் (Socialist Realism) முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படுகிறார். மனிதன் தன் நிலையைக் குறித்து சிந்திக்கவும்,

அதைக் கேள்வி கேட்கவும், மாற்றத்திற்குத் தயாராகவும் வேண்டும் என்ற எண்ணம் அவரது படைப்புகளின் மையமாக உள்ளது

இந்த நோக்கத்தை வெளிப்படுத்தும் முக்கியமான நாவலாக தாய் – *(Mother)* உள்ளது.. இதே கருத்தோட்டத்தில் அமைந்த ஃபோமா கோர்டெயேவ் – *Foma Gordeyev* மற்றும் ஆர்டமோனோவ் வணிகம் – *The Artamonov Business* ஆகிய நாவல்கள், முதலாளித்துவ அமைப்பின் புற வெற்றிகளுக்குப் பின்னால் மறைந்துள்ள உள்ளார்ந்த வெறுமையையும், செல்வமும் அதிகாரமும் மனித உறவுகளை எவ்வாறு சிதைக்கின்றன என்பதையும் ஆழமான சமூக விமர்சனமாக எடுத்துக் காட்டுகின்றன. வெறும் பொருளாதார வளர்ச்சி மனித நேயத்தை வளர்க்காது; மாறாக, அது உறவுகளைச் சந்தைப்பொருளாக்கி விடுகிறது என்பதை இந்நாவல்கள் மூலம் விவரிக்கிறார்.

மேலும், க்ளிம் சாம்கினின் வாழ்க்கை – *Life of Klim Samgin* என்ற விரிவான நாவல், தனிப்பட்ட ஒருவரின் வாழ்க்கைப் பாதையைக் கொண்டு, முழு ரஷ்ய சமூகத்தின் அரசியல், சிந்தனையியல் மற்றும் வரலாற்று மாற்றங்களைப் பதிவு செய்யும் ஒரு முக்கிய ஆவணமாகத் திகழ்கிறது. காலப்போக்கில் சமூகத்தில் உருவான அரசியல் குழப்பங்கள், சிந்தனை மாற்றங்கள் மற்றும் மதிப்பீடுகளின் மாறுபாடுகள் ஆகியவற்றை இந்த நாவல் ஒரு சமூக வரலாறாக வாசகனின் முன் வைக்கப்படுகிறது.

மாக்சிம் கார்க்கியின் சுயசரிதை நூல்கள் அவரது இலக்கிய உலகின் அடித்தளமாக அமைந்துள்ளன. “என் குழந்தைப் பருவம்” *(My Childhood)* “உலகில்” *(The World )* மற்றும் “எனது பல்கலைக்கழகங்கள்” *(My Universities)* ஆகிய நூல்கள், அவரது வாழ்க்கைப் போராட்டங்களை நேர்மையாகப் பதிவு செய்கின்றன. இந்நூல்கள் மூலம் வறுமை, சமூகக் கொடுமை, மன உறுதி ஆகியவை எவ்வாறு ஒருவரை வடிவமைக்கின்றன என்பதை வாசகர் தெளிவாக உணர முடிகிறது.

நாடகத் துறையிலும் கார்க்கி குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்தார். “அடித்தளம் (“*At the Bottom* ) நாடகம், சமுதாயத்தின் கீழ்தட்டில் வாழும் மக்களின் நம்பிக்கையிழந்த வாழ்க்கையையும், சமூக மரியாதைக்கான தேடலையும் ஆழமாக வெளிப்படுத்துகிறது. அதேபோல் *The Philistines* மற்றும் *Enemies* போன்ற நாடகங்கள், நடுத்தர வர்க்கத்தின் சமூக மோதல்களை விமர்சிக்கின்றன.


மாக்சிம் கார்க்கியின் படைப்புகள் அவரது காலத்தின் சமூக-அரசியல் பின்னணியில் ஆழமாக வெளிப்படுத்துபவை, அவை ரஷ்ய சமூகத்தின் வரலாற்று ஆவணங்களாக மட்டுமல்லாமல், மனித சமத்துவம், சமூக நீதி, விழிப்புணர்வு ஆகியவற்றை உலக அளவில் பேசும் இலக்கியங்களாக விளங்குகின்றன. அதனால் தான், காலம் கடந்தும் மாக்சிம் கார்க்கியின் நூல்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் தொடர்ந்து வாசிக்கப்படுகின்றன; அவர் இப்போதும் இளைஞர்களின் ஊக்கசக்தியாகவே இருக்கிறார்.

●

**கட்டுரையாளர்: பேராசிரியர் மற்றும் எழுத்தாளர்**

---

**புதிய வரவு**




**விலை: ரூ. 130**

## பாரதி: தாக்கமும் தாக்கும்

**சுகுமாரன்**

பல்லாண்டுகளாகக் குழந்தைகள் இலக்கியத்தில் ஒளிர்ந்து வரும் சுகுமாரன் எழுதியுள்ள நூல் பாரதி: தாக்கமும் தாக்கும். இந்த நூலில் இரண்டு பெரும் பாகங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. பாரதியின் தாக்கம் என்னும் முதல் பாகத்தில் மொழி – கலை – இலக்கியம், குழந்தை இலக்கியம், சமூகப் பாடல்கள் உள்ளிட்ட தலைப்புகளில் 10 கட்டுரைகளை எழுதியுள்ள சுகுமாரன் இரண்டாம் பாகத்தில் பாரதியின் மீதான தாக்குதல்களுக்கு எதிர்க்குரல் கொடுத்திருக்கிறார். பாரதியைப் பற்றி அவருடைய மகள் சகுந்தலா பாரதி அளித்த தகவல், அவரைக் கோழை என்றும், பார்ப்பனர் என்றும் இழிவு செய்த எதிரிகளின் எகத்தாளம் அனைத்துக்கும் பதிலடி கொடுத்திருக்கிறார், சுகுமாரன்.

பாரதியின் மீதான தாக்கும், அதற்கான எதிர்த்தாக்குமே இந்த நூல்!



# ஓர் ஓவியனின் ஓவியமான வாழ்வு!

**சா. ஜெயராஜ்**

**கலை என்பது**

“கலையின் முதன்மையான நோக்கம் என்பது, ஒரு கலைஞன் தான் அனுபவித்த உணர்வுகளை மற்றவர்களையும் உணர வைப்பதே ஆகும். கலைஞனின் உணர்வுகள் உண்மையாக இருக்க வேண்டும். மக்களின் ஒட்டுமொத்த நலனுக்காக, உலகளாவிய உணர்வுகளை உருவாக்கும் கலை மட்டுமே சிறந்தது!” – இது பேரெழுத்தாளர் லியோ டால்ஸ்டாயின் கூற்று!

இந்தக் கருத்துவீச்சுக்கு ஏற்ற வண்ணம் டச்சு ஓவியரான வின்சென்ட் வான்கா உலகப் புகழ்பெற்ற ஓவியங்களை வரைந்து, மறைந்தார். இன்று அந்தப் படைப்பாளனின் புகழ், அறிகிறவர் மலைத்து நிற்கிற அளவுக்கு உலகில் நிலைத்து நிற்கிறது.

**நிகழ்வுகளே புனைவாக**

வின்சென்ட் வான்காவுக்கும் அவருடைய சகோதரருக்குமிடையே எழுதிக் கொள்ளப்பட்ட 700-க்கும் மேற்பட்ட கடிதங்களை ஆதாரமாகக் கொண்டு, ஓவியர் வின்சென்ட் வான்காவின் வாழ்க்கை வரலாறு எழுதப்பட்டுள்ளது. முழுக்க முழுக்க ஆவண ஆதாரங்களையே அடிப்படையாகக் கொண்டு, சுமார் 10 விழுக்காடு அளவுக்குச் சொல்லொழுங்கு செய்து புனையப்பட்டதே Lust of Love என்னும் புதினம். 1934-இல் இர்விங் ஸ்டோனால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு வெளிவந்த இந்தப் புதினத்தைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார், கவிஞரும் எழுத்தாளருமான கே.பி.கூத்தலிங்கம்.

வான்காவின் வரலாற்றுப் புதினத்தின் தமிழ் மொழிபெயர்ப்பை ‘வாழ்க்கை மீதான பேராவல்’ என்ற பெயரில் சிறப்பாகத் தயாரித்து வெளியிட்டுள்ளது – நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்.

‘வாழ்க்கை மீதான பேராவல்’ என்னும் நாவலின் கதைத் தலைவன் வின்சென்ட் வான்காவின் தம்பி தியோ வான்கா, வின்சென்ட்டின் உடன் இயங்கி வரும் ஓவியர் பால் கோகென் ஆகிய இருவரும் அவருடைய வாழ்வில் முதன்மையானவர்கள். அவர்கள் இருவரும் செய்த பண உதவியும் செலுத்திய உடலுழைப்புமே, வின்சென்ட்டையும்,

அவரது இறவா ஓவியங்களை வரையும் திறனையும் வாழ்வித்தன. இந்த ஓவியங்கள் உலகின் மிக மதிப்புபெற்ற ஓவியங்களில் அடங்கும். அவற்றில் ஒன்று 1987இல் சுமார் 40 மில்லியன் அமெரிக்க டாலருக்கு ஏலம் போனது.

வான்கா முதலில் ஒரு விற்பனையகத்தில் பணியாற்றுகிறார்; பின்னர், சகோதரர் தியோவின் ஊக்கம் மற்றும் நிதி உதவியுடன், ஓவியக் கலையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்கிறார்.

**ஓவியராகிறார்**

பாரிஸில் டூலூஸ்-லாட்ரெக், செசான், கோகென் போன்ற ஓவியர்களைச் சந்தித்து அவர்களுடன் கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபடுகிறார். இது அவரது ஓவியப் பாணியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துகிறது; இருண்ட நிறங்களிலிருந்து பிரகாசமான வண்ணங்களுக்கு மாறத் தொடங்குகிறார்.


பிரான்சின் தெற்குப் பகுதியான ஆர்லஸில் குடியேறி, சூரிய ஒளி நிரம்பிய மஞ்சள் வண்ண ஓவியங்களை வரைகிறார். கோகெனுடன் சேர்ந்து ஓவியக் குழு அமைக்க முயன்றாலும், அவர்களுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படுகிறது. இதனால் வின்சென்ட்டுக்கு மனநலம் பாதிக்கப்பட்டது. அதன் பிறகு, நடந்த நிகழ்ச்சிகளெல்லாம் இரத்தத்தைச் சிதற வைத்த அதிர்வார்ந்தவை. முதலில், அவர் ஓவியங்களை வரைந்த பின்னணியைப் பார்ப்போம்.

1878-ஆம் ஆண்டு, வான்கா பெல்ஜியத்தின் ஏழ்மையான சுரங்கப் பகுதியான போரினேஜிற்குச் சென்றார். ஒரு புராட்டஸ்டண்ட் மதப் போதகராகச் சென்ற வான்காவிற்கு அப்போது 25 வயது.

அவர் தன்னை ஒரு சாதாரணத் தொழிலாளியைப் போலவே கருதி, அந்தத் தொழிலாளிகளுடன் கலந்து ஒன்றாக வாழ்ந்து, அந்தத் தொழிலாளர்கள் அனுபவித்த கொடூரமான வாழ்க்கை முறையை நேரில் கண்டறிந்தார்.

சுரங்கத் தொழிலாளர்கள் மீது வான்கா மிகவும் இரக்கம் கொண்டார். அவர்கள் அனுபவித்த கொடூரமான வறுமை வான்கா மனத்தை ஓர் உலுக்கு உலுக்கி விட்டது. அவர்கள் உழைத்த உழைப்பு, உற்ற துயரம், அவர்களுடைய சுற்றுச் சூழல் ஆகியவை வான்காவின் ஓவியங்களுக்கு மையக் கருப்பொருள்களாக அமைந்தன. அவருடைய மனத்தில் ஏராளமான கற்பனைகள் தோன்றின. அவற்றை ஒழுங்குபடுத்தி ஓவியங்களாக வரையத் தொடங்கினார்.

1885இல் தனது முதன்மையான முதல் படைப்பான 'உருளைக்கிழங்கு உண்போர்' (The Potato Eaters) என்னும் ஓவியத்தை வரைந்தார்.




வெளியீடு: என்சிபிஎச், விலை: ரூ.865

இதைத் தொடர்ந்து, அவருடைய புகழின் உச்சத்தைக் காட்டும் இரண்டாவது முதன்மையான ஓவியம் 'விண்மீன்கள் நிறைந்த இரவு' (The Starry Night).

1889ஆம் ஆண்டு, மனநலம் குன்றிய நிலையில், வான்கா பிரான்சில் செயின்ட்-ரெமி (Saint Remy) மனநல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அப்போது வரைந்ததுதான் விண்மீன்கள் நிறைந்த இரவு.

மத போதகராக இருந்தது, சுரங்கத் தொழிலாளர்களுடன் தங்கியிருந்தது ஆகியனவெல்லாம் வான்காவின் மனதில் இருந்து விலகியிருக்கக் கூடும். அல்லது அவற்றைத் தாண்டி, அவருடைய காதல் வாழ்வின் நிகழ்வுகளோ அல்லது தெற்குப் பிரான்சிலுள்ள தனது வீட்டு நினைவுகளோ அவரை ஆக்கிரமித்துவிட்டன.

தெற்குப் பிரான்சிலுள்ள தனது வீட்டுப் பால்கனிக்கு வெளியே இரவில் கண்ட காட்சியைத் தன் நினைவுக்குக் கொண்டு வந்து வரைந்ததாகக் கூறப்படுகிறது. அல்லது, ஏதோ கற்பனையான கிராமத்தை இணைத்து வான்கா வரைந்திருக்கலாம்.

சுழல் வாழ்வில் வானம் சித்தரிக்கப் பட்டிருப்பதாக இந்த ஓவியத்தை வான்கா வரைந்திருப்பார். இது ஓவியச் சேகரிப்பாளர்களின் கனவு ஓவியம் ஆகும்.





நீலம், மஞ்சள், ஊதா போன்ற வண்ணங்களை அதிகமாகப் பயன்படுத்தி, இரவின் அமைதியையும், அதில் மறைந்திருக்கும் உணர்ச்சிக் கொந்தளிப்பையும் வெளிப்படுத்துகிறார் வான்கா. இந்த ஓவியம் உலகம் முழுவதும் உள்ள பல கலைஞர்களுக்கும் இசையமைப்பாளர்களுக்கும் ஓர் இரசனையுணர்வை, படைப்புணர்வை ஏற்படுத்தியது. ‘சூரியகாந்திகள்’ தொடரில் (1888-1889) மூன்று வெவ்வேறு நிழல்களின் மஞ்சள் வண்ணத்தைப் பயன்படுத்தி, ஒரே வண்ணத்தின் ஆழத்தையும் உணர்வையும் வெளிக்காட்டினார். சூரியகாந்தி மலர்களின் மஞ்சள் வான்காவின் மகிழ்ச்சியையும் நட்பையும் வெளிப்படுத்தியது.

**கலைஞனின் காதல்கள்:**

‘காதலுக்குக் கண் இல்லை’ என்பார்கள். இந்தக் கலைஞர் வின்சென்ட் வான்காவின் காதல்களுக்குக் கணக்கும் இல்லை. கிடைத்திருக்கும் பின்வரும் பட்டியலில் அதைப் பார்ப்போம்.

**யூஜின் லாயர்** என்பவரையும், உறவினரும் கணவனை இழந்தவருமான **கீ ஸ்ட்ரிக்கர்** என்பவரையும், ஒருதலையாகக் காதலித்து ஏமாற்றம் அடைந்தார் வான்கா.

**சியென் ஹோர்னிக்:** இவர் ஒரு பாலியல் தொழிலாளி. அவர் கருவுற்றிருக்கும் போது வான்காவுடன் காதல் உருவானது. அவரது குழந்தையுடன் வான்காவுடன் ஓராண்டு காலம் வாழ்ந்தார். பின் அந்த உறவு முறிந்தது.

**மார்கவ் பேகமென்:** தனது பக்கத்து வீட்டுப் பெண்ணான மார்கவைக் காதலித்து அவரது குடும்பத்தினருக்குப் பிடிக்காததால் திருமணம் நின்று போனது.

**கோர்டினா டி க்ரூட்:** நியூனென் பகுதியைச் சேர்ந்த இவர் வான்காவிற்கு ஓவியம் வரைந்து கொடுத்திருக்கிறார். அவருடனும் காதல் உருவானது. அக்காதலும் முறிந்தது.

**அகோஸ்டினா செகடோரி:** பாரிஸில் வசித்த பெண் வான்காவுக்கும் இவருக்கும் காதல் ஏற்பட்டது. அங்கும் பிரிவு ஏற்பட்டது.

இந்தக் காதல் தொடரில் மார்கவைக் காதலித்த நேர்வில் இவருக்கு வயது 31; காதலி மார்கவுக்கு வயது 41. அவரது குடும்பத்தார் கட்டப் பஞ்சாயத்து செய்துதான் இவர்களுடைய காதலைப் பிரித்து விட்டிருக்கின்றனர்.

**திருப்பம்**

இப்படியாகச் சென்ற வான்காவின் வாழ்க்கையானது இனிய இயற்கை; இன்றும் ரசிக மனங்களில் இருந்து கலையாத எழில் ஓவியங்கள்; கனிந்த காதல், கனியாத காதல் என மருதமும், பாலையுமான காதல் பயணம் ஆகியவற்றிலேயே நிறைந்து கரைந்தது.

இனிதே தொடங்குகின்ற வான்காவின் காதல் நிறைந்த கலை வாழ்க்கை, உச்சகட்ட இன்னலைத் தொடுகிறது. இசிஜி போல பல உணர்வுகளை ஏற்ற இறக்கத்தில் வழங்குகின்றன - இந்தப் புதினத்தின் இறுதி இயல்கள். வான்கா என்னும் ஓவியரின் கதை ஒரு காவியம்! செறிவுமிக்க அவரது வாழ்க்கையே ஓவியமான ஓர் ஓவியம்தான்!

**சொல்லில் அடங்காத சுவை**

மூன்று வயதுக் குழந்தைகள் பென்சிலைக் கொண்டு, சுவரில் கிறுக்குவதைப் பார்த்திருப்போம் அல்லவா? அப்படி கிறுக்கும் குழந்தைகள், தான் வரையத் தொடங்கும் கோட்டை அப்படியே வலமாக நீட்டி, பின் அப்படியே மேல்நோக்கிக் கொண்டு போய், அதற்குமேல் கை போகாது என்றவுடன், ஏதோ ஒரு பக்கம் திருப்பும்; இது அந்தக் குழந்தையின் மனம் போலத் தொடரும். அப்போது அந்தப் பிஞ்சு என்ன சிந்தித்தது என்று அதற்கும் சொல்லத் தெரியாது; நமக்கும் புரிந்து கொள்ள இயலாது. அப்படித்தான், இந்தக் கலைஞன் வான்காவின் வாழ்க்கைப் பயணமும்; அவருடைய விருப்பம் போலச் சென்றுள்ளது. அவருடைய வாழ்க்கைக் கதை நவரசம் நிரம்பியது. எந்த ஒரு கனியின் சுவையையும் சொல்லில் விளக்க இயலாது. அப்படித்தான் இர்விங் ஸ்டோன் எழுதிய இந்தப் புதினமும்! இதில் மொழிபெயர்ப்பாளர் கவிஞர் கே.பி.கூத்தலிங்கம் அவர்களின் பங்களிப்பும் பாராட்டத்தக்கது. வாசித்தால்தான் இதன் சுவை தெரியும்.

●

**கட்டுரையாளர்: மொழிபெயர்ப்பாளர்**

**புதிய வரவு**





**விலை: ரூ. 145**

## காலனியத் தமிழகத்தில் திசை மாறிய இசை


**எஸ்.ஜெயசீல ஸ்டீபன்**

காலனியத் தமிழக வரலாற்றை. அதன் அனைத்துக் கூறுகளின் அடிப்படையிலும் ஆய்வு செய்து எழுதி வருகிறவர், எஸ்.ஜெயசீல ஸ்டீபன். பக்திப் பாடல்கள், காதல் பாடல்கள், சமூகத்தைப் பற்றிய பாடல்கள், வரலாற்றுப் பாடல்கள், இன்பவியல் பாடல்கள், திரைப்படப் பாடல்கள். உரையாடல்கள் போன்றவை கிராம் போன் இசைத்தட்டுகளில் வெளிவந்ததையும், இசை சந்தைப் படுத்தலையும் வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் ஆய்வு செய்து. விளக்குகிறது, 'காலனியத் தமிழகத்தில் திசை மாறிய இசை' என்னும் இந்த நூல்.

## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!







**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

**மே மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்**

5432 5431 5777 6661 5774

3112 2693 5778 1194 5775

1195 2748 5776 5315 4723

5782 6662 6819 1750 6664

3402 6663 1190 5313 5779

தனி இதழ் ₹ **45.00 /** ஆண்டு சந்தா ₹ **540.00**
மாணவர்களுக்கு ₹ **500.00**, / ஆயுள் சந்தா ₹ **5400.00**
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ **4050.00**

*சந்தாத் தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch, Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

**கிளைகள்**

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

# காலனியத்தால் வஞ்சிக்கப்பட்ட ஓர் உழைக்கும் சமூகத்தின் சுயசரிதை

தன்னைப் பற்றி அறியத் தொடங்கி, காலனியத்தால் வஞ்சிக்கப்பட்ட ஒரு உழைக்கும் ஓர் சமூகத்தின் சுயசரிதையாக எழுதி முடிக்கப்பட்ட கதைதான் 'மலங்காடு' எனும் வரலாற்று நூல். இந்த அரிய ஆவணத்தைத் தமிழில் முதலில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்டுள்ளது. சமூக விழுமியங்கள், கட்டமைப்பு, பண்பாடு எல்லாமே பஞ்சத்தால் எப்படி ஒரு சில பத்தாண்டுகளில் நூற்றாண்டுகளாய் மீள முடியாத நிலைக்கு மாறிடும் என்பதற்குச் சமகால சாட்சியமே மூணாறு தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கை.

19 மற்றும் 20-ஆம் நூற்றாண்டு காலனியச் சுரண்டல்களால் பல செயற்கையான பஞ்சங்கள் இந்தியா முழுவதும் நிலவி வந்தமை நாம் அறிந்ததே. இப்பஞ்சம் மக்களை நகரங்கள் நோக்கி நகரச் செய்தது. அதைக் கங்காணிகள் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, 1860களில் காஞ்சிபுரம், மதுரை, திருச்சி, திருநெல்வேலி ஆகிய தமிழகப் பகுதிகளில் இருந்து "மலையில் பணம் காய்க்கிறது, அதைப் பறிப்பதுதான் வேலை" என்று பாமர மக்களை ஏமாற்றிக் கூட்டிச் சென்றனர். வாழும் ஆசையோடு சென்ற பாமரர்களுக்குக் கிடைத்ததோ, சாட்டையின் கருந்தழும்புகளும், குருதி உறையும் வலியுமேயாகும். இவ்வாறாக, மக்களை வால்பாறைக்குக் கொண்டு வந்தனர். இந்த வலியோடும், உண்மையோடும் நூல் தொடங்குகிறது.

பிடல்காஸ்ட்ரோ மு



400, 500 கிலோ மீட்டர் நடந்தே சென்றவர்களுக்குக் கிடைத்த முதல் அனுபவமே மனிதன் என்ற அடையாள (உரிமை) இழப்புதான். மிஷல் ஃபூக்கோ சொல்வது போல, ‘கண்காணிப்பு’ எனும் அதிகார ஆயுதம், கங்காணிகள் மற்றும் வாச்சர்மாரைக் கொண்டு அவ்வளவு துல்லியமாகப் பேணப்பட்டது.

தொழிலாளர்கள் முதல் ஐந்து ஆண்டுகள் அங்கே பாதை அமைக்கவும், நிலங்களைச் சமன் செய்யவும் மிளகு முதலிய வாசனைப் பொருட்களைப் பயிரிடவும் செய்தனர். இந்த முயற்சி தோல்வியுறவே, சீனத் தேயிலைகள் பயிரிடப்பட்டன. நாலரை ஏக்கரில் பயிரிடப்பட்ட பகுதியின் பெயரும் 'நாலரை ஏக்கர்'தான். இதுபோன்ற வரலாற்றுச் செய்திகளைச் சமகாலத்தோடு பொருத்திச் சொல்லிச் செல்கிறார் ஆசிரியர். இன்று வரை அஞ்சி ஏக்கர், ஒன்பது ஏக்கர், 10ஆம் நம்பர், 12ஆம் நம்பர் என நில அளவுகள் வைத்தே இடங்கள் அறியப்பட்டு வருவதை மூணார் சென்றபோது அறிய முடிந்தது. இந்தத் தோட்டத்தில்தான் நீண்ட காலனியச் சுரண்டல் தொடங்குகிறது.

வெக்கை முதலிய படைப்புகள் கீழ்வெண்மணி என்னும் கள ஆய்வை மேற்கொண்டவர்களின் கருத்துகளாக இருக்க, செந்நெல் களத்தில் நின்றவர்களின் கருத்தாக, உள்ளதை உள்ளபடியே ஒரு புனைவும் இன்றி விளக்கியது போல், மக்கள் பகிரும் செவி வழி செய்திகள் மூலமாகவும் எரியும் பனிக்காடு நாவலின் கருத்துக்களின் வழியாகவும் அறியலாகும் செய்திகளைக் கடந்து இந்நூலின் ஆசிரியர் கள ஆய்வை களத்தில் ஒரு பகுதியாக இருந்து தோட்ட அடிமைத்தனத்திலிருந்து வெளியில் வந்து முனைவர் பட்டம் பெற்று பேராசிரியர் எனும் நிலையில் கல்வியைக் கற்றுத் தருவதோடு அந்தக் களத்தையும் உள்ளபடியே விளக்குகிறார்.

லண்டன் செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்தப்பட்ட மூணாறு தேயிலை உலகச் அளவில் சந்தைப்படுத்தப்பட்டதைக் கூறுகிறார். இதற்காக, ஜே.டி. முன்ரோ திருவிதாங்கூர் அரசர்களுடன் 2000 ஏக்கர் நிலத்தையும் எவ்வித கால வரையறையும் இன்றி, தந்திரமாக ‘கருப்பு ஒப்பந்தம்’ போட்டார். இந்த நிலம் 30 ஆண்டுகளில் 9000 ஹெக்டேரை எட்டியது எனும் வரலாற்று விவரத்தை அரசு மற்றும் கம்பெனி ஆவணங்களின் அடிப்படையில் ஆசிரியர் விளக்குகிறார்.

முதலாம் தலைமுறையினர், காடுகளை அழித்துத் தேயிலைகளைப் பயிரிடுவதையே அவர்களின் வாழ்க்கையாக அமைத்தனர். அவர்களுக்கு முறையான உணவு, ஓய்வு, உரிமை என்று எதுவுமே அளிக்கப்படாமல் அவர்கள் கொத்தடிமைகளாகவே நடத்தப்பட்டனர். எப்போதும் ஓய்வின்றி மலைகள் மீது ஏறி இறங்கும் குதிரைகளைக் காணும்போது தொழிலாளர்களுக்குத் தங்களைக் காண்பது போலத் தோன்றியது. காரணம் பேசுவதற்கும் அழுவதற்கும் இறப்பதற்கும் கூட கடிவாளம் (உரிமை) அதிகாரிகள் கைகளில் போனது. ஒரே ஒரு கம்பளி - அதை அணிந்து கொண்டே வேலைக்குச் செல்ல வேண்டும்; வீட்டிற்கு வந்தால் போர்த்திக் கொள்ளவும் அது மட்டுமே. மழைக்காலங்களில் நனைந்தால், அந்த ஈரச் சாக்கினைப் பிழிந்து அப்படியேதான் பயன்படுத்தியாக வேண்டும், வேறு வழியில்லை. கூன்வண்டுகளும், பூச்சிகளும், அட்டைகளும் காலனியர்கள் மற்றும் கங்காணிகளோடு சேர்ந்து அவர்கள் இரத்தத்தை மேலும் உறிஞ்சின. தப்பித்துச் செல்வதற்கும் வழியில்லை. ஒரு மலையில் இருப்பவர்களுக்குப் பக்கத்து மலையில் என்ன நடக்கிறது, மனிதர்கள் இருக்கிறார்களா என்று கூடத் தெரியாது. எப்படியாவது தப்பித்துச் செல்லலாம் என்றால், வேறொரு எஸ்டேட்டில் உள்ள காவலர்களிடம்(வாச்சர்) மாட்டிக் கொள்வார்கள்; நரகம் மேலும் நரகமாகிவிடும்.

ஓய்வெடுக்க விடாமல் உழைப்பை உறிஞ்சியதால், தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட கோபம் உடல் பலம் இருந்தும், துப்பாக்கியால் மறைந்தது. அப்படி துப்பாக்கிக்கும் சாட்டையடிக்கும் பயந்துபோன வாழ்க்கையிலும் காதல் துளிர்க்கத்தான் செய்தது. முதலாம் தலைமுறையிலிருந்து அதிகமாகத் தப்பித்துச் செல்கிறார்கள் என்பதற்காக ஆங்கிலேயர்கள் கையாண்ட வேறோர் உத்தி, மக்களின் காதல் உணர்ச்சியை அவர்களின் தேவைக்காகப் பயன்படுத்திக் கொண்டது.

இந்தத் தருணத்தில் கங்காணிகள் (கலாசாரக் காவலர்கள்) காதலை எதிர்க்க, அவர்களை ஆங்கிலேயர்கள் கடிந்து, மக்களை காதல் செய்ய அனுமதித்தனர். இது தப்பித்துச் செல்லலாம் என்ற எண்ணத்தை மாற்றி, குடும்பம் என்ற வலைக்குள் சிக்க வைக்கச் செய்த சூழ்ச்சி.


இதுதான் ஆங்கிலேயர் மூளை என ஆச்சரியப்படுவதற்குள், ஆசிரியர் மேலும் ஓர் அதிர்ச்சியைத் தருகிறார். கங்காணிகள் ஒருபடி மேலே சென்று, தமிழ்நாட்டின் குலதெய்வங்களான கருப்பசாமி, மாடசாமி, முனியாண்டி, முனீஸ்வரன் போன்ற நாட்டார் தெய்வங்களை எல்லைத் தெய்வங்களாக்கி தொழிலாளர்கள் தப்பித்துப் போவதைத் தடுத்தனர். 1915-க்குப் பிறகு, ஐந்து

தலைமுறைகளாகத் தெய்வத்தின் மீதும், 'கடன் வாங்கிவிட்டோம்' என்றதாலும் கட்டுப்பட்டு வாழ்ந்தனர். கம்பளிக் கடனையும், முன்பணமாகக் கம்பெனிக்காரர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட பணத்தையும் தங்கள் வாழ்நாள் முழுவதும் வேலை செய்து கழிக்க முடியாமல், தலைமுறை தலைமுறையாய் அங்கேயே உழைத்து மடிந்தனர். ஏழைகளுக்குக் காவல்துறை, சட்டங்கள் எது மாறினாலும், அறத்தால் அவர்கள் எப்போதும் வஞ்சிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.

அவ்வப்போது கங்காணிகள் துளியும் இரக்கமில்லாமல் நடக்கும்போது, மக்களிடமிருந்து வெடித்த வன்முறையை சில நபர்கள், “அதிகாரத்தைப் பகைத்துக்கொள்ள வேண்டாம்” என சண்டையைத் தணிக்கும் சாந்தக் குரலாக இருந்து கொண்டேதான் இருந்தனர். சேர, சோழ, பாண்டியர்கள் ஒற்றுமையாகத்தான் இருந்தார்கள்; வடநாட்டில் இருந்து வந்தவர்கள்தான் இவர்களைப் பிரித்தாளும் சூழ்ச்சி செய்து, மக்களை அடக்கி ஆள முடியும் என நினைத்தனர் என்று கூறும்போது, வேலாயுதம் சொன்னார், "இப்போது நாம் ஆங்கிலேயர்களின் அடிமைகள். அந்தக் காலத்தில் பண்ணையார்களின் அடிமைகள் - அவ்வளவுதான் வித்தியாசம்." இப்படி மக்கள் ஏமாற்றத்திற்கும் சுரண்டலுக்கும் உள்ளாக்கப்பட்டதை அவர்கள் குரல் வழியாகவே நம்மிடம் கொண்டு வந்திருக்கிறார் ஆசிரியர்.

கங்காணிகளின் கொடுமைகளை ஆங்கிலேயத் துரைகளிடம் நேரடியாகச் சொல்லிவிடலாமா என அவர்கள் துணிந்தபோது, அது மிக மோசமான முடிவாக அமைந்தது. காரணம், கோள் சொல்பவர்களை ஆங்கிலேயர்கள் முழுமையாக நம்பினர். இது 'மொழியாகிய தமிழ்' என்ற நூலில் நா. கோவிந்தராஜன், ஆங்கிலேயர்களுக்கும் மக்களுக்கும் இடையே துபாஷிகள் செய்த தந்திரங்களை நினைவூட்டுகிறது.

1920 முதல் கம்பெனி அனுமதியுடன் கங்காணிகள் முண்டாசும் கோட்டும் அணிந்து, தங்களை 'நவயுகக் காலனியாளர்களாகவே' மேல்நிலையாக்கம் செய்து கொண்டனர். புதிதாக மோட்டார் சைக்கிள், இயந்திரங்கள் வரும்போது, ஆங்கிலேயர்களும் கங்காணிகளும், தொழிலாளிகளும் ஆச்சரியத்தோடு பார்த்தனர். இயந்திரத்தைக் கண்டு களி கொள்ளும் மனம், தொழிலாளிகளைப் பார்த்துக் கருணை கொள்ளவில்லையே என ஆசிரியர் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார். வருவாயைப் பன்மடங்காக்கும் இயந்திரத்தின் மீது வரும் அக்கறை, அடிமைகள் மீது எப்படி வரும்? துன்பத்தில் இருப்பதோ தொழிலாளிகள், ஆனால் மீட்பர் எனும் இயந்திரம் வந்தது வியாபாரிகளுக்கே.




வெளியீடு: என்சிபிஎச், சென்னை | விலை: ரூ. 450

எப்படியோ, ஆங்கிலேயர்களுக்கான ‘குட்டி லண்டனாக’ மாற்ற ரயில் பாதைகள் போடப்பட்டன, எந்திரங்கள் கொண்டுவரப்பட்டன. அதை உருவாக்கிய தொழிலாளர்களுக்கு அது நரகம் ஆனது. தொழிற்புரட்சியால் விளைந்த இயந்திரங்களை இறக்குமதி செய்த ஆங்கிலேயர்கள் ஏனோ தொழிலாளர் சட்ட நெறிமுறைப் புத்தகங்களை அவர்கள் நாட்டிலேயே வைத்துக் கொண்டனர். அதுவரை தத்துவப் பார்வையில் விவாதிக்கப்பட்டிருந்த காலத்தை அகவயமானதாக (Subjective) மாற்றினர். கடிகாரம் கண்டுபிடிக்கப்பட்டு கண்காணிப்பாளர்களிடம் கொடுக்கப்பட்டது. ரயிலில் கருப்புக் கோட்டு அணிந்து வந்த 'நிறுவை கண்காணிமார்' கைகளில் கடிகாரத்தை அணிந்திருந்தனர். உழைப்பைச் சுழற்சி முறையில் உறிஞ்சித் தள்ளினர். தற்போதும் சுழற்சி முறையில் இரவும் பகலும் யாருக்காகவோ உழைத்துக்கொண்டே இருக்கிறோம்.

முதல் இரண்டு தலைமுறைகள் தமது வாழ்க்கையை உழைத்தே பழக்கப்படுத்திக் கொண்ட நேரத்தில், இயற்கையும் இவர்களுக்கு இழைத்த துரோகமே 1924 ஆம் ஆண்டு பெய்த வரலாறு காணாத மழை. எஸ்டேட்டுகளில் வெள்ளம் வந்து, ரயில்களும் ரயில் பாதைகளும் மாட்டுப்பட்டி நகரமும் மண்மூடிப் போயின.

கொத்துக் கொத்தாக எத்தனை மக்கள் மாண்டனர் என்பது இன்றுவரை யாரும் அறியாத காலனின் கணக்குகள். ஆனால் அதை அறிந்த காலனிய காலன்கள் வெறும் 33 பேர் என்றே கணக்கு எழுதினர்.

ஆங்கிலேயர்களின் கொடுமைகளை எடுத்துரைக்கும் ஆசிரியர், எந்தவிதப் போராட்டமும் இல்லாமல், சாதியப் பாகுபாடு இன்றி அடிப்படைக் கல்வியை (ஐந்தாம் வகுப்பு வரை) ஆங்கிலேயர்களே வழங்கினார்கள் என்பதையும் நேர்மையுடன் பதிவு செய்கிறார். தொழிலாளர்கள் அனைவருமே சுரண்டப்பட்டதால், அவர்களுக்குள் சாதி, மத பேதங்களால் அவ்வப்போது ஏற்பட்ட சிறிய சலசலப்புகள் பெரிதாகவில்லை. மக்கள் விடுமுறைகளை மத நல்லிணக்கத்துடன் கொண்டாடினர்.

தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளுக்காகக் காங்கிரஸும் கம்யூனிஸ்ட் கட்சியும் இடைவிடாது போராடத் தொடங்கியபின் சம்பளம் ஒரு அணாவிலிருந்து ஒரு ரூபாயாக உயர்வதற்கு ஏறத்தாழ 50 ஆண்டுகள் தேவைப்பட்டன. பிரசவ விடுமுறை வெறும் ஒரு வாரம் மட்டுமே அளிக்கப்பட்டது. குழந்தைக்குப் பால் கொடுக்கக்கூட விடாமல் பெண்களை வேலை வாங்கியதால், பசி, தாகம், அட்டைக்கடி ஆகியவற்றால் குழந்தைகள் இறந்தன. இதனால் ‘பிள்ளைக் கஞ்சிப் போராட்டம்’ ரோசம்மா அவர்களால் தொடங்கப்பட்டது. இந்தப் போராட்டத்தின் முதல் வெற்றியாக, குழந்தைகளைப் பராமரிக்க ஒரு தனிப் புள்ளகுடிசும் (creche) மேற்பார்வையாளரும் அமைக்கப்பட்டனர்.

கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டங்களுக்கு கலை ஒரு முக்கிய ஊடகமாக இருந்தது என்பதை இளையராஜாவும் அவரது அண்ணனும் செய்த கள மற்றும் கலைப்பணியை ஆசிரியர் சுட்டுகிறார். ஆனால், 'முதலாளித்துவத்துடன் காங்கிரஸ் தொழிற்சங்கம் சமரசம்' செய்தது என்ற குற்றச்சாட்டினைத் தொடர்ந்து, 1958-ஆம் ஆண்டு நடந்த 'அக்டோபர் புரட்சி' பற்றிய குறிப்பு, தொழிலாளர் இயக்கத்தின் அரசியல் பிளவுகளையும் தீவிரமான போராட்ட வரலாற்றையும் வெளிப்படுத்துகிறது.

1963-ல் எஸ்டேட் இந்திய வம்சாவளியினரிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகும், ஆங்கிலேயர்கள் 1969 வரை அங்கேயே இருந்தனர். இதற்கு 'எஸ்டேட்டின் காலச்சூழல், இடம் போன்றவற்றால் ஏற்பட்ட பற்று' காரணமாக இருக்கலாம் அல்லது 'வேறு ஏதேனும் தெரியாத காரணமாக இருக்கலாம்' என்று ஆசிரியர் கூறுகிறார். 110 ஆண்டுகாலத் தங்கள் சேகரங்களை அவர்கள் நிதானமாகத்தானே ஏற்றுமதி செய்திருக்க முடியும்!

கேரள அரசாங்கத்தின் அலட்சியத்தால் மலையாளம் இன்றளவும் அந்நிய மொழியாகவே நீடிப்பது, தமிழ்த் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளைப் புறக்கணிக்கும் நிர்வாகப் போக்கினைக் காட்டுகிறது. கேரளப் பொதுச் சமூகத்தில் நடக்கும் நிகழ்வுகள் தொழிலாளர்களுக்குத் தெரியாமல் போனது. குறிப்பாக, 2004 வரை எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு முடிவுகளுக்காக மட்டுமே மலையாளச் செய்தித்தாள்களைத் தேடிச் செல்லும் நிலை இருந்தது. சாதி, வருமானம், இருப்பிடம் போன்ற அத்தியாவசியச் சான்றிதழ்களை மறுப்பது, இருப்பிடச் சான்றுக்குப் பதிலாகத் தற்காலிக வசிப்பிடச் சான்றைத் தருவது, வேண்டுமென்றே பெயர்களை மாற்றுவது போன்ற தேவிகுளம் வில்லேஜ் ஆபீஸின் செயல்பாடுகள், காலனிய ஆட்சிக்குப் பின்னும் அரசு அலுவலகங்கள் 'அடித்தட்டு வர்க்கத்தை வேட்டையாடும்' இடங்களாகவே நீடிக்கின்றன என்ற உண்மையைச் சுட்டுகின்றன. கேரள மாநில உருவாக்கத்திற்கு முன்பே மூன்று தலைமுறைகளாக 9,000 ஏக்கர் மலைக்காடுகளை கேரளத்தின் அழகியல் முகமாக மாற்றியவர்களை, அதன் பிறகும் இரண்டு தலைமுறைகளாக உழைத்து வருபவர்களை நோக்கி, “நீ கேரளத்தில் வாழ்ந்ததற்குச் சான்றுகள் எங்கே?” எனக் கேட்பது வேடிக்கையாக உள்ளது. தகவல் மற்றும் கல்வி மறுப்பால் 'வரலாறற்றவர்களாக' திட்டமிட்டு உருவாக்கப்பட்ட மக்களின் அவலத்தை இந்நூல் அம்பலப்படுத்துகிறது. அதிகாரம் தனது அதிகாரத்திற்கு உட்பட்டவர்களை ‘மனிதத்தன்மை நீக்கம்’ (De-Humanize) செய்யும் என்ற மிஷல் ஃபூக்கோவின் கருத்தின் வழி தொழிலாளிகளின் மனநிலையைத் தத்துவார்த்த ரீதியாகப் புரிந்துகொள்ளலாம்.

போனஸ் குறைப்புக்கு எதிராக அரசியல் கட்சிகளைப் புறக்கணித்து பெண்கள் மட்டுமே முன்னெடுத்த ‘பொம்பள ஒருமை (பெண்கள் உரிமை)’ போராட்டம், கேரளாவையே திரும்பிப் பார்க்க வைத்த ஒரு திருப்புமுனையாகும். 'கொழுந்தெடுப்பது நாங்க, கொள்ளையடிப்பது நீங்க' என்ற முழக்கத்துடன் தினக்கூலியை ₹236-லிருந்து ₹401-ஆக உயர்த்த வைத்த இப்போராட்டம், சுயேச்சையான போராட்டங்களின் வெற்றியைச் சுட்டுகிறது. இப்போராட்டத்தின்போது, பெண் போராளிகளை ஆண்கள் ஜீப்பில் அழைத்து வருவதும், அருகே இருந்த கடைகளிலிருந்து வழங்கப்பட்ட உணவும் இந்தப் போராட்டத்தின் வெற்றிக்கு துணை நின்றன.

காலனியக் காலகட்டத்திற்குப் பிறகு, சுதந்திர மண்ணில் சுதேசிகளால் ஆட்சியும், அரசும், தொழிற்சங்கங்களும் (இடது/வலது) முதலாளித்துவத்திடமிருந்து தொழிலாளியை விடுவித்தார்களா என்றால், இல்லை. சில நல்ல மாற்றங்கள் வந்தாலும், தொழிலாளர்கள் இன்னும் நிலையான வாழ்க்கையும், நிலைத்த அடையாளமும் இல்லாமல் எஸ்டேட்டுகளில் உழல்கின்றனர். படித்து அரசு வேலைக்குச் செல்வோர் குறைவான எண்ணிக்கையிலேயே இருக்கிறார்கள். எஸ்டேட் வேலை இல்லையென்றால் ஜீப், ஆட்டோ, ரிசார்ட், சிறிய கடைகள் என எஸ்டேட்டைச் சுற்றியே அவர்கள் வாழ்க்கை வட்டமிடுகிறது என்ற கசப்பான எதார்த்தத்துடன் நூல் முடிவடைகிறது.

'மலங்காடு' நூல் ஒரு நாவல் என்ற வரையறையைத் தாண்டி, காலனியச் சுரண்டலுக்கு உள்ளான உழைக்கும் சமூகத்தின் சுயசரிதையாக, அழுத்தமான ஒரு சமூக வரலாற்று ஆவணமாக நிலைபெற்றுள்ளது. ஆசிரியர் வரலாற்றுச் சான்றுகளுடன் மக்கள் கதைகளைப் பொருத்தி, நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவது நூலின் பெரும் பலம். வரும் பதிப்புகளில், தமிழ்நாடு - கேரளா எல்லைப் பகுதியின் வரைபடத்தைச் சேர்ப்பது, தமிழக வாசகர்களுக்கு அதன் நில அமைப்பையும் வரலாற்றுப் பின்னணியையும் எளிதில் புரிந்துகொள்ள உதவும். மேலும், மெட்ராஸ் பிரசிடென்சி, திருவிதாங்கூர் சமஸ்தானம், பிரிட்டிஷ் கம்பெனி தொடர்பான முக்கியமான சில ஆவணங்களை 'பின்னிணைப்பு' பகுதியாகக் கொடுத்தால், சுயசரிதை வரலாற்று கதையின் ஓட்டத்தைத் தடை செய்யாமல் வாசகர்களுக்கு மேலும் ஆழமான வரலாற்று நம்பகத்தன்மையை அளிக்கும்.

திணைக் கடவுள் முருகன் என்பதால், பழங்குகள் மீது வன்முறைகள் நிகழ்த்தப்பட்டிருக்கலாம் போன்ற அனுமானங்கள் ஏற்புடையனவாக இல்லை. 150 ஆண்டு கால சமூகப் பிரச்சினைகளை அடையாளப்படுத்துவதில் தோட்டத் தொழிலாளர் வர்க்கத்திலிருந்து கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் முன்னேறியவர்களின் நிலையையும் பண்பாட்டுக் கூறுகளையும் பதிவு செய்வதில் சில போதாமைகளை ஏற்படுத்தியது.

எனினும் இது போன்ற குறைகள், இந்நூலின் மகத்தான வரலாற்றுப் பங்களிப்பில் நெருடாமல் கரைந்து போகின்றன. ஒடுக்கப்பட்ட மக்களின் நூற்றாண்டுக் கால வரலாற்றைத் தமிழ்ச் சமூகத்திற்குக் கொண்டுவந்துள்ளார் ஆசிரியர்.

●

**முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**தமிழ்த்துறை, கேரளப் பல்கலைக்கழகம்.**

**புதிய வரவு**

## செவ்வியலக்கியத்தில் புறப்பொருள் விழுமியங்கள்

**கு.நாகம்மாள்**





**விலை: ரூ. 195**

இந்நூலின் ஆசிரியர் முனைவர் கு.நாகம்மாள் தமது ஆய்வுகளில் புதுமைச் செய்திகளை வழங்கும் இயல்பைக் கொண்டவர்.

சமூக வாழ்வின் அறமும், புறமும் இன்றியாதவை. இந்நிலையில், சமூகக் கட்டுக்கோப்பிற்கான ஒழுங்கமைவின் அளவுகோலாக நிலைநாட்டனும் காத்தலும் இன்றியமையாத தேவைகளாகின்றன. அத்தகைய புற வாழ்வுக் கென்று விழுமியங்கள் உண்டு. அவற்றின் மீது பண்டைத் தமிழர் கொண்ட பார்வையை ஆய்ந்து இந்த நூலை எழுதியுள்ளார். முனைவர் நாகம்மாள் இந்த நூலை வாசித்தால், பண்டைத் தமிழரின் வாழ்வை எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

கட்டுரை

# கலைச் சொற்களுக்குள் ஒளிந்திருக்கும் நுண் அரசியல்





முனைவர் சி. மகேசுவரன்

அண்மைக் காலமாகக் கல்விப் புலங்களிலும் சமூகக் களங்களிலும் முறையான பழைய கலைச் சொற்களைப் புறந்தள்ளிவிட்டு, அவற்றிற்கு மாற்றாக, முறையற்ற, புதுப் புதுக் கலைச் சொற்களைப் பயன்படுத்தும் போக்கைக் காண நேர்கிறது. இத்தகைய மாற்றுக் கலைச் சொற்களைப் பயன்படுத்தும் போக்கில் ஒளிந்திருக்கும் நுண் அரசியலை வெளிச்சம் போட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**களம்–1: மண்ணின் மைந்தரான பழங்குடியினரைக் குறிக்கும் புதுப், புதுக் கலைச் சொற்களுக்குள் ஊடாடும் நுண் அரசியல்[1]:–**

மண்ணின் மைந்தருள் ஒரு வகைமையினரான ‘பழங்குடியினரைத்' (*Tribes*) "தொன்மைசார் வாழுநர்" எனப் பொருள்பட ‘*Adivasi*' என்று குறிப்பிட்ட தொடக்க கால நிலையிலிருந்து, முதலில் ‘*Girijan*' ("மலை மக்கள்") என்றும், பின்னர் ‘*Van(a)vasi*' ("காடு வாழுநர்") என்றும் குறிப்பிட்டு வந்த நிலைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டு, மிக அண்மைக் காலத்தில் ‘*Janjati*' என்கிற புதுக் கலைச் சொல்லைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ள போக்கு தோன்றியுள்ளது. '*Janjati*' எனும் கலைச் சொல்லின் 'நேர்ப் பொருள்' (*Literal Meaning*) "மக்கள் சாதி" என்பதே.

'பழங்குடிக் குழு'வைச் (Tribal Group) 'சாதிக் குழு'வாகக் (Caste Group) காட்ட முனையும் நுண் அரசியலே இது. மேற்படிச் சொல்லாடலைப் பழங்குடிப் போராளியான 'பிர்சா முண்டா'வைப் (Birsa Munda) பெருமைப்படுத்துகிறோம் என்கிற போர்வையில் 'Janjatiya Gaurav Diwas' என்னும் பெயரில் - சிறுமைப்படுத்தப்பட்டுள்ளமையை ஒரு போதும் ஏற்கவே இயலாது. இதற்கெல்லாம் தக்க எதிர்வினை ஆற்றும் வகையில், வட இந்தியப் பழங்குடிச் சமூகங்களைச் சார்ந்தோர் தங்களை "Original Inhabitant" என்று பொருள்படும் வகையில் 'Moolnivas' என்னும் கலைச் சொல்லால் குறிப்பிட்டுக்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

**களம் 2 : தொன்மை சான்ற மண்ணின் மரபான 'திணைசார் அறிவு அமைப்பொழுங்கை' ஒட்டுமொத்த 'இந்திய அறிவு அமைப்பொழுங்கா'கக் காட்டும் முயற்சி தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளமை :–**

மண்ணின் மைந்தராம் பழங்குடியினர் உள்ளிட்ட 'திணைக் குடிகளு'டைய (Indigenous Peoples) 'அறிவு அமைப்பொழுங்கை' (Knowledge System) 'Indigenous Knowledge System' (IKS) என மானிடவியல் குறிப்பிடும். 'மரபு சார்ந்த அனைத்துச் சமூகங்களையும் உள்ளடக்கும் வகையில் இக்கலைச் சொல்லை விரிவுபடுத்துகிறோம்' என்கிற போர்வையில், இது முதலில் 'Traditional Knowledge System' (TKS) என்று மாற்றம் செய்யப்பட்டது. இதற்குத் தற்போது "இந்திய அறிவு அமைப்பொழுங்கு" எனப் பொருள்படும்படி, 'Indian Knowledge System' (IKS) என்கிற கலைச் சொல்லை இந்திய ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது; இப்புதுக் கலைச் சொல்லும் 'IKS' என்று அதே முந்தைய சுருக்க எழுத்துகளில் குறிப்பிடப்பட்டாலும். அது பழைய 'IKS' (Indigenous Knowledge System) அல்ல[2]. இக்கலைச் சொல் மாற்றத்தில் அடங்கியுள்ள நுண் அரசியலைப் புரிந்துகொள்ளாத நம் மக்களும் "இது நம் இந்தியத் திருநாட்டைப் பெருமைப்படுத்தும் செயல்தானே?" என வாதிடுகின்றனர்; உண்மையில். மண்ணிற்கு இயல்பான அறிவு அமைப்பொழுங்கைப் புறந்தள்ளிவிட்டு, 'வேத மரபு' (Vedic Tradition), 'வேதக் கணிதம்' (Vedic Mathematics) என்பனவற்றை ஒட்டுமொத்த இந்தியாவின் அறிவு அமைப்பொழுங்காகக் காட்டிட முனையும் நுண் அரசியலே இது.

இந்திய ஒன்றிய அரசும் இத்திரிபுவாதக் கருத்தியலைப் பரப்பும் நோக்கில், 'இந்திய அறிவு அமைப்பொழுங்கு' தொடர்பாகக் கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் கல்வி நிறுவனங்களில் நடத்துவதற்குத் 'தாராள நிதி நல்கைகளைத் (Generous Financial Grants) தனது நிருவாக அமைவகமான 'இந்தியச் சமூக அறிவியல் ஆய்வுக் குழு' (Indian Council of Social Science Research) வழியே அளித்து வருகிறது.

**களம் – 3 குடித்தொகை கணக்கெடுப்புப் படிவத்தில் 'சமயம்' என்பதன் கீழே 'பிறர்' என்கிற 'களத்'தை நீக்கியுள்ளமை :–**

'நிறுவனப்படுத்தப்பட்ட சமயங்களான' (Institutionalized Religions) 'இந்து', 'இசுலாம்', 'கிறித்தவம்', 'சீக்கியம்', 'புத்தம்', 'சமணம்' உள்ளிட்டவற்றைக் 'குடித்தொகைக் கணக்கெடுப்புப் படிவத்'தில் (Form of Census Enumeration) 'சமயம்' (Religion) என்பதன் கீழே, பழங்குடியினர்க்கான 'வழிபாட்டு முறைகள்' (Worship Patterns), 'நம்பிக்கை அமைப்பொழுங்கு' (Belief System) உள்ளிட்டனவற்றிற்கு உரிய இடம் அளிக்கும் வகையில், கடந்த 2001 வரை "பிறர்" என்பதைக் குறித்திடும் 'Others' என்னும் சொல் நீக்கப்பட்டது. இதனால், 'இசுலாம்' உள்ளிட்ட பிற சமயங்களுடன் தங்களை அடையாளப்படுத்திக்கொள்ள விரும்பாத பழங்குடிச் சமூகத்தினர் வேறு வழி இல்லாமல் 'இந்து' என்றே தங்களைக் குறித்துக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்[3].

இத்தகைய சூழலில், 'நடு இந்தியப் பழங்குடி குழுக்களை'ச் (Central Indian Tribal Groups) சார்ந்தோர் தங்களுடைய 'இயற்கை வழிபாடு' (Nature Worship) சார்ந்த நம்பிக்கை அமைப்பொழுங்கான 'சர்ணா' (Sarna) என்பதையே தங்கள் பொதுச் சமயமாக அறிந்தேற்பு செய்து, அதனையே குடித்தொகைக் கணக்கீட்டுப் படிவத்தில் உரியவாறு இடம் பெற்றிட வழிவகை செய்திட வேண்டும் என்கிற தங்கள் நியாயமான கோரிக்கையை இந்திய ஒன்றிய அரசிடம் முன் வைத்துள்ளனர்[4].

**களம் – 4 : பழங்குடி வழிபாட்டு மரபில் இந்துக் கடவுளர் பெயர்களுக்கான பின்னொட்டுகளை நுழைத்துள்ளமை :–**

பழங்குடியினர் வழிபாட்டு மரபில் உள்ள கடவுளர் பெயர்களில் - ஈஸ்வரன், - ஈஸ்வரி என்னும் இந்துக் கடவுளர்க்கான பின்னொட்டுகளை நுழைத்துள்ளமையையும் காண்கிறோம். சான்றாக, நீலகிரி மாவட்டம் வாழ் கோத்தர் பழங்குடியினர் தங்கள் இனக்குழுத் தெய்வ இணையரான 'அய்னோர்-அம்னோர்' என்பதைக் 'கம்பட்ராயன்-கம்பட்ராயி' என்றே முன்னர் குறிப்பிட்டு

வந்த நிலையில், இந்துத்துவச் செல்வாக்கால் தற்போது கம்பட்டீஸ்வரன்- 'கம்பட்டீஸ்வரி' எனக் கோத்தர் குறிப்பிடத் தொடங்கிவிட்டனர். அது மட்டும் அல்லாமல், தங்களுடைய 'அய்னோர்-அம்னோர்'க்கான தனித் தனிக் 'குட்ய்' (<★குடி) என்னும் திருக்கோவில்களுக்கு அருகிலேயே 'மாரியம்மன்', 'விநாயகர்' என இந்துக் கடவுளர்க்கும் தற்போது தனிக் கோவில்களைக் கட்டி, வழிபடத் தொடங்கியுள்ளனர்.

இது போன்றே, நீலகிரித் தொதவர் பழங்குடியினர் தங்களுடைய வீட்டின் உள்ளே இடம் அளித்துள்ள 'போலி எருமைத் தலை'க்கு (Imitation Buffalo Head) அருகே மாலை நேரத்தில் விளக்கு ஏற்றி வழிபடும் தமது மரபார்ந்த வழிபாட்டு முறையுடன், தற்போது பொது வெளியில் '108 திருவிளக்குப் பூசை' என்கிற இந்துத்துவ மரபைப் பின்பற்றுராகவும் தற்போது மாறியுள்ளனர் 5.

**களம் – 5 : 'காலனிய நீக்கம்' என்பதற்குத் திரிபுவாதப் பொருள் கற்பிக்கப்படுதல் :–**

ஆங்கிலேயக் காலனியம் கற்பித்த சில சமன்பாடற்ற போக்குகளை நீக்கி, அனைவருக்குமான சமத்துவத்தை முன்னெடுத்தல்'' என்கிற நேர்ப் பொருளில் 'Decolonising' என்கிற கலைச் சொல்லை மானிடவியல் அண்மைக் காலத்தில் அறிமுகப்படுத்தி வருகிறது; அதாவது, 'ஆண்-பெண்', 'நில உடமையாளர் - கூலித் தொழிலாளர்' என ஆங்கிலேய அரசு சமன்பாடற்ற போக்குகளை முன்னிலைப்படுத்தி ஆண்டுவந்த நிலையில், மக்கள் சமூகங்களுக்கு இடையே நிலவிய ஏற்றத் தாழ்வுகள் மேலோங்கத் தொடங்கின. எனவே, நாடு விடுதலை அடைந்து 75 ஆண்டுகளைக் கடந்துள்ள இன்றைய நிலையில் இத்தகைய சமன்பாடற்ற போக்குகளைப் புறந்தள்ளிடும் வகையில், அவற்றைக் 'காலனிய நீக்கம்' செய்திட வேண்டும் என மானிடவியல் முன்மொழிகிறது. அதை அப்படியே தடம் மாற்றி-இந்துத்துவக் கொள்கைகளைக் கடை விரித்திடும் வகையில், 'காலனிய நீக்கம்' என்கிற சொல்லாடலுக்குத் - தற்போது 'திரிபுப் பொருள்' (Distorted Meaning) கற்பிக்கப்படுகிறது. 'காலனிய நீக்கம்' என்பதன் வழியே மானிடவியல் முன்னிறுத்தி வலியுறுத்துவதோ 'மாந்தர்க்கு இடையேயான சமத்துவம்'; மாறாக, இந்துத்துவம் முன்னிறுத்த முனைவதோ 'வைதீக மேலாதிக்கம்' (Vedic Supremacy)[6] என்பதைக் கவனமாக வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்.

**களம் – 6 : 'சிந்து வெளி நாகரிகம்' என்கிற சொல்லாடலை மாற்ற முற்பட்டுள்ளமை :–**

இந்தியத் துணைக் கண்டத்தின் முன்னோடி நாகரிகமான சிந்து வெளி நாகரிகம் திராவிடர்க்கு உரியது- என்று அறிவியல் வழிப்பட்ட ஆய்வுகள் மெய்ப்பித்துள்ள நிலையில், சிந்து வெளி நாகரிகத்தைத் தமதாக்கிக் கொள்ளும் முயற்சியில், கண்ணுக்கே தெரியாத 'சரஸ்வதி' என்கிற ஆற்றின் பெயரை அதனுடன் இணைத்து, முதலில் 'சிந்து-சரஸ்வதி நாகரிகம்' எனக் கூறத் தொடங்கிய ஆரியக் கருத்தியலாளர்கள் இன்று இன்னும் ஒரு படி மேலே சென்று, அதனைச் 'சரஸ்வதி நாகரிகம்' என்றே பெயரிட்டு அழைக்கத் துணிந்துவிட்டனர்[7].

**களம் – 7 : இந்தியச் சட்டப் பிரிவுகளைச் சமத்கிருதப்படுத்திப் புதுச் சொல்லாட்சியால் குறித்துள்ளமை :–**

'இந்தியத் தண்டனைச் சட்டம்' (Indian Penal Code) என்பதைச் சமத்கிருதப்படுத்தி 'Bharatiya Nyaya Sanhita' (BNS) என்று இந்திய ஒன்றிய அரசின் நீதித் துறை தற்போது மாற்றியுள்ளது. 'தண்டனை வழங்கும் முறை' என்பதிலிருந்து 'நீதி வழங்கும் முறை' என்று மாற்றியுள்ளமை பொருத்தமானதுதானே என வாதிடுவோர், "உள்ளடக்கம் ஆங்கிலத்திலேயே இன்று வரை தொடரும்போது, சட்டத்தின் பெயரை மட்டும் சமத்கிருதத்தில் மாற்ற வேண்டிய தேவை என்ன?'' என்கிற கேள்விக்கு இன்று வரை விடை அளிக்க இயலாமல் தடுமாறுகின்றனர். சமத்கிருத மொழியை முன்னிலைப்படுத்தும் போக்கே இதன் பின்னணியில் உள்ள நுண் அரசியல் ஆகும்[8].

**களம் – 8 : 'பாரதீய பாஷா பரிவார்' என்கிற அமைவகத்தின் வாயிலாக இந்தியா முழுவதற்கும் ஓர் ஒற்றை மொழியே தொடக்கப் புள்ளி எனக் கூற முனைந்துள்ளமை :–**

ஒரு குறிப்பிட்ட நிலப் பரப்பில் ஒன்றுக்கும் மேற்பட்ட 'மொழிக் குடும்பங்களை'ச் (Language Families) சார்ந்த மொழிகள் தங்களுக்குள் தொடர்புகொள்ள நேரிடும்போது, ஒரு மொழியின் கூறு, பிறிதொரு மொழியினுள் புக நேரிடும்; இத்தகைய நேர்வுகளைக்கொண்டு, அக்குறிப்பிட்ட மொழிகள் ஊடாடும் நிலப் பரப்பினை 'ஒரு மொழியியல் பரப்பு' (A Linguistic Area) என்று 'ஒப்பீட்டு மொழியியலாளர்கள்' (Comparative Linguists) கூறுவர். இதனால், பல்வேறு மொழிக் குடும்பங்களைச் சார்ந்த பல்வேறுபட்ட

மொழிகளுக்குள் 'பொது மொழியியல் கூறுகள்' (Common Linguistic Features) இடம்பெறுதல் இயல்பாக நிகழ்ந்தவண்ணம் உள்ளன. இத்தகைய பொது மொழியியல் கூறுகளையே 'Areal Linguistic Features' என ஒப்பீட்டு மொழியியலாளர்கள் இனங்காண்கின்றனர்.

இந்திய ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகக் கிளை அமைப்பாக மிக அண்மைக் காலத்தில் உருவாக்கப்பட்ட 'Bharatiya Bhasha Pariwar' (BBP) இப்போது மொழியியல் கூறுகளை 'இந்திய மொழிகளின் பொதுப் பண்புகள்' (Pan-Indian Linguistic Features) எனக் காட்டுவதுடன் நிற்காமல், இன்னும் ஒரு படி மேலே சென்று, 'இவற்றிற்கு மூல காரணமே 'சமத்கிருதம்'தான் என இந்தியாவிற்கான ஒற்றை மூல மொழியாக - சமத்கிருதத்தை முன்னிறுத்த முயல்கிறது.

## நிறைவுரை

திரிபுவாத அரசியல் அணுகுமுறையையே தங்களுடைய முதன்மை ஆயுதமாக இந்துத்துவவாதிகள் ஏந்தியுள்ள நிலையில், அதற்குள்ளாக நுண் அரசியல் ஒளிந்திருப்பதை அறிவுலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டிடும் முழு முதற் கடமை இன்றைய அறிவர் பெருமக்களுக்கு உள்ளது. அவ்வகையிலேயே, மத மாற்றம் அடைந்த பழங்குடியினர் "தாய் சமயத்திற்குத் திரும்புதல்'' என்கிற பொருள்பட 'Gar Vapsi' என்னும் சொல்லாடலைப் பொது வெளியில் இந்துத்துவவாதிகள் பயன்படுத்தியபோது, "பழங்குடியினர் இந்து சமயத்தைச் சார்ந்தோர் அல்லர்'' என அழுத்தந்திருத்தமாக அறிவர் பெருமக்களால் அறிவுறுத்தப்பட்டது.

தமிழ்நாட்டின் "கீழடி நாகரிகம் இந்தியாவின் தொன்மை நாகரிகம்'' - என்று தமிழ்நாட்டில் தக்க தொல்லியல்சார் அறிவியல் சான்றுகளுடன் எடுத்துரைத்துள்ள நிலையிலும், அதன் 'காலத் தொன்மை' (Antiquity) இன்று வரை இந்திய அரசால் ஏற்கப்படவே இல்லை; மாறாகத், தொன்மை வாய்ந்த கீழடியின் 'மணலூர்' எனும் பகுதியை 'மகாபாரத மணிப்புரம்' எனக் காட்டிடும் 'போலி அறிவியல்' (Pseudoscience) முன்னெடுப்பினை அண்ணா பல்கலைக்கழகச் சூழலியல் அறிவியலாளர் அரங்கேற்றிட, அதனுள் பொதிந்துள்ள நுண் அரசியலையும் அறிவர் பெருமக்கள் அடையாளம் காட்ட வேண்டியுள்ளது.

### அடிக் குறிப்புகள்

1. விரிவான தகவலுக்குக் காண்க : மகேசுவரன், சி. 2024 a. "பழங்குடிகள்'' உங்கள் நூலகம் (ஜனவரி, 2024). 53-54.
2. ''திணைசார் அறிவு அமைப்பொழுங்கே அடிப்படையானது; அதிலிருந்தே ஏனைய அறிவு அமைப்பொழுங்குகள் தோற்றம் பெற்றன.'' என்பதே பண்பாட்டு மானிடவியல் பறை சாற்றும் உண்மை ஆகும். இந்நிலையில், இந்தியாவிற்கெனத் தனித்தோர் அறிவு அமைப்பொழுங்கு உள்ளது என்றும், அது வேதத்தை அடிப்படையாகக்கொண்டது என்றும் கட்டமைக்க முயல்வதை ஏற்கவே இயலாது.
3. 'Others' ("பிறர்'') என்கிற 'களத்'தை (Column) 2011 குடித்தொகைக் கணக்கெடுப்புக் கால கட்டத்தின்போது, உரிய குடித்தொகைக் கணக்கீட்டுப் படிவத்திலிருந்து நீக்கியமை குடித்தொகை எண்ணிக்கையில் 'இந்துக்களே மிகுதி' என்று காட்டுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நுண் அரசியலே - என்பது இங்கே சொல்லாமலேயே விளங்கும்.
4. ஆந்திர முதல்வராகத் திருமிகு இராஜசேகர ரெட்டி - அவர்கள் செயல்பட்டபோது, தமது மாநிலக் கணக்கீடுகளில் 'Tribal Religion' என்று ஒரு 'களம்' இருக்கும் எனத் துணிந்து நடைமுறைப்படுத்த முனைந்தமையை இங்குக் குறிப்பிட்டே ஆக வேண்டும்.
5. தமிழ்நாட்டின் பிற மாவட்டங்களிலும் பழங்குடிக் குழுக்கள் இடையேயும் இத்தகைய 'இந்துத்துவ உள்ளிணைக்கும் போக்கு' இனங்காணப்படுகின்றன என்பதை இங்கே கருத்தில்கொள்ள வேண்டும்.
6. இந்நிலைக்கு மாறாக, 'ஆங்கிலேயக் காலனி ஆட்சியாளர்களைப் போல, எதற்கெடுத்தாலும் நீலகிரிப் பகுதியை மட்டுமே முன்னிலைப்படுத்தும் நோக்கும் போக்கும் இன்றைய ஆய்வாளர்கள் இடையேயும் இனங்காணப்படுகிறது' - என்னும் அடிப்படையில் காலனிய நீக்கம் செய்யப்பட வேண்டியது இத்தகைய போக்கையே எனக் கருதுவோரும் உள்ளனர்.
7. 'புவியியல் வரைவு' (Geo-Mapping) வழியே புலப்பட்ட 'கக்கார்' (Gaggar) ஆறுதான் 'சரஸ்வதி' என்று வாதிடுவோர் ஒரு புறம் இருக்க, 'சரஸ்வதிக்கும் 'கக்கார்'க்கும் எவ்வகையான தொடர்போ, உறவோ இல்லை எனக் கருதுவோரும் மறு புறம் காணப்படுகின்றனர் - என்பதை நினைவில்கொள்ள வேண்டும்.

8. எதற்கெடுத்தாலும் சமத்கிருதத்தை முன்னிலைப்படுத்தும் இத்தகைய போக்கு நடுநிலையாளர்களைப் பெரிதும் கவலை கொள்ளச் செய்கிறது.

9. விரிவான தகவல்களுக்குக் காண்க: அண்ணாமலை, 2026 மற்றும் பாலசுப்ரமணியன், கோ.2026.


**நோக்கீட்டு ஏடுகள்**

**தமிழில்**

- அண்ணாமலை, இ. 2026. "ஒரே நாடு, ஒரே மொழிக் குடும்பம் : பரப்புரையும் யதார்த்தமும்''. காலச்சுவடு (மார்ச், 2026). 48-52.
- அண்ணாமலை, இ. 2026. 'பாரதீய மொழிக் குடும்பம்' எனும் மொழி அடையாள அழிப்புச் செயல்திட்டம்''. காக்கைச் சிறகினிலே (மார்ச், 2026). 5-11.
- மகேசுவரன், சி. 2024 a. பழங்குடிகள்''. உங்கள் நூலகம் (ஜனவரி, 2024) 53-54.
- மகேசுவரன், சி. 2024 b.தமிழ்நாட்டுப் பழங்குடிக் குழுக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள். சென்னை: பாரதி புத்தகாலயம்.
- மகேசுவரன், சி. 2025 a. "பழங்குடி மக்களைக் குறிக்கும் சொல்லாடல்கள் : ஒரு பார்வை''. பழங்குடி இனக்குழு வரைவியல் சென்னை : பாரதி புத்தகாலயம் ஜனவரி, 2024
- மகேசுவரன், சி. 2025 b. பழங்குடி இனக்குழு வரைவியல் சென்னை பாரதி புத்தகாலயம்.

**ஆங்கிலத்தில்**

- *Behera, M.C. (Ed.) 2025 a. The Rouledge Handbook of Contemporary Readings on Tribes and Religions in India : Emerging Negotiations. London & New York, Rouledge.*
- *Maheswaran, C.2025 "Tribal Religion is a Reality (Furnishing of Certain Clinching Evidences from the Tribal Nilgiris)". In. M.C. Behera (Ed.). The Rouledge Handbook of Contemporary Readings on Tribes and Religions in India: Emerging Negotiations. London & New York. Rouledge. 419-428.*


●


கட்டுரையாளர்: எழுத்தாளர், மேனாள் இயக்குநர், பழங்குடியினர் ஆய்வு நடுவம், தமிழ்நாடு அரசு


**புதிய வரவு**




**விலை: ரூ. 130**

## காலத்தின் அருமை

**இரா.பூரணலிங்கம் இ.ஆ.ப. (ஓய்வு)**

உளைச்சல், மன அழுத்தத்திலிருந்து விடுபட்டு மகிழ்ச்சியான, மன நிறைவான வாழ்வுக்கு மாறுவது எப்படி என்றும், செயல்களை முன்னுரிமைப்படுத்துவது, நாள்தோறும் ஒரு செயல் திட்டத்துடன் செயல்படுவது உள்ளிட்ட பழக்கங்களைக் கடைபிடித்து வாழ்வில் எப்படி முன்னேறுவது என்றும் விளக்குகிறது, 'காலத்தின் அருமை' – செயல்திறன் சிறக்க வழிகள் என்னும் இந்த நூல்.

“


மானுட உள்ளார்ந்திரங்களையும், கெடுமதிப்போக்குகளையும் விசாரணைக்கு உட்படுத்திக் கதைகளாகச் சித்தரித்துக் காட்டி, வாசகர்களது சமூகப் பிரக்ஞைகளைக் கூர்மைப்படுத்துவதுதான் படைப்பிலக்கியத்தின் தலையாய பணியாகும்.

”

# இலக்கியப் பணி என்பது சமூகத்துக்கு ஆற்றும் தொண்டு

## அண்டனூர் சுரா சிறுகதைகள் – ஒரு பார்வை

**சி.பாலையா**




**விலை:** ரூ.420

படைப்பிலக்கியத்தில் சிறுகதையாக்கம் என்பதன் வகிபாகம், அன்று முதல் இன்று வரை மிகச் சிறப்பான துலக்கத்தைப் பெற்றுத் திகழ்ந்து வருகிறது. இன்றையப் படைப்புலகமும் வாசகர்பரப்பும் முறையே, நவீனப் பார்வையிலான சிறந்த சிறுகதைகளைப் படைப்பதற்கும், அவற்றைப் பரவசத்துடன் வாசித்து நடப்புச் சமூகப்போக்குகளை நன்கு உள்வாங்குவதற்குமே உத்வேகமான முன்னுரிமை கொடுத்து வருகின்றன.

இவ்வகையில், எழுத்தாளர் அண்டனூர் சுரா, கடந்த பல வருடங்களில் பல்வேறு இதழ்களில் வெளிவந்த தமது 100 சிறுகதைகளை இரண்டு தொகுதிகளாக ஒரே சமயத்தில் வெளியிட்டு தமிழ் எழுத்துலகின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளார். இந்த அரிய பணியை புகழ்மிக்க NCBH நிறுவனம் தமது பொறுப்பில் எடுத்துக் கொண்டு, அந்நிறுவனத்தின் வெற்றிகரமான தொடர் வெளியீட்டுப் பணிக்கு மேலும் ஒரு சிறப்பைச் சேர்த்துள்ளது.

அண்டனூர் சுரா தமது வேகமும் விவேகமும் நிறைந்த எழுத்தாற்றலுக்காக அரசின் வழியாகவும் மற்றும் பல்வேறு இலக்கிய, இதழியல் அமைப்புகள் வழியாகவும் பற்பல விருதுகள், பரிசுகள் மற்றும் பாராட்டுக்களைப் பெற்று, சமீபத்திய தமிழ் படைப்புலகப் பரப்பில் தனக்கென ஒரு சீரிய முத்திரையைப் பதித்து வருகிறார். ‘அண்டனூர் சுரா சிறுகதைகள் - 100’ என்பதின் முதல் தொகுதியை (50 கதைகள்) மட்டும் இக்கட்டுரையில் நமது பார்வைக்கு எடுத்துக் கொள்வோம்.

இந்த முதல் தொகுதியில் அடங்கியுள்ள ஐம்பது சிறுகதைகளில், நமது அன்றாடச் சமூக வாழ்வியல் உள்ளோட்டங்களையும், மனித மனங்களின் பற்பல தெறிப்புகளையும், அடிமட்டச் சமூகப் பரப்பு சந்தித்துவரும் ஏற்றத்தாழ்வு வேறுபாடுகள், தனிமனிதச் சருக்கல்கள் மற்றும் குடும்பங்களின் வறுமைப்பாடுகளையுமே உள்ளீடுகளாய் வைத்து கதைப்பின்னல் நடத்தியுள்ளார் எழுத்தாளர். இதைத்தான் தமது முன்னுரையில், 'சிறுகதை' என்பது, மொழியின் பெயரால் செய்யப்படுகிற சமூக, கலை சார்ந்த வாழ்வியல் விமர்சனம். உணர்ச்சிகளை வடிகட்டி வாசிப்பினூடே உணர்வுகளைக் கடத்தும் மொழிவழி உயிர்ப் பாயச்சல்' என்று அவர் கூறுகிறார்.

இக்கூற்று, கதாசிரியரிடம் நன்கு வசப்பட்டுப்போன அவரது ஆழமான சமூகப் பார்வையின் உட்பரிமாணங்களை வெளிக்காட்டுகிறது. இத்தகைய புரிதல் இருப்பதால்தான் எழுத்தாளர்களால் மனித வாழ்வின் கண்ணாடி போன்ற அரிய படைப்புகளைப் படைக்க முடிகிறது.

எல்லாக் கதைகளையும் சேர்த்து ஒட்டுமொத்தமாகக் குறைந்த பட்சம் நூற்றுக்கு மேற்பட்ட கதாபாத்திரங்களைப் பல்வேறு கோணங்களில் உலவவிட்டுள்ளார் படைப்பாளர். இந்தக் கதை மாந்தர்கள் மூலம் உக்கிரமான சமூகப் பிரச்சனைகளும், வாழ்வாதார இடிபாடுகளும், பல படிமங்களிலான மனித மனப்போக்குகளும் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, ஒரு சில கதைகளை ஆய்வு செய்து பார்க்கலாம். ஒரு மிடற்றுப் பால் பிச்சைக்காக, ஒரு அபலைத்தாய் சமூக வீதியில் எத்தனை அவமானங்களை அப்பிக் கொண்டு திரிய வேண்டியுள்ளது? (கதை - 1). அடுத்து, ஒரு மேல்மட்ட மனிதர் பவனி வருவதற்காக எத்தனை ஏழை மக்களது குடிகள், கூடங்கள், கடைகள் மற்றும் பசுமை தரும் மரம் செடி கொடிகள் தவிடு பொடியாக்கப்பட வேண்டிய நிர்பந்தம் ஏற்படுகிறது (கதை - 2).

சமூக முச்சந்தியில் தமது 'பூம் - பூம்' மாட்டைக்காட்டிப் பிழைப்பு நடத்தும் பரிதாபத்திற்குரிய பெற்றோர், இருண்ட வானில் ஒரு பிரகாசமான வெள்ளி முளைத்ததைப் போன்ற தமது மகள் விமலாவின் படிப்புச் சான்றிதழைப் பெறுவதற்குப் படும் பாடுகளை என்னவென்று சொல்வது? (கதை - 5). எந்த அரசியல் பணமுதலையோ வெட்டிக் கடத்திய செம்மரக்கட்டைக் குற்றத்திற்காக, ஒரு ஏழை இளம்பெண் வாச்சாந்தியின் குடும்பத்தையே சிறைக் கொட்டடிக்குள் போட்டு, 'லத்திகள்' நடத்தும் விசாரணைக் கேவலத்தை எந்த நீதிவானிடம் முறையிடுவது? (கதை - 6).

மிகமிக அடிப்படையான வாழ்வாதாரம் தண்ணீர். இது இயற்கையின் மாபெரும் கொடை. ஆனால் இதை வைத்தே அரசியல் பிழைப்பு நடத்தி, ஒரு டி.எம்.சி. தண்ணீருக்காக, ஒளிரும் இந்தியாவின் ஒரு குறிப்பிட்ட பகுதியானது காலம் காலமாய் கண்ணீர் வடிப்பதற்கு யார் பதில் சொல்வது? (கதை - 9). இந்த மனித சமூகம், சின்னஞ்சிறு பூஞ்சிட்டுக் குழந்தைகளின் வண்ணமையமானது. ஆனால், ஒரு சராசரி மனித வாழ்விற்குக் கூடத் தம்மைத் தகுதியாக்கிக் கொள்ள முடியாமல் போய்விட்ட ஏதோ ஒரு குடும்பத்துப் பெற்றோரது தெரு ஓரத்துப் பையன் ஒருவன் கதையில் வருகிறான். அவன் அப்பகுதியிலேயே உள்ள வசதிமிக்க வீட்டுத் துர்க்கா பாப்பாவின் காகிதப் பட்டத்தை வைத்து அவளுடன் கூடி ஓடி விளையாடுவதையே ஒரு பெரிய 'ஆசூசையா'கப் பார்த்துச் சீறிப் பாய்கிறார் அவளது தாய். உடனே அந்தச் சிறுமியை அவனிடமிருந்து பிரித்து வீட்டிற்குள் அடைத்து வைக்கும் 'தாய்மார்களும்' இக்காலச் சமூகத்தில் 'எத்திசைச் செலினும்' இருக்கத்தானே செய்கிறார்கள்? (கதை - 16).

இவ்வாறான கதை ஓட்டங்களுக்கும், அவற்றைத் தொற்றி நிற்கும் வினாக்களுக்கும் ஒரு விடிவு இல்லையே என்பதுதான் எழுத்தாளர் சுராவின் ஆதங்கம். இது மட்டுமல்ல. 'மாண்புமிகு மதிப்பெண்' பெறுவதற்காக புனிதா போன்ற பிள்ளைகளது சுயங்களை மழுங்கடித்து, அவர்களைத் தேர்விற்காக மனப்பாடம் செய்யும் எந்திரங்களாக மாற்றத் துடிக்கும் பெற்றோர்களைக் காட்சிப்படுத்துகிறாரே படைப்பாளி! (கதை - 20)

'வணக்கம்' என்று சொல்லும் ஒரு பெண் அலுவலகச் சிப்பந்திக்கு, 'ம்' என்று மட்டும் இறுமாப்புடன் பதில் கூறி, ஒரு சராசரி மனித நாகரீகத்தையே கேள்விக்குறியாக்கும் அலுவலர் ஒருவரையும் (கதை - 3), தம் மகளொத்த வயதுடைய ஒரு தற்காலிகப் பெண் ஊழியரிடம் பாலியல் அம்பு விட்டு, 'தூயவன்' பட்டியலில் தாம் 'இடம் பெறாத பெருமைக்கு' ஏங்கும் 50 வயது நிரம்பிய திருவாளர் சுதாகரையும் (கதை - 42), வாசகரின் பொதுக் கவனத்திற்கு சுரா போன்ற படைப்பாளிகள்தான் கொண்டு வரமுடிகிறது. இப்படியான மானுட உள்ளார்ந்திரங்களையும், கெடுமதிப்போக்குகளையும் விசாரணைக்கு உட்படுத்திக் கதைகளாகச் சித்தரித்துக் காட்டி, வாசகர்களது சமூகப் பிரக்ஞைகளைக் கூர்மைப்படுத்துவதுதான் படைப்பிலக்கியத்தின் தலையாய பணியாகும்.

மனித சமூகத்தின் மிக முக்கியமான அங்கங்கள் குடும்பங்கள்தான். அவற்றில் நேரிடும் அன்றாடப் பிரச்சனைகள், வாழ்வின் ஏழ்மைத் தாக்கங்கள் மற்றும் மனித நடத்தை விபத்துக்கள் அல்லது பிறழ்வுகள் ஆகியவற்றில் எழுத்தாளரது கூரிய சமூகப் பார்வை உட்புகுந்து களமாடுவது இக்கதைகளின் மூலம் நன்கு புலனாகிறது. 'கடன் பட்டார் நெஞ்சம்' (பக் - 60), இதன் நீட்சியான 'தீயடி அரவம்' (பக் - 319) 'வித்யாவிற்கு மூன்று அப்பாக்கள்' (பக் - 90), 'பருவத் துணிக்கை' (பக் - 442), 'கருக்குவாள்' (பக் - 334), 'அமிலப் பரிசோதனை' (பக் - 300) போன்ற கதைகளில் வரும் கதை மாந்தர்களது வகிபாகத் தாக்கங்களின் (Impact of Role Play) வழி நின்று இதனை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

எழுத்தாளரது படைப்பாற்றலின் பார்வை வீச்சு, சமூகத்தின் பல பொது விவகாரங்களில் வீரியமாகப் பாய்ச்சப்படுகிறது என்பதைப் பல கதைகள் மூலம் அறிய முடிகிறது. 'வஞ்சிக்கப்படும் ஒரு விவசாயி' (பக் - 228), புரையோடிப் போன தீண்டாமைக் கொடுமைகள் (பக் - 283, 334, 347, 391), சமூக ஏற்றத்தாழ்வுக் கொடுமைகள் (பக் - 102, 173, 182), நோய்களும் மருந்து விற்பனை மாயங்களும் (பக் - 142), நாட்டின் அரசியல் சித்து விளையாட்டுகள் (பக் - 341, 452) படிப்பறிவின்மை, (பக் - 191) இக்காலக் கல்விபடும் பாடுகள் (பக் - 218, 356), கழிப்பறைச் சீர்கேடுகள், (பக் - 430), உப்பங்கழி அல்லாடல்கள் (பக் - 480), மரங்களை அழித்தொழித்தல் (பக் - 364) ஆகிய இக்காலச் சமூகப் பிரச்சினைகளைப் படைப்பாளர் காட்சிப்படுத்தும்பொழுது வாசகர்களது பொதுப்பார்வை மிகவும் விசாலப்படுகிறது. நடப்புச் சமூகத்தை நன்கு புரிந்து கொள்ள முடிகிறது.

எழுத்தாளர்கள் இத்தகைய சமூகத்தின் எதிர்மறை நடவடிக்கைகளைப் படைத்துக் காட்டுவதால் பொதுச் சமூகத்தில் ஏதேனும் பயன்கள் ஏற்படுகின்றனவா? ரஷ்ய எழுத்தாளர் ஆண்டன் செகாவ் ஒருமுறை இவ்வாறான கேள்வி ஒன்றுக்குப் பதில் கூறியுள்ளார். "எழுத்தாளர்கள் வினாக்களைத்தான் தொடுக்க முடியும். விடை காண்பது சமூகம்தான்" என்பதுதான் அவரது பதில். இதே பதிலைத்தான் அண்டனூர் சுரா போன்ற படைப்பாளர்களும் இங்கு வழிமொழிவார்கள்.

ஆனால், இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள 'தீயடி, அரவம்', 'ஊர் முழ வேட்டி', 'சவப்பெட்டி', 'செண்டை' ஆகிய கதைகளின் முடிவுகளில் ஏதோ ஒரு விபரீதம் நடக்கப்போவது போன்ற எதிர்பார்ப்பில் வாசகர்கள் இருக்கின்றார்கள். அப்படித்தான் கதைகளின் ஓட்டங்களும் இருக்கின்றன. ஆனால், எழுத்தாளர் இதன் முடிவுகளில் சற்று ஏமாற்றத்தைத்தான் தந்துள்ளார் என்றும் கருதலாம். 'அவள் ஒரு பிஞ்சு' என்ற கதையில் வரும் ஆஷிபாவின் பிஞ்சு மனத்தில் உதித்த ஒரு துணிச்சலான தீரம் இக்கதைகளிலும் வந்திருந்தால், சமூகத் தீமைகளுக்கான படிப்பினை சற்று வலுப்பட்டிருக்குமே! இத்துடன், சில கதைகளில் அடிமட்டச் சமூகப் பரப்பில் நடமாடித் திரிய விடப்பட்டிருக்கும் குடிகாரக் கதாபாத்திரங்களுக்குரிய குறைந்த பட்ச தண்டனைகளுக்கான முகாந்திரங்களைக் கூடப் படைப்பாளர் காட்டவில்லையே! இதேபோன்று 'குரலி' என்ற 'குறுந்தொகை'ப் பாடலைத் தழுவிய கதையின் (13) முடிவில் தனது நிறைவேறாத காதலை நினைத்து அந்த இளம்பெண் அமிர்தா வருந்துகிறாள். அப்பொழுது, தெருவில், குறி சொல்லித் திரியும் ஒரு பெண், அந்தப் பெண்ணின் உள்ளங்கையைப் பிடித்துப் பார்த்து விட்டு 'உனக்கு அடுத்த ஐந்து வருடத்திற்கு கிரகம் சரியில்லை' என்று கூறி கதையை முடிக்கும் எழுத்தாளரது பார்வையின் மீது வாசகருக்குச் சற்று சலிப்புத் தட்டுகிறது.

அதேசமயம், இத்தொகுதியில் இடம்பெற்றுள்ள ஒரு ஐந்து கதைகளை இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். 'கருக்குவாள்', 'அழகான கருப்பி', 'செம்பரம்பாக்கம்' ஆகிய மூன்று கதைகளில் ஒவ்வொன்றிலும் ஒரே கதாபாத்திரம்தான் கதை சொல்லியாகப் படைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், கதையோட்டத்தில் பிற கதை மாந்தர்களது பங்கெடுப்புகளும் மறைபொருளாக உட்செறிவாக்கப்பட்டுள்ளன. அதுவும் 'கருக்குவாள்' கதையில் பெயரே சொல்லாத ஒரு ஊர்ப் 'பெரும்புள்ளி', 'நான்' 'எனது' என்ற ஆணவச் சொல்லாடல்களால் தான் செய்துவிட்ட ஒரு வக்கிரமான சமூகக் கொடுமையை ஜெயிலுக்குள் இருந்துகொண்டே உரையாடலாக்குகிறார். அவரது பொய்மையான பேச்சே அவரது பாலியல் வன் கொலையை (அவர் வெறுக்கும் மாற்று இனத்துப் பெண்ணை) ஊர்ஜிதப் படுத்துவதுதான் படைப்பாளரது தேர்ந்த உத்தி.

அடுத்த கதையாகிய 'அழகான கருப்பியில்' பட்டாசு வெடிவிபத்தில் கருகிப்போன, வெறுத்து ஒதுக்கப்படும் கருப்பு நிறமுடைய மகள் கண்ணம்மாள், தனது குடிகாரத் தகப்பனிடம், உயிரோட்டமான பாசப்பிணைப்புடன், கண்ணீர் விட்டுக் கதறுவதான கதையின் முன்நடப்புக் காட்சிகள் வாசகரது மனத்தை நெருட வைக்கின்றன. இறுதிப் பத்திகளில் மட்டும் அந்தக் குடிகாரத்

தந்தை தனது மகளின் கருகிய உடலைப் பார்த்துப் புலம்புவதான முடிவில்தான் ‘அடடா என்ன வாழ்க்கை இது’ என்று நாம் அங்கலாய்க்கின்றோம். இங்குதான் கதாசிரியரது கற்பனை உக்தி உச்சம் பெறுகிறது.

‘செம்பரம்பாக்கம்’ கதையிலும் பெயரிடப் படாத ஒரு குப்பத்துப் பெண்தான் தனது சென்னை குப்பத்துப் பாஷையில் வாசகர்களது கவனத்தை முழுதும் ஈர்க்கும் படியாகப் பேசிக்கொண்டே வருகிறார். ஒரு பேய்மழை வெள்ளத்தில் மிதக்கும் மெட்ராஸின் அவலத்தை நேரலையில் காட்சிப்படுத்துவதுபோல் கதையாடலை அமைத்துள்ளார் சுரா. தனது மகள், மகன் ஆகிய இருவரது ஒரு சில வார்த்தைகளைத் தவிர, தனது பொங்கிவரும் மனக்குமுறலை வாசகருக்குப் படம் பிடித்துக் காட்டுகிறார். அந்தப் பரிதாபத்திற்குரிய பெண், அவரது பேச்சுவழக்கு வார்த்தைகள் மூலம், மழைக்கால சென்னையின் குப்பத்து அலங்கோலத்தை உயிர்ப்புடன் விவரித்துக் காட்டும் படைப்பாளரது எளிய மக்கள் மீதான பார்வை நன்கு பளிச்சிடுகிறது.

இவ்வாறு பெயரிடப் படாத ஒரே கதாபாத்திரத்தின் கதை சொல்லும் பாங்கு (Narrative Skill) வாசகருடன் உடன் பயணிப்பது போன்று அமைந்துள்ளது. மூன்றாவது கதையில், விபத்தில் கருகிப்போன மகள், தனது குடிகாரத் தந்தையிடம் அதற்கு முன்பு பேசியது போன்ற படைப்பாளரது உத்தி நம்மை மேலும் உணர்வு பூர்வமாக உள்வாங்குகிறது.

எழுத்தாளர் சுராவின் ஒருமாறுதலான (Innovative) படைப்புப் பார்வைக்கு ‘பூங்கோதைக்கும் கற்பு உண்டு’ மற்றும் ‘நின்னைச் சரணடைந்தேன்’ ஆகிய மற்ற இரு கதைகளையும் குறியீடாகக் கூறலாம். வாடகைத்தாய் போன்று, எந்திரப் பணிப் பெண்ணான பூங்கோதை என்ற ரோபோவைப் பற்றி, இரண்டு கடிதங்களின் மூலம் சிலாகித்துக் கதைப் பின்னல் நடத்துகிறார் கதாசிரியர். இந்த ‘எந்திரம் புகுந்த’ அழகிய பெண்ணையும் அந்த வீட்டு எஜமான் சீண்டலுக்குள்ளாக்குவதாக அந்தக் கதையில் வரும் கடிதம் கூறுகிறது! இதேபோன்று ‘நின்னைச் சரணடைந்தேன்’ கதையில், நமது பாரதிப் பெரும் புலவனையே கதாநாயகனாக்கி, அவரது கவிதை வரிகளையே 17 இடங்களில் உரையாடல்களாக்கிக் கதை சொல்லப்படுகிறது. ‘செல்லம்மா பாரதி’யைத்தான் நமக்குத் தெரியும். ஆனால், இங்கு ‘கண்ணம்மா’ என்ற பாரதியின் கற்பனைக் காதலியிடமும் பாரதிப் புலவனின் கவித்துவம் சரணடைவதான எழுத்தாளரது புதிய கோணத்திலமைந்த கதை நல்ல இலக்கிய ரசனையுடன் காட்சிப்படுத்தப்படுகிறது.

இத்துடன், ஒரு சிறந்த படைப்பாளிக்கான பரந்து விரிந்த பார்வையும், புரிதலும், பல்வேறு வாழ்க்கைப் பொருண்மைகளின் நுட்ப திட்பங்ககளும் எழுத்தாளர் சுராவிற்கு அத்துபடியாயிருப்பது நன்கு புலனாகிறது. அவரது நல்ல இலக்கிய ஈடுபாடு, உலக வரலாற்றுக் குறிப்புகள், மனித உடற்கூற்று விவரங்கள், பறவைகள் மற்றும் விலங்குகள் பற்றிய சொல்லாடல்கள் நவீனப் புலனப் பயன்பாடு பற்றிய நுட்பங்கள் ஆகிய அனைத்து அறிவுப் பரவல்களிலும் தனது தேடலைப் புகுத்தியுள்ளார். திருக்குறள் வரிகள், பொருத்தமான இலக்கியச் சொற்கள், கவிதை வகைகள், கௌதம முனி, இந்திரன், வசிஷ்டர், புத்தர், லட்சுமனரேகை, டாவின்சியின் மோனலிசா, கனடா நாட்டின் வான் கூவர் ரயில் நிலையம் போன்ற பல்வேறு புலங்களின் இடையீட்டுக் குறிப்புகள் கதைகளின் உயிரோட்டங்களுக்கு நல்ல மெருகேற்றம் தருகின்றன.

தமது கதைகள் நன்கு துலக்கமடைய இன்னும் ஒரு உக்தியாக துல்லியமான பல உவமைகளையும் சொலவடைகளையும் படைப்பாளர் தொகுதி நெடுகிலும் நிறையப் பயன்படுத்தியுள்ளார். ‘தூக்கணாங் குருவிக் கூட்டை குரங்கு பிய்த்து விட்டதைப்போல’, (பக் - 48) ‘பாம்பு காட்டுக்குள் சீறிவருவதைப் போல்’, (பக் - 164) ‘கிளை ஒடிந்த மரம்போல’ (பக் - 486) ‘தீட்டிய உளுந்தைப்போல் பளிச் சென்று’ (பக் -484) ‘கிழிந்த சட்டையை இஸ்திரி செய்ததைப் போன்ற பேருந்து நிலையம்’ (பக் - 443) ‘அச்சில் கட்டிய மாட்டைப்போல்’ (பக் - 480) போன்ற உவமைகளை இதற்கு உதாரனப்படுத்தலாம். இதேபோன்று, ‘முதிய வயது நோயும் இளம் வயது அவமானமும் பொல்லாதது’ (பக் - 108) ‘அம்மா ஊட்டாத சோத்த ஊறுகாய் ஊட்டும்’ (பக் - 432) ‘ஆற்றங்கரை அரசமரம் வேரோடு சாயும்’ (பக் - 431) ‘மேட்டுக்குத் தண்ணீய மேக்காத்து பாய்ச்சும்’ (பக் - 482) ‘மூச்சை அடக்கி வாழ்ந்தால் மூன்று யுகம் வாழலாம்’ (பக் - 432) போன்ற சொலவடைகளையும் எடுத்துக்கட்டுகளாகக் கூறலாம்.

மற்றுமோர் ஆய்வுப் பார்வை என்னவென்றால், ‘எத்திசைச் செலினும்’ ‘எனினும்’. பருவத்துணிக்கை’, ‘மழைக்குப் பிறகான பொழுது’ மற்றும் ‘பசுங்கணிகம்’ ஆகியவை நல்ல கவித்துவத் தலைப்புகளாகும். அதே சமயம், ‘பிரளய

காலத்தவன்' 'விடற்கு' 'செம்பத்தி' போன்ற தலைப்புகள் வாசகரின் பொதுப் புத்திக்குச் சற்று மிரட்சியாகத் தெரிகின்றன. மேலும், கதைகளுக்கான ஓவியங்கள் அனைத்தும் கதைகளின் கருப்பொருள்களை நன்கு விசாலப்படுத்துகின்றன. ஆனால், எல்லாக் கதைகளிலும் ஒரே மாதிரியான பெண் முகங்களே தெரிகின்றன.

இந்த 100 சிறுகதைகள் மட்டுமல்லாது பல்வேறு சிறந்த எழுத்தாக்கங்களையும் படைத்துள்ளார் சுரா. எழுதிக் கொண்டும் இருக்கின்றார். தான் சிரமேற்கொண்டுள்ள ஆசிரியர் பணியுடன் தமது சீரிய எழுத்துப் பணியின் மூலம் காத்திரமான இலக்கியப் பணியையும் மேற்கொண்டு வருகிறார். இது இலக்கியப் பணி மட்டுமல்ல, சமூகப் பணியும் கூட. இவ்வகையில் குறிப்பாக சில முக்கியச் செய்திகளையும் (Messages) இக்கதைகள் மூலம் சமூகத்திற்குச் சொல்ல வருகிறார் எழுத்தாளர்.


எடுத்துக்காட்டாக, முடிந்த வரை எல்லோரும் ஒரு பொதுச் சேவையில் அல்லது ஊழியத்தில் ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும் (கதை - 25) தற்காலச் சமூகப் போக்குகள் எப்படி இருந்தாலும் 'உயிர்களிடத்தில் அன்பும் கருணையும் காட்டி நமது மனிதத்தை நிலைநாட்டிட வேண்டும் (கதைகள் - 18, 28, 37) நமது கல்வியாளர்கள் முற்போக்குக் கல்விச் சிந்தனைகளை நமது இன்றைய மாணவ சமூகத்திற்கு உருவாக்க வேண்டும் (கதைகள் - 5, 20, 36, 38) இளைய சமுதாயத்திற்கு முதிர்ச்சியடையாப் பருவச் சிதைவுகள், இன்றைய இணைய வழித் தொடர்புகள், அறிவார்ந்த வாழ்க்கைப் பயணம் ஆகியவற்றிலான எச்சரிக்கை உணர்வுகள் மிக மிக அவசியம் (கதைகள் -14, 45). பிஞ்சுக் குழந்தைகள் நம் சமூக எதிர்காலத்தின் உயிர்நாடிகள் (கதை - 5, 7, 16, 24, 35, 38, 47). சமூக வேறுபாடுகளும் தீண்டாமை இழிசெயல்களும் அறிவார்ந்த சமூகத்தின் அடையாளங்கள் அல்ல (கதை - 8, 16, 33). காதல் என்பது நிரந்தரக் கண்ணீர் வாழ்விற்கானது அல்ல (கதை - 13, 23, 29, 40, 45). இவைகள் யாவும் ஒரு சில எடுத்துக்காட்டுகளே ஆகும்.

471 பக்கங்கள் கொண்ட இந்த முதல் தொகுதிக் கதைகள் அனைத்திலும் எழுத்தாளரது சரளமான தெளிந்த நடையும், உயிரோட்டமான 'நறுக்' 'சுருக்' என்ற உரையாடல்களும், ரத்தினச் சுருக்கமான சிறு சிறு பத்திகளிலான கதை சொல்லும் பாங்கும் (Presentation) வாசகரது மனப்பரப்பில் உவப்புடன் ஒன்றிப்போகின்றன. பல கதைகளில் அவர் கையாளும் பரவசமான நவீன உக்திகளும், சிந்தனைப் போக்குகளும், அவரது மிகப் பிரகாசமான எதிர்காலத்திற்குக் கட்டியம் கூறுகின்றன. எழுத்தாளர் சுரா தமிழ்ப் படைப்புலகின் நெடிய வரலாற்றில், ஒரு காத்திரமான நிலையை விரைவில் எட்டி விடுவார்.

●

கட்டுரையாளர்: ஓய்வு பெற்ற அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவன முதுநிலை விரிவுரையாளர்.

**புதிய வரவு**




விலை: ரூ. 210

## ஒரு மீசைக்காரனின் செய்தியறை

**சி.கணேசன்**

நூலாசியர் சி.கணேசன் ஒரு பத்திரிகை அலுவலகத்தில் பணியாற்றிய போது, கிடைத்த நேரிடை அனுபவங்களின் தொகுப்பே ஒரு மீசைக்காரனின் செய்தியறை என்னும் இந்த நாவல்

பொதுமக்கள்; அரசாங்கம், அரசியல்வாதிகள், அதிகாரிகள் என வெவ்வேறு சூழல்களில் இயங்கும் வெவ்வேறு வகை மனிதர்களோடு இவர் எப்படி பணியாற்றினர் என்பது இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நாவல், வாசிக்க சுவையானது.






# உலகத்துக்கே தொண்டாற்றும் கியூபா!

**சு.இராமசுப்பிரமணியன்**

தென் அமெரிக்கக்கண்டத்தில் உள்ள அனைத்து நாடுகள், கரீபியன் தீவு நாடுகள், வட அமெரிக்காவில் மெக்சிகோ, இரண்டு அமெரிக்கக் கண்டங்களையும் இணைக்கும் பகுதியில் அமைந்த மத்திய அமெரிக்க நாடுகள் உள்ளிட்ட 29 நாடுகள் ‘லத்தீன் அமெரிக்க நாடுகள்’ என்று அழைக்கப்படுகின்றன.

ஸ்பெயின் நாட்டிலிருந்து தனது கடற்பயணத்தைத் தொடங்கிய இத்தாலி நாட்டைச் சேர்ந்த கொலம்பஸ் 1498-இல் தென்அமெரிக்கக் கண்டத்தில் காலூன்றிய பிறகு, 15-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொடங்கி 18-ஆம் நூற்றாண்டு இறுதிவரையிலும் இந்த நாடுகள் அனைத்தும் ஸ்பெயின், போர்த்துக்கல் நாடுகளின் காலனிகளாக இருந்துள்ளன. அனைத்து நாடுகளிலும் மக்கள் பேசும் மொழியாக (Romance Language) லத்தீன்மொழி இருந்ததால், இவை லத்தீன் அமெரிக்க நாடுகள் என்று அடையாளப்படுத்தப்பட்டன. 19-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே இந்நாடுகளில் விடுதலைப்போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

மற்ற கண்டங்களைப் பற்றி அறிந்திருக்கும் அளவிற்கு, பொதுவாக, தென்அமெரிக்கக் கண்டத்தைப் பற்றியும் அங்குள்ள நாடுகளைப் பற்றியும் மக்கள் அறிந்திருக்கவில்லை என்று சொல்லலாம். அப்படிப்பட்ட லத்தீன் அமெரிக்க நாடுகள், அந்நாடுகளின் விடுதலைப் போராட்டங்கள், விடுதலைக்கானப் போராட்டங்களை முன்னெடுத்த விடுதலைப்போராளிகள், பொருளாதார வளர்ச்சி, அங்கு நிலவும் அரசியல் சூழல் போன்ற பல கூறுகளை, கடந்த இருபது

ஆண்டுகளாகத் தொடர்ந்து எழுதிவருபவர் தோழர் அமரந்த்தா. அவர் 2024 ஜனவரியில் வெளியிட்ட இரண்டு நூல்களில் ஒன்றுதான், 'காஸ்த்ரோவின் கூபாவும், லத்தீன் அமெரிக்க மார்க்சியமும்' என்னும் இந்நூல்.

கூப விடுதலைப் போராட்டத்தின் முன்னத்தி ஏரான ஹொசே மார்த்தியின் 150-வது பிறந்தநாள் கொண்டாட்டத்தை முன்வைத்து, 2003 ஜனவரியில் கூபாவுக்கு நேரில் செல்லும் வாய்ப்பும் அமரந்த்தாவிற்குக் கிட்டியிருக்கிறது. அதுசமயம் அவர் நேரில் கண்ட காட்சிகளையும், வாசித்து அறிந்த செய்திகளையும் இந்நூலின் வாயிலாக நம்மோடு பகிர்ந்துகொள்கிறார்.


இந்நூலில் பெரிதும் கூபா பற்றிய செய்திகளே பரவலாகப் பேசப்படுகின்றன. என்றாலும், கூபா பற்றிப் பேசும்போது, மற்ற லத்தீன் அமெரிக்க நாடுகளை, குறிப்பாக வெனிசுவேலா, சீலே, பெரூ போன்ற நாடுகளையும், அங்கு விடுதலைப்போராட்டங்களை முன்னெடுத்தவர்கள், ஒருங்கிணைத்தவர்களைப் பற்றிப்பேசாமல் கடந்துபோக முடியாது.

கரீபியன் கடலில் ஒரு சுண்டைக்காய்த் தீவுநாடான கூபா, எப்படி விடுதலை பெற்றது, விடுதலைப் பெற்ற பிறகும், உலக வல்லரக்கன் வட அமெரிக்காவால் கட்டவிழ்த்துவிடப்பட்ட ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சிகள், பரப்பப்பட்ட பொய்ச்செய்திகளோடு, தொற்றுநோய்க் கிருமிகளையும், பொருளாதாரத் தடைகளையும் ஃபிதல் காஸ்த்ரோ தலைமையில் கூபா எப்படி எதிர்கொண்டு வெற்றிகண்டது உள்ளிட்ட பல அரசியல், சமூக, பொருளாதாரச் செய்திகள் ஏராளமாகக் காணக்கிடைக்கின்றன.

கூபப்புரட்சிக்கு முதல் விதையை ஊன்றிய ஹொசே மார்த்தியைப் பற்றியதாக முதல் கட்டுரை அமைந்திருக்கிறது. கூபா என்று சொன்ன உடனேயே, ஃபிதல் காஸ்த்ரோ பெயர்தான் அனைவருடைய நினைவுக்கும் வரும். கூடவே சேகெவாரா பெயரும் நினைவுக்கு வரும். ஆனால், கூபாவின் 'தேசத்தந்தை' என்று போற்றப்படும் ஹொசே மார்த்தி, கார்ல் மார்க்ஸ் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தவர். கூபப்புரட்சிகரக் கட்சியை நிறுவி, போராளிகளை ஒருங்கிணைத்து, புரட்சிக்கான முன்னெடுப்புகளைக் கவனமாகவும், முறையாகவும் திட்டமிட்டவர் ஹொசே மார்த்தி. மாத்திரமல்ல, அனைத்து நடவடிக்கைகளையும் பின்வரும் சமூகத்திற்காக எழுத்தில் பதிவும் செய்திருக்கிறார். ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு. வட அமெரிக்காவின் போக்கு எப்படி இருக்கும் என்பதைச் சிந்தித்து, அதனை எப்படி முறியடிக்கவேண்டும் என்னும் வழிமுறைகளையும் கூறிச்சென்றிருக்கிறார்.

ஸ்பெயின் நாட்டிற்கு நாடுகடத்தப்பட்ட ஹொசே மார்த்தி, 42-ஆவது வயதில் மரணம் அடைகிறார். மரணத்திற்கு முதல்நாள் வரையிலும் இடைவிடாமல் எழுதிய எழுத்துகள், கூபப்புரட்சிக்குப் பிறகு, 27 தொகுதிகளாக வெளியிடப்பட்டு, மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டிருக்கின்றன.

ஸ்பானிய ஆட்சியாளர்களால் தேசவிரோதி என்று குற்றம்சாட்டப்பட்டு, கல்லுடைக்கும் தண்டனை வழங்கப்பட்டபோது, ஹொசே மார்த்திக்கு வயது 16 மட்டுமே. 1953, அவரது நூறாவது பிறந்த நாளில், சட்டம் பயின்றுகொண்டிருந்த மாணவர் ஃபிதல் காஸ்த்ரோ தலைமையில் ஆயிரக்கணக்கிலான மாணவர்கள், நள்ளிரவில் கைகளில் விளக்குடன், ஹொசே மார்த்தி கல்லுடைத்த இடத்திற்குப் பேரணியாகச்சென்று, கூபா விடுதலை பெறும்வரையிலும் ஓய்வதில்லை என்று சூளுரைத்திருக்கின்றனர்.




காஸ்த்ரோவின் கூபாவும் லத்தீன் அமெரிக்க மாரக்சியமும்
- அமரந்த்தா வெளியீடு: பன்மைவெளி
பக்கங்கள்: 260 | விலை: ரூ 250

கூபா விடுதலைபெற்ற உடன் செய்த முதல் காரியம், அனைத்து நிலத்தையும் அரசுடமை ஆக்கியது. கல்வியை அனைவருக்கும் இலவசம் ஆக்கியது. எங்கெல்லாம் படிக்கும் வயதில் குழந்தைகள் உண்டோ அங்கெல்லாம் பள்ளிகள் துவக்கப்பட்டன. மூன்றே ஆண்டுகளில் கூபாவை முழு எழுத்தறிவுபெற்ற நாடாக மாற்றியது, உலக சாதனை. கூபாவில் ஆரம்பப்பள்ளி தொடங்கி, பல்கலைக்கழகம் வரையிலும் மாணவர்கள் விவசாயத்தின் பல்வேறு நடவடிக்கைகளிலும் ஈடுபடுத்தப்படுகிறார்கள். இப்படியாக மாணவர்களும், விவசாயிகளும் ஒருங்கிணைக்கப்படுகிறார்கள்.

இந்நூலில் பதிவாகியிருக்கும் ஒரு சுவையான செய்தி. ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியரின் மாத வருவாயைப்போல் இரண்டு மடங்கு ஒரு விவசாயியின் வருமானமாக இருந்திருக்கிறது. ஒருசிலர் இதனை ஒரு குறையாக ஃபிதல் காஸ்த்ரோவிடம் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ‘ஏழை நாடுகளில் விவசாயிகள் ஒட்டிய வயிறுடனும், கோவணத்துடனும்தான் இருக்கின்றனர். நம் நாட்டுக்கு உணவளிக்கும் விவசாயிகள் வசதியாக இருக்கட்டும். அதற்கு எவ்விதக் கட்டுப்பாடும் விதிக்கப்போவதில்லை’ என்று மறுமொழி கூறியிருக்கிறார் ஃபிதல் காஸ்த்ரோ.

**"வரப்புயர நீர் உயரும்**
**நீர் உயர நெல் உயரும்**
**நெல் உயர குடி உயரும்**
**குடி உயர கோல் உயரும்**
**கோல் உயர கோன் உயர்வான்"**

என்னும் ஔவையின் பாடலைக் காஸ்த்ரோ படித்திருப்பாரோ!

ஆசிரியர்கள், மாணவர்கள், அரசு ஊழியர்கள் உள்ளிட்ட அனைவரும் தாங்கள் பெறும் ஊதியத்தில் ஒரு பகுதியை நாட்டிற்குத் திருப்பிச் செலுத்துகிறார்கள். அந்தப் பணம், மீண்டும் கல்விக்கும், உடல்நலத்திற்கும் செலவிடப்படுகிறது.

1959ஆம் ஆண்டு புரட்சி வெற்றிபெற்றபோது இருந்த காட்டின் பரப்பு 13.4%. அதுவே 2000 ஆண்டில் 21 % ஆகக்கூடியிருந்தது. (இந்தியாவும் சரி, தமிழ்நாடும் சரி காடுகளை அழித்து, அதன் பரப்பைத் தொடர்ந்து குறைத்துவரும் அரசுகளாக இருக்கின்றன என்னும் கசப்பான உண்மையையும் இங்கே சொல்லவேண்டியுள்ளது).

கெனேடிய ஆய்வாளர், ஆர்னால்ட் ஆகஸ்ட், ‘*Cuba and Its Neighbours; A democracy in Motion*’ என்று ஒரு நூலை 2013-இல் எழுதி வெளியிட்டிருக்கிறார். ஏழாண்டுகாலம் கூபாவில் தங்கியும், 15 ஆண்டுகாலம் ஆய்வுசெய்தும் அந்நூலை எழுதியிருக்கிறார். அந்நூலில், “கூபாவின் மக்களிடம் ஜனநாயகக் கருத்தியல் ஆழமாக வேரூன்றியுள்ளது என்னும் கருத்தைப் பதிவுசெய்திருக்கிறார். வடஅமெரிக்கா ஜனநாயக நாடு என்று சொல்லப்பட்டாலும், இரண்டு கட்சிகள் இருந்தாலும், அந்த இரண்டு கட்சிகளுமே கார்பொரேட் கைக்கூலிகளாகச் செயல்படுவதால் மக்களிடம் இறையாண்மை இல்லை. மாறாக, ஒரு கட்சி ஆட்சியே என்றாலும், கூபாவின் மக்களிடமே இறையாண்மை உள்ளது”

‘கூபாவின் மருத்துவ சர்வதேசியம்’ என்னும் கட்டுரை எத்தனையோ இன்னல்களுக்கு இடையிலும் மருத்துவத்துறையில் கூபா எப்படியெல்லாம் சாதித்து வருகிறது என்னும் நீண்ட பட்டியலைத் தருகிறது. கூபாவின் மருத்துவத்துறையும், அங்கு கண்டுபிடிக்கப்படும் மருந்துகளும், அங்கு பயின்ற மருத்துவர்களும் கூப நாட்டிற்கு மட்டுமே என்று இல்லாமல் உலகநாடுகள் அனைத்திற்குமானவையாக இருப்பதால் அத்தலைப்பு மிகவும் பொருத்தமுடையது.

திடீரெனப் பரவி உலகம் எங்கும் அச்சத்தை ஏற்படுத்திய கோவிட்-19 பெருந்தொற்றுக்காலத்தில் 67 உலக நாடுகளில், 37,000 கூப மருத்துவர்கள் மருத்துவ சேவையில் ஈடுபட்டு பல்லாயிரம் உயிர்களைக் காப்பாற்றியிருக்கிறார்கள். பொலீவியாவில் மூன்று லட்சம் பேருக்குக் கண்புரை அறுவைசிகிச்சை செய்திருக்கின்றனர். 1960-ஆம் ஆண்டு சீலேவில் ஆற்றல்மிக்க நிலநடுக்கம் ஏற்பட்டபோது, கூப மருத்துவர்கள் அங்கு சென்று மருத்துவம் செய்தார்கள். ஆப்பிரிக்காவில் மட்டுமே, இதுவரையிலும் 35 நாடுகளில் எட்டரை லட்சம் மக்களைக் கூப மருத்துவர்கள் காப்பாற்றியுள்ளனர். 1999ஆம் ஆண்டு ஹவானாவில் ‘லத்தீன் அமெரிக்க மருத்துவப் பள்ளியைத்’ தொடங்கி மாணவர்களுக்குக் கல்வியை இலவசமாகக் கொடுத்துவருகின்றனர். தங்கும் இடம், உணவு, உடை அனைத்தையும் கூப அரசு ஏற்கிறது.

முத்தாய்ப்பாக, 1985ஆம் ஆண்டு செர்னோபில் அணு உலை விபத்தில் பாதிக்கப்பட்ட 25,000 உக்ரேனியக் குழந்தைகளைக் கூபாவிற்குக் கொண்டுவந்து அவர்களுக்கு மருத்துவம் செய்திருக்கின்றனர். இப்படி ஒரு மனித நேயத்தை

வேறு எந்த ஒரு நாட்டிலும் காணமுடியாது. மொரோக்காவிலிருந்து இஸ்ரேலுக்கு அகதிகளாக வந்த ஒரு லட்சம் யூதக் குழந்தைகளை, சோதனை எலிகள்போல் கூண்டுகளில் அடைத்துக் கப்பல்களில் ஏற்றி அமெரிக்காவிற்குக் கொண்டுசென்று அணுக்கதிர்வீச்சு சோதனைக்கு உட்படுத்தினர் என்னும் மனிதாபிமானமற்ற அமெரிக்காவின் செயலை நீங்கள் அறிந்திருந்தால் மட்டுமே, கூப அரசின் மனிதாபிமானமும், சேவை உள்ளமும் உங்களுக்குப் புரியும்.

**‘இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண**

**நன்னயம் செய்து விடல்"**

என்னும் குறளுக்கு ஏற்ப அத்தனைவிதமான ஒடுக்குமுறைகளையும் தங்கள்மீது கட்டவிழ்த்துவிட்ட அமெரிக்காவின் நியூ ஆர்லியன்ஸ் நகரம் கெத்ரினா புயலால் பாதிக்கப்பட்டபோது, கூபா நட்புக்கரம் நீட்டியது. ஆனால், வெட்கப்பட்ட அமெரிக்க அதிபர் புஷ் அக்கரங்களைப் பற்றிக்கொள்ள மறுத்துவிட்டார். உலகில் உள்ள எந்த ஒரு நாட்டில் பேரவலம் நிகழும்போதும், தனது மருத்துவக்குழுவை அனுப்பிவைக்கிறது கூப அரசு. அந்தவிதத்தில், அம்மருத்துவக் குழுவிற்கு, ‘சர்வ தேச மருத்துவக் குழு’ என்னும் பெயரிடல் முற்றிலும் பொருத்தமே. அது மட்டுமின்றி, கூப ஆய்வாளர்கள் டெங்கு, கரோனா, தோல் புற்று, எயிட்ஸ் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கான மருந்துகளையும் கண்டுபிடித்துள்ளனர்.

கூபா, இன்றளவும் தனித்தன்மையோடு நிலைத்து நிற்பதற்கு, அந்நாட்டின் ஜனநாயகத்தைத் தாங்கிப்பிடிக்கும் தூண்களாக, கூப கம்யூனிஸ்ட் கட்சி, புரட்சிப்பாதுகாப்பு மக்கள்மன்றங்கள், தேசிய ஆயுதப்படை, கூபப்பெண்களின் கூட்டமைப்பு ஆகியவை விளங்குகின்றன.

கூபப் பெண்களில் 65 % பேர் தொழில்நுட்பக்கல்வி பெற்றவர்கள், விஞ்ஞானிகள், இராணுவ வீரர்கள், பத்திரிகையாளர்கள், ஆசிரியர்கள், அரசின் உயர்பதவி வகிப்பவர்கள். 21.5 % பெண்கள் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்களாக உள்ளனர். திருமணம், குழந்தைபெறுதல், குடும்பப் பராமரிப்பு ஆகியவை பெண்களின் கல்விக்கும், வேலைக்கும் குறுக்கே நிற்காத வகையில் தேவையான சமூக அமைப்புகள் உள்ளன.


சில செய்திகள் மீண்டும் மீண்டும் வருகின்றன. பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு என்பதால் அது தவிர்க்கமுடியாதது. கூபாவைப்பற்றி முழுமையாக அறிந்துகொள்ள விரும்பும் வாசகர்களுக்கு இந்நூல் பெரிதும் பயனுடையதாக இருக்கும்.

●

புதிய வரவு

## கலைஞரின் நெஞ்சுக்கு நீதியில் தன்னம்பிக்கைச் சிந்தனைகள்

மு.மாணிக்கம்




விலை: ரூ. 160

கலைஞரின் நெஞ்சுக்கு நீதியில் தன்னம்பிக்கைச் சிந்தனைகள் என்னும், இந்த நூலில் கலைஞரின் துணிவுமிக்க பொதுவாழ்வு, இலக்கியப் பணிகள், அரசியல் சாதனைகள் என அனைத்துக் கூறுகளும் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்துமே வாசிக்கிறவர்களுக்குத் தன்னம்பிக்கையை அளிப்பவைதான்!

கலைஞரைப் பற்றிய இந்த நூலை வாசித்தால், தமிழகத்தின் அரை நூற்றாண்டுக் கால வரலாற்றை எளிதில் புரிந்து கொள்ள முடியும்.


> மானுட உள்ளார்ந்திரங்களையும்,
> கெடுமதிப்போக்குகளையும்
> விசாரணைக்கு உட்படுத்திக்
> கதைகளாகச் சித்தரித்துக்
> காட்டி, வாசகர்களது
> சமூகப் பிரக்ஞைகளைக்
> கூர்மைப்படுத்துவதுதான்
> படைப்பிலக்கியத்தின்
> தலையாய பணியாகும்.

# கலைஞர்களுக்கு வருமானமும் போச்சு! மரியாதையும் போச்சு!!

பா.சாயாதேவி
முனைவர் து. வேணி

"சஞ்சாரம்" நாவலுக்காக 2018-ல் சாகித்திய அகாடமி விருது, மாக்சிம் கார்க்கி விருது, பர்தியா பாஷா பரிஷத் விருது போன்ற தமிழக அரசின் விருதுகள் உட்படப் பல அங்கீகாரங்களைப் பெற்றுள்ளார் எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன்.

ரத்தினமும் பக்கிரியும் இணைந்து நாதஸ்வரம் வாசிக்கின்றனர். ரத்தினம் மூத்தவர் திருமணமானவர்; பக்கிரி இளையவர் திருமணமாகாதவர். தனக்கு ஏற்படும் எல்லாவிதமான அவமானங்களையும் ரத்தினம் சகித்துக் கொள்பவர். ஆனால் பக்கிரி தனக்கு ஏற்படும் அவமானங்களை உடனடியாக நேர் செய்து விட விரும்புபவர். சாதிய நோக்கிலும் தான் அடையும் அவமானத்தை நேர்செய்ய நேர்கையில் சில உயிர்கள் பலியாவதற்குக் காரணமாகி விடுகின்றனர். இவர்கள் இருவரையும் காவல்துறை தேடுகிறது. பல ஊர்களுக்குத் தப்பியோடுகின்றனர். இறுதியில் அகப்படுகின்றனர். தண்டனை பெறுகின்றனர். இவர்கள் தலைமறைவாக வாழும் வாழ்க்கையின் வழியாக நாதஸ்வரக் கலையும் நாதஸ்வரத்தில் கோலோச்சிய கலைஞர்களும் அவர்களின் பெருமைமிகு வாழ்வும் காட்டப்படுகின்றன. முதூர், அரட்டானம், டெல்லி, கரிசங்குளம், உறங்காப்பட்டி, ஒதியூர், மருதூர், அருப்புக் கோட்டை, சிந்தேரி, கலிபோர்னியா கொடுமுடி, பனங்குளம், சென்னை, லண்டன், சோலையூர், காரியாப்பட்டி, பொம்மக்காபுரம், நாரைக் குளம், திருச்சுழி, நடுக்கோட்டை, கோயமுத்தூர், வேப்பங்காடு, புதுக்குடி, மதுரை, தொடுமாக்கல், தென்மலை, எனப் பல ஊர்களில் இந்த நாவலின் கதை நிகழ்கிறது.



### கலைஞர்களின் இயல்பு

நாதஸ்வரக் கலைஞர்களுக்கு சில குணாதிசயங்களும் பழக்க வழக்கங்களும் பொதுவாக உள்ளன. இக்கலைஞர்கள் மீசை வைத்துக் கொள்வது கிடையாது. உடை அலங்காரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள். சில்க் ஜிப்பா வேஷ்டி அணிவதுடன் தங்க முலாம் பூசப்பட்ட நகைகள், மோதிரங்கள் அணிந்து கொள்வர். நாயனம் வாசிப்பவர்கள் அவர்களுக்கான தோற்றத்தில் வாசிப்பதுதான் இயல்பாகும். இவர்கள் வெற்றிலை போடுபவர்களாகவும் மது அருந்துபவர்களாகவும் உள்ளனர் என்று சஞ்சாரம் நாவலிலும் சுட்டடப்படுகிறது. இந்நிலையை சஞ்சாரம் நாவலில் “எண்ணெய் தடவி வாரிய நீண்ட தலைமுடி, ஜிப்பாவும் வேஷ்டியும் அணிந்திருந்தார். இரண்டு கைகளிலும் மோதிரங்கள் மினுங்கின; எதுவும் தங்க மோதிரமில்லை. அலங்காரத்திற்காக வாங்கிய கல் மோதிரங்கள். ஜிப்பாவின் பையில் வெற்றிலையைச் சுருட்டி திணித்திருந்தான். (சஞ்சாரம்பக் 15) என்ற பகுதியின் மூலமாக அறிய முடிகிறது. நாதஸ்வரக் கலைஞர்கள் தங்களுக்கான தோற்றத்துடன்தான் இசைப்பர். இன்றைய காலங்களில் சில்க் ஜிப்பா அணியாமல் வேஷ்டி - சட்டை அணிவதுண்டு. அணிகலன்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆனால் இன்றும் வெற்றிலை போடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

### கலைஞர்களின் தொழில் நிலை

நாதஸ்வரக் கலையானது முந்தைய காலத்தில் மங்கள நிகழ்வுகளுக்கு முக்கியமான ஒன்றாகக் கருதப்பட்டது. சாதி வர்க்க நிலைப்பாடு மாறிய பின்பாக கலைஞர்கள் இழிவாக நடத்தப்பட்டனர். அவர்களுக்கு சரியான ஊதியம் கொடுக்காமலும் தொழிலாலும் கச்சேரிக்குக் கூப்பிடுவார்கள். அநாகரீகமான முறையில் நடந்து கொண்டும் அவமதித்துள்ளனர். இவற்றின் அடிப்படையில் உணரும் போது “முக்காலத்தைப் போல நிறைந்த வருமானம் இல்லையென்ற காரணங்காட்டிப் பல கோவில்களில் இவ்வித இசை மரபுகளைப் பரம்பரயாகக் காட்டிக் காத்து வந்த கலைஞர்களை வேலையிலிருந்து ஓய்வு பெறச் செய்வதோ அல்லது நீக்கம் செய்வதோ இயல்பாகிவிட்டது. (ஆலய வழிபாட்டில் இசை: பக் 21) என்ற நிலையைக் காணலாம். இவ்வாறாக சஞ்சாரம் நாவலிலும் தொழில் ஊதியத்தால் அவமதித்தல் முறையைக் காணலாம். திருவிழாவில் வாசிப்பதற்காக நாதஸ்வரக் கலைஞர்களை வரவழைத்தனர். ஊருக்குள் இரண்டு சாதியினருக்கு இடையில் சண்டை என்பது தெரியாமல் வாசித்த கலைஞர்களை அடித்தது மட்டுமல்லாமல், அவமதித்து அவர்களை ஊருக்கு வெளியே மரத்தில் கட்டிப் போட்டு அவமானப்படுத்தினர். அதிலிருந்து அவமானப்பட்டு உயிர்பிழைப்பதற்காகத் தப்பித்து ஓடினர். ஒரு கலைஞனுக்கு இவ்வகையான நிலை ஏற்படுதல் கூடாது என்ற நிலையை சஞ்சாரம் நாவலின் வழி ஆராயும் போது “நாயினக்கார நாயி எங்க வந்து திமிர காட்டுற என சிலர் ஆவேசமாகக் கத்தியபடியே இடையில் நுழைந்து தாங்களும் அடிக்க துவங்கினார்கள். பக்கிரி வலியைப் பொறுத்துக் கொண்டபடியே விழுந்து கிடந்தான்”. (சஞ்சாரம்: பக் 23) என்ற வரிகளால் அறியலாம். நாயனம் வாசிப்பவர்கள் அடித்ததை எதிர்த்துக் குரல் கொடுத்தற்காக அவர்களை இம்முறையில் நடத்தினர். மங்கல வாத்தியத்திற்காக மட்டும் இல்லாமல் ஊரில் பெரியோர்களாக மதிக்கக் கூடியவர்களை சிறப்பு செய்யவும் நாதஸ்வரம் வாசிக்கப்படுகிறது. உள்ளூரில் வாசிக்கும் போது கலைஞர்களுக்கு ஊதியமானது குறைவான முறையிலே இருக்கும். ஆதலால், சிலர் வெளிநாடுகளுக்குச் சென்று அவற்றின் மூலம் அதிகமான பணம் சம்பாதிக்கலாம் என்ற ஆசையில் செல்வர். இவற்றில் புரோக்கரின் மூலமாக செல்பவர்கள் ஏமாற்றப்பட்டு சம்பளம் குறைவாகவே கொடுக்கப்படும். சஞ்சாரம் நாவலிலும் லண்டனுக்கு அழைத்துச் செல்வதாக கூட்டிப்போய் அங்கேயும் அலைக்கழிக்கப்பட்டு சரியான ஊதியம் கிடைக்காமல் சொந்த ஊருக்கு எப்படியாவது போக வேண்டும் என்ற எண்ணத்திலே இருப்பதாகக் காட்டப்படுகிறது. இவற்றை நாவலில் கூறுகையில் “நாதஸ்வரம் வாசிக்கத் துவங்கினார்கள். ஆனால் விருந்திற்கு வந்திருந்த ஒருவர் கூட அதைக் கேட்டதாகத் தெரியவில்லை. நம்மை ஏன் இப்படி கூப்பிட்டு வந்து அவமானப்படுத்துகிறர்கள் என கோபமாக வந்தது. அதைக் காட்டிக் கொள்ளாமல் வாசித்தார்கள். (சஞ்சாரம்: பக்196) என்பவற்றால் அறியலாம்.

### தேர்தல் வருமானம்

தேர்தல் வருவதை எண்ணி அரசியல்வாதிகளைக் காட்டிலும் இசைக்கலைஞர்கள் அதனை ஆவலுடன் எதிர்ப்பார்பார்கள். ஏனென்றால், அந்தப் பொழுதில் தான் அவர்களுக்கு வேண்டிய அதிகமான வருமானம் கிடைப்பதும் அவர்கள் விரும்பியதை வேண்டியதை, வாங்கிட சாப்பிட முடியும் என்ற ஆசையில் அதனை எண்ணிக் காத்திருப்பார்கள். சஞ்சாரம் நாவலிலும் தேர்தல் வருவதை எண்ணிக் காத்திருப்பார்கள். தேர்தலை ஒட்டி

நாயனக்காரர்களை புக் செய்திருந்தார்கள். அவர்கள் தலைவர் நாமினேஷன் செய்ய வரும்போது வாசிக்க வேண்டும் என்று கூறியிருந்தார்கள். அவர்கள் தலைவர் வண்டி வந்தவுடன் வாசிக்க நினைத்த போது, வண்டி நிற்காமல் சென்றுவிட்டது. நாங்கள் வேகமாக வந்ததற்கு இவ்வளவுதான் மதிப்பா என்று எண்ணி காலை உணவு சாப்பிட சென்றிருந்தார்கள். அப்போது தலைவர் வண்டி கிளம்பியவுடன் ஒருவர் வந்து, 'எங்கே போய் தொலைஞ்சிங்க?' என்று திட்டினார். அன்றைய நாள் முழுவதும் ஒவ்வோர் இடமாக அலைய விட்டனர். மேலும் சஞ்சாரம் நாவலின் வழி நோக்குகையில் "அறிவு கெட்ட நாயி கொடுத்த காசை முழுங்கிட்டு ஏமாற்றப் பாக்குறயா? 'அடிக்காதீங்கண்ணே', 'செருப்பாலே அடிப்பேன் நாயே என தன் செருப்பை ஓங்கி அடித்தான் குமார்" (சஞ்சாரம். பக் 106] என்ற வரிகளால் அறியலாம். அரசியல்வாதிகள் கொடுத்த பணத்திற்காக இவ்வாறாக அவமானப்படுத்தப்பட்டார்கள். இன்றைய காலத்திலும் சாதி அடக்குமுறையால் அவமானப்படுத்தப்பட்டும் ஊதிய நிலையிலும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றனர்.

### கலைஞர்களுக்குக் கிடைத்த சன்மானங்கள்

இசைக்கலைஞன் வாசிக்கும் இடங்களுக்கு ஏற்ப சன்மானங்கள் கிடைக்கின்றன. இசைக்காக மடம் ஒன்று செயல்பட்டு இசையை அது இலவசமாகக் கற்றுக் கொடுப்பதாக நாவலில் சுட்டப்படுகிறது. முந்தைய காலங்களில் மடங்களின் மூலம் மாணவர்களுக்கு வேண்டிய கலைகளை இலவசமாகக் கற்றுக் கொடுத்தனர். சஞ்சாரம் நாவலில் கிராமத்தில் இசை வாசித்த போது "நாலைந்து படி குருணை அரிசி, ரெண்டு சுரைக்காய், ஒரு பெட்டி நிறைய கேப்பை, சோளம் எல்லாமும் கொடுத்து 'எங்களாலே முடிஞ்சது' என்று சொன்னார்கள்" (சஞ்சாரம் பக் 248) இவ்வாறு ஒவ்வொரு இடத்துக்கு ஏற்றாற் போன்று சன்மானம் வழங்கப்படும். பணக்காரக் குடும்பங்களாக இருந்தால் பணமும் அதனுடன் மாமிசமும் கொடுப்பர். இன்றைய காலத்தில் அவ்வாறான சன்மானம் என்பது கிடையாது. அதிகமான இடங்களில் ரேடியோவின் மூலமாகவே அனைத்து இசைக் கருவிகளையும் வாசிக்க வைக்கின்றனர். கலைஞர்களின் வாழ்வானது இன்னல்கள் நிறைந்தவையாக உள்ளன.

### காலை மாற்றத்தால் நிகழும் கொடுமைகள்

கோயில் திருவிழாவிற்கு முதன்மையாக இருந்தவர்கள் இன்று கரகாட்டத்திற்கு வாசிக்கச் சென்று விடுகின்றனர். வேலைக்கு ஏற்ற சரியான ஊதியம் இல்லாததால் பரம்பரைத் தொழிலை விட்டு வேறு வேலைக்குச் செல்கின்றனர். கலைஞர்களுக்கான மரியாதை கிடைப்பதில்லை. சமூகத்தில் தாழ்ந்த சாதியினர் என்ற அடிப்படையில் ஒதுக்கி வைக்கப்படுகின்றனர். கால மாற்றத்தில் பல இசைக்கருவிகள் தோன்றிய நிலையில் நாதஸ்வரத்தின் மகிமை குறைந்து வரும் நிலையே சஞ்சாரம் நாவலின் வழி பார்க்கையில் இறுதியில் கொடுமுடியில் ரத்தினமும் பக்கிரியும் போலீசாரால் கைது செய்யப்படுகின்றனர். இவற்றை நாவலின் வழி நோக்கும் போது "முகத்தை இயல்பாக வைத்துக் கொண்டு எதுவும் தெரியாதவன் போல் 'என்ன விஷயம்?' என்று கேட்டான் பக்கிரி" வழி நோக்கும் போது "ரத்தினம் நடந்த எல்லாத்தையும் ஒத்துக்கிட்டாப்ல உன்னை அரஸ்ட் பண்ணி கூட்டிக்கிட்டுப் போக வந்திருக்கோம்" என்றான் போலீஸ்காரன்.

"நீ கொட்டகைக்கு ஏன் தீ வச்?

"எதுக்குடா உனக்கு இந்த வேண்டாத வேலை"

"சோற்றுல உப்பு போட்டுத் திங்குறேன்ல அதான்" (சஞ்சாரம்: பக்373) இந்த வரிகள் மூலம் அவர் உணர்வுகள் மற்றும் மனவேதனையை அறிய முடிகிறது.

### துணை நூற்பட்டியல்


- முதன்மைச் சான்று, எஸ். ராமகிருஷ்ணன் : சஞ்சாரம் 2017 இரண்டாம் பதிப்பு, தேசாந்திரி பதிப்பகம், சென்னை.
- பி.எம். சுந்தரம், ஆலய வழிப்பாட்டில் இசை 1990, முதற் பதிப்பு இசைத்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
- டாக்டர் பி.எம் சுந்தரம்: மங்கல இசை மன்னர்கள் 2001, முதற்பதிப்பு தியாகராய நகர், சென்னை.
- மாணிக்கவாசகர்: திருவாசகம் 2021 முதற்பதிப்பு, பிரேமா பிரசுரம்,
- இராச வசந்த குமார் : தேவாரம் முதற்பதிப்பு 2014, பன்னிரு திருமுறை ஆய்வு மையம், கற்பகம் பல்கலைக்கழகம், கோவை.


●


கட்டுரையாளர்கள்:


ஆய்வாளர்: பா.சாயாதேவி

முழு நேரமுனைவர் பட்ட ஆய்வாளர்

பெரியார் கலைக் கல்லூரி, கடலூர்

நெறியாளர்: முனைவர் து. வேணி

தமிழ்த்துறை, பெரியார் கலைக் கல்லூரி, கடலூர்



Article

# Division of Labour among Capitalists

*Marx's analysis shows how these forms of capital emerge from the division of labor within capitalism.*

In Capital Volume 3, Marx analyzes various forms of capital that arise from the division of industrial capital into specialized functions. Below are the definitions and distinctions:

**1. Commercial Capital (or Commodity-Dealing Capital)**

- Definition: A portion of total capital that is specialized in the circulation process, handling the buying and selling of commodities. It does not produce surplus value but helps realize it by reducing circulation costs and time.
- Role: Separates from industrial capital to specialize in selling commodities, allowing industrial capitalists to focus on production.
- Profit Source: Gains a share of surplus value (as commercial profit) by selling commodities at their production price (cost price + average profit).

Quotes from Capital Volume 3 (highlights added, pdf page numbers)

**M.S.Kumar**

"The movements of commodity-capital have been analysed in Book II. To take the total capital of society, one part of it – always made up of different elements and even changing in magnitude – always exists in the form of commodities on the market, to be converted into money. Another part exists on the market in the form of money, to be converted into commodities. It is always in the process of this transition, of this formal metamorphosis. Inasmuch as **this function of capital in the process of circulation is at all set apart as a special function of a special capital, as a function established by virtue of the division of labour to a special group of capitalists, commodity-capital becomes commercial capital.**" (page 182)

"Commercial capital is nothing but a transmuted form of a part of this capital of circulation constantly to be found in the market, ever in the process of its metamorphosis, and **always encompassed by the sphere of circulation**." (page 183)

"**Commercial capital is, therefore, nothing but the producer's commodity–capital** which has to undergo the process of conversion into money – to perform its function of commodity-capital on the market – the only difference being that instead of representing an incidental function of the producer, it is now the exclusive operation of a special kind of capitalist, the merchant, and is set apart as the business of a special investment of capital." (page 184)


"So long and so far as commercial capital exists in the form of commodity-capital, it is obviously nothing else – from the standpoint of the reproduction process of the total social capital – but a portion of industrial capital in the market in process of metamorphosis, which exists and functions as commodity-capital. It is therefore only the money-capital advanced by the merchant which is exclusively destined for purchase and sale and for this reason **never assumes any other form but that of commodity-capital and money-capital, never that of productive capital, and is always confined to the sphere of circulation of capital** – it is only this money-capital which is now to be regarded with reference to the entire reproduction process of capital. (page 186)

**2. Money-Dealing Capital**

- Definition: A fraction of capital that manages the technical operations of money circulation, such as book-keeping, cash handling, and foreign exchange.
- Role: Facilitates monetary transactions for industrial and commercial capitalists, reducing the costs and labor associated with money management.
- Profit Source: Charges fees for services rather than directly appropriating surplus value. It is distinct from interest-bearing capital.

**3. Merchant's Capital (a broader term)**

- Definition: An umbrella term encompassing both Commercial Capital (commodity-trading) and Money-Dealing Capital (financial operations).
- Historical Context: Pre-dates industrial capitalism (e.g., medieval merchants) but under capitalism, it becomes a subordinated function of industrial capital.
-



Difference from Industrial Capital: Does not produce value or surplus value but assists in its realization.

**4. Interest-Bearing Capital**

- Definition: Money capital loaned out at interest, appearing as capital that "begets more capital" (M → M′) without engaging in production or commerce.
- Role: The lender (e.g., a bank) temporarily transfers capital to a borrower (industrialist, merchant, or speculator) in exchange for interest.
- Source of Interest: Derived from surplus value produced in production. The borrower pays interest from their profits.
- Fetishism: Appears as if money itself generates value, obscuring the exploitation in production.

**5. Bill Discounting vs. Advancing (Lending) Capital**

- Bill Discounting:
    - o A merchant or industrialist sells a bill of exchange (a promise of future payment) to a bank at a discount (for less than face value).
    - o The bank pays the capitalist immediately, then collects the full amount later.
    - o Essentially a form of short-term credit, where the discount represents interest.
- Advancing (Lending) Capital:
    - o Direct loans (e.g., bank loans) where money is lent for a fixed period at an agreed interest rate.
    - o Unlike discounting, this involves an explicit lending contract rather than purchasing a commercial bill.

**Key Difference:**

- Bill discounting is tied to a specific commercial transaction (a bill of exchange from commodity trade).
- Advancing capital is a general loan not necessarily linked to a particular sale or purchase.

Marx's analysis shows how these forms of capital emerge from the division of labor within capitalism, each playing a role in the circulation and distribution of surplus value while obscuring its origins in exploitation.

●

**புதிய வரவு**





விலை: ரூ. 300

## கடவுளின் தடம்

ப.பரமசிவம்

சமுதாயம் மாற்றம் என்பது மிக அடிப்படையானது. அப்படி மாற்றத்துக்கான இயக்கங்களில் மக்கள் ஈடுபடுவதைத் தடுக்க வேண்டும், அவர்களை அந்தப் போக்கிலிருந்து மடை மாற்றம் செய்ய வேண்டும் என்னும் நோக்கத்தில் ஆளும் வர்க்கங்கள். மக்களின் சிந்தனையை மழுங்கடித்து, ஆளும் வர்க்கங்களின் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ளச் செய்ய சமய நிறுவனங்களைப் பயன்படுத்தி வருகின்றன. இந்நிலையில், சமுதாயத்தில் 'கடவுள்' என்னும் கூறு எப்படி செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்று விளக்குகிறது, தோழர் ப.பரமசிவம் எழுதியுள்ள 'கடவுளின் தடம்' என்னும் இந்த நூல்.

# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடுகள்





(12 தொகுதிகள்)

**ரூ 4285/-**





(2 தொகுதிகள்)

**ரூ 1000/-**




(4 தொகுதிகள்)

**ரூ 1750/-**




(6 தொகுதிகள்)

**ரூ 2200/-**

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி,சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410 | www.ncbhpublisher.in | info@ncbh.in


**நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் அனைத்து கிளைகளிலும் மற்றும் புத்தகக் கண்காட்சி அரங்குகளிலும் கிடைக்கும்.**

Published by **Shanmugam Saravanan** on behalf of **New Century Reader's Sangam** at 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014 and Printed by **A.Sivakumar** at **Pavai Printers (P) Ltd.,** 16 (142), Jani Jhan Khan Road, Royapettah, Chennai - 600 014. Editor: **T.Stalin Gunasekaran**

Posted at Egmore RMS, Pathirika Channel, Chennai - 08.
New Centurian Ungal Noolagam (Tamil English - Bilingual Monthly)
Registered with RNI No :TNBIL/2009/28728.
Postal Reg. No. TN/CH(C)/601/2025-2027. WPP No: TN/PMG(CCR)WPP-673/2025-2027
Date of publication: 1 Week of every month,Posted b/w 1-7 every month
If undelivered, please return to: New Centurian Ungal Noolagam, 16 (142), Jani Jhan khan road, Royapettah, Chennai - 14.

தமிழ் வளர்ச்சித் துறை • நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

# அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள்




தமிழ்நாடு அரசின்
**மக்கள் பதிப்பு**
**100**
தொகுதிகள்

**27** தொகுதிகள்
தற்போது விற்பனையில்

8500 பக்கங்கள்
**ரூ 2700/-**
27 தொகுதிகளும் சேர்த்து

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
41-பி,சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 050.
☎ 044 - 26251968, 26258410, | www.ncbhpublisher.in | email: info@ncbh.in